www.tamilarangam.net

# பறை

2008 முழக்கம் 1



**தோன்றி வளர்ந்து சிதைந்து மறைந்து மறுபடியும் மறுபடியும் புதியன தோன்றும்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பறை



**தோ**ழமைக்குரியவர்களே!

*நீண்ட இடைவெளிக்குப் பின் மீண்டும் உங்களிடம்...*

*இந்த இடைவெளியினை மறைந்த தோழர் கலைச்செல்வன் ஒரு கோமா நிலையென்றார். இன்று மீண்டும் உயிர்ப்புடன் வெளிவருகிறது என்றால் பறைக்கு பலர் மத்தியிலும் இது வரை இருந்த ஆவலும், எதிர்பார்ப்பும் மேலும் அதற்கான தேவையும் தான்.*

*பறையின் தொடர்ச்சியையும், கிரமத்தையும் பாதித்த அரசியல் நெருக்கடிகள் எமக்கு தகுந்த பாடங்களையும் புகட்டியிருக்கிறது. இனி அதன் தொடர்ச்சிக்கு வாசகர்கள் தமது ஆதரவைத் தருவார்கள் என்று நம்புகிறோம். பறையின் புதிய குழு புது உற்சாகத்துடன் அவரவர் நாடுகளிலும் இருந்து செயற்படுவார்கள். பறை ஒரு சஞ்சிகை என்கிற நிலையினைத் தாண்டி அதற்கப்பாலும் அதனை எடுத்துச் செல்வதே அதன் நோக்கம். நோர்வே சுதந்திர ஊடகம் அமைப்பினை பறையின் முன்னணி அமைப்பாக உருவாக்கிக்கொண்டதும் அந்த நோக்கத்திற்காகவே.*

*ஜனநாயகம், சுதந்திரம், சமத்துவம் என்கிற அடிப்படை விடயத்தில் உறுதியாக பறை இயங்கும். கூடவே பேசாப்பொருளை பேசுபொருளாக்குவதும் பறையின் அடிப்படை உள்ளடக்கமாக இருக்கும்.*

*மொத்தத்தில் குரலற்றோருக்கான குரலாக* (Voice for voiceless) *அது இருக்கும்.*

*மாக்சியம், தேசியம், பெண்ணியம், தலித்தியம், சூழலியல், சர்வதேசியம், புலம்பெயர் என்கிற தலைப்புகளில் அதிக அக்கறை காட்டும் பறை.*

*போர்நிறுத்த ஒப்பந்தத்தின் ஒருதலைபட்ச முறிவு, போரின் ஆரம்பம் மற்றும் இன்றைய உக்கிரம், நோர்வேயின் பின்வாங்கல், மக்களின் அவலம், சர்வதேசத்தின் மௌனம், ஈழத்தமிழர்களுக்கு ஆதரவான தமிழக மக்களின் எழுச்சி என்பன இன்றைய பேசுபொருளாகிவிட்டிருக்கிறது. அடுத்த இதழ்களில் அவை குறித்த காத்திரமான கட்டுரைகள் இடம்பெறும் என்பதை வாசகர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறோம்.*

**இந்த இதழில்**

*இந்த இதழில் சிங்கள சாதியமைப்பு பற்றிய கட்டுரைத் தொடர் ஆரம்பமாகிறது. சிங்கள சாதியமைப்பு குறித்து வெளியாக இருக்கிற நூலின் அத்தியாயங்களே இவ்வாறு பறையில் தனித்தனியாக வெளியாகிறது. முந்தி பிறந்து பிந்தியும் வாழும் தமிழ் சாதியமைப்பு குறித்து நாம் பலவற்றை அறிந்திருந்த போதும், பிந்தி பிறந்து முந்தி இறக்கும் சிங்கள சாதியமைப்பு இங்கு ஆராயப்படுவதன் நோக்கம், அது சிங்கள பௌத்த பேரினவாத உருவாக்கத்திலும், வியாபகத்திலும் செலுத்தியுள்ள தாக்கத்தை ஆராய்வதற்காகத்தான் கூடவே தமிழ்ச் சூழலில் இது வரை சிங்கள சாதியமைப்பு குறித்த எந்த ஆய்வும் வெளிவந்ததில்லை. மேம்போக்காக சாதியம் குறித்த கட்டுரைகளில் சில வரிகளாக மட்டுமே வந்துபோயிருக்கின்றன.*

(தொடர்ச்சி இறுதிப்பக்கம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உள்ளே...


- **சிங்கள சாதியமைப்பை விளங்கிக்கொள்ளல்**
  *என்.சரவணன்* ........ 4
- **பொருளாதார நெருக்கடியும் பொருளீட்டும் பொறுக்கிகளும்**
  *கலையரசன்* ........ 9
- **வரி மங்குகிற நினைவு**
  *தில்லை* ........ 15
- **கருப்பு நிறமும் எதிர் கலாசாரமும்**
  *கல்பனா* ........ 16
- **போரின் கருவியாக பாலியல் வல்லுறவு**
  *என்.சரவணன்* ........ 18

**கோணேஸ்வரி கவிதை**
**கற்பு-ஒழுக்கம்-பாலுறவு-என்.சரவணன்**
**யுத்த காலங்களில் பெண்கள் - பெரியார்** ........ 30

- **விதைத்தவைகள்**
  *கலா* ........ 33
- **பெட்டை முடிச்சு**
  *தில்லை* ........ 34
- **நினைவில் - தோழர் பொன் கந்தையா**
  *கரவைதாசன்* ........ 35
- **இலக்கியச் சந்திப்பு புகைப்படங்கள்** ........ 43
- **புலப்பெயர்ந்த இலஙகையர்களுக்கான இணையம் INSD - மாநாட்டு புகைப்படங்கள்**
  *என்.சரவணன்* ........ 44
- *மார்க்சியமும் தேசியப் பிரச்சினையும்*
  *ரெஜி டெப்ரேவுடனான செவ்வி — மொழிபெயர்ப்பு — வளர்மதி* ........ 45




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிங்கள சாதியமைப்பு விவாதங்களில்...

என்.சரவணன்

**இலங்கையில்** முரண்பாடுகளின் நிரல்படுத்தலின் போது தமிழ்த் தேசப்போராட்டமானது முதன்மை பெற்றதன் பின் ஏனைய சமூக முரண்பாடுகள் அதன் பின்னர் நிரற்படுத்தலின் போது பின்னுக்குத் தள்ளப்படவும் செய்தன.

எனவே பெருங்கதையாடலாக தமிழ்த்தேசப் போராட்டத்தோடு மையப்பட்ட கருத்தாடல்கள் அமைந்தன. அவ்வாறு நிரல் ஒழுங்கில் பின்னுக்குத்தள்ளப்பட்டவற்றுள் வர்க்க மற்றும் பெண்களின் பிரச்சினைகள், சாதியப் பிரச்சினைகள் என்பனவும் முக்கியமாக அடங்குகின்றன. இந்த நிலையில் சாதியம் குறித்த போதிய ஆய்வுகள், விவாதங்கள் தமிழ்ச் சூழலில் அருகி வருவதையும் இனங்காணலாம்.

சிங்கள சிவில் சமூக கட்டமைப்பில் தமிழ்ச் சமூகம் அளவுக்கு இறுக்கமான சாதிய கட்டமைப்பு மோசமாக இல்லாவிட்டாலும் அங்கு பல்வேறு ஆய்வுகள் வெளிவந்தவண்ணம் உள்ளன. குறிப்பாக தேர்தற் காலங்களில் சிங்களச் சூழலில் சாதியம் தலைதூக்குவதைப் பற்றி பல்வேறு கட்டுரைகள் வெளிவரும். தேர்தல் ஆரவாரங்களின் போது அது அதிகமாக தலைகாட்டத் தொடங்கும்.

சிங்கள சாதிய கட்டமைப்பு குறித்த ஆய்வுகள் 15ஆம் நூற்றாண்டிலேயே காணக்கிடைக்கின்ற போதும் இந்த 20ஆம் நூற்றாண்டில் அதுவும் குறிப்பாக 1971இல் ஏற்பட்ட ஜே.வி.பி. கிளர்ச்சியைத் தொடர்ந்து சாதியம் குறித்த ஆய்வுகள் பல கோணங்களில் பல ஆய்வுகளாக வெளிவரத் தொடங்கின. 71 கிளர்ச்சிக்கு காரணமான அம்சங்களில் சாதிய பிரச்சினை முக்கியமான பாத்திரமாற்றியது என்பதை பல ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியிருக்கின்றனர். 71 கிளர்ச்சியின் பின் அது பற்றிய புலனாய்வுப் பணிகளில் ஈடுபட்ட அரச தரப்பினர் கைது செய்யப்பட்டவர்கள், மற்றும் கொல்லப்பட்ட இளைஞர்களிடமிருந்து சாதியவாரியாக தரவுகளை திரட்டியதும் அதன் காரணமாகத் தான். இந்தத் தரவுகள் பின்னர் பல ஆய்வுகளுக்கு மூல

**1970இல் இலங்கையில் சாதியவாரியான கணக்கெடுப்பு**

| இனம் | சாதிப் பெயர் | மக்கட் தொகை 000 | சிங்கள மக்கட் தொகையில் | மொத்த சனத் தொகையில் |
|---|---|---|---|---|
| சிங்களம் | கொவிகம | 4.50 | 50.56 | 36.0 |
| | கராவ /சலாகம/ துராவ | 0.80 | 8.98 | 6.4 |
| | பத்கம / வகும்புர | 3.00 | 33.70 | 24.0 |
| | வேறு | 0.60 | 6.74 | 4.8 |
| தமிழ் | | 1.41 | | 11.2 |
| முஸ்லிம்/மலே | | 0.75 | | 6.0 |
| வேறு சிங்கள | | 0.05 | | 0.4 |
| இந்தியத் தமிழர் | | 1.40 | | 11.2 |

ஆதாரம்: janice jiggins, *Caste and the Family in the Politics of the Sinhlese, P 35*

www.tamilarangam.net

ஆதாரங்களாக அமைந்தன.

71 கிளர்ச்சியில் ஜே.வி.பி.யின் படைத் துறையின் ஸ்தாபகரும், முக்கிய தலைவர்களில் ஒருவரும் இன்று வெளிவந்து கொண்டிருக்கும் மாற்றுப் பத்திரிகைகளில் ஒன்றான "ராவய"வின் ஆசிரியருமான விக்டர் ஐவன் சிங்கள சாதிய கட்டமைப்பு குறித்து இலங்கையில் பல ஆய்வுகளைச் செய்திருப்பவர். அது மட்டுமன்றி இலங்கையின் அரசியலில் எந்த பிரதான நிகழ்வுகளிலும் அதில் உள்ள சாதியத்தின் பங்களிப்பைப் பற்றி தேடித்துருவுபவர்.

இலங்கையில் நிலவுகின்ற சாதிய அமைப்பு முறையானது சிக்கல் வாய்ந்தது. வடக்கு கிழக்குச் சூழலில் நிலவுகின்ற சாதியம், இந்திய வம்சாவழியினர் மத்தியில் நிலவி வரும் சாதியம், மற்றும் சிங்கள சமூகத்தினர் மத்தியில் நிலவுகின்ற சாதியம் ஆகிய மூன்றுவித தமக்கே உரிய கட்டமைப்பினை கொண்டிருக்கிறது. இவற்றுக்கிடையே உறவுகளும், முரண்பாடுகளும் உண்டு. இவற்றுக்கென்று தனியான பண்புகள் வடிவங்கள் உண்டு. சாதியப் படிநிலை ஒழுங்கிலும் கூட ஏகப்பட்ட வித்தியாசங்கள் உண்டு.

சாதியம் என்பது பிறப்பால் தீர்மானிக்கப்படுவது, அகமணமுறை, சாதிய ரீதியிலான தொழிற்பிரிவினை, அதிகாரப்படிநிலையமப்பு, அடையாளப்படுத்தலுக்கான காரணி ஏன் சில சாதிகளுக்கான தீண்டாமை போன்றன கூட சிங்கள சாதியமைப்பில் காணலாம்.

ஆனால் இந்திய சாதிய கட்டமைப்பு மற்றும் வடகிழக்குக்குள் நிலவுகின்ற சாதிய கட்டமைப்புக்குள் நிலவுகின்ற அதிகாரப் படிநிலை ஒழுங்கு (நிரலொழுங்கு) போல சிங்கள சாதிய கட்டமைப்பில் இல்லை. இங்கு அது மிகவும் சிக்கல் வாய்ந்தது, தவிரவும் சில சாதிகளுக்கு சமமான வேறு சாதிகளையும் இதில் காண முடியும்.

பௌத்த சித்தாந்தத்தைப் பொறுத்தளவில் அடிப்படையில் அது சாதியத்துக்கு எதிரான ஒன்று. புத்தரின் போதனைகள் பல சாதிய எதிர்ப்புகளைக் கொண்டவை. "வசல சூத்திரய" எனும் புத்தரின் போதனையானது சாதியத்தைக் கடுமையாக சாடும் ஒன்று. இலங்கை அரசர்களுக்கும் இந்திய அரசர்களுக்குமிடையில் ஏற்பட்ட உறவுகள், ஆக்கிரமிப்புகள், என்பனவற்றுக்கூடாகவே இந்திய சாதியம் சிங்கள சமூகத்தவரிடமும் மெல்ல மெல்ல நிறுவப்பட்டதாக பல்வேறு ஆய்வாளர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர். சிங்கள சமூகத்தில் இச்சாதிய கட்டமைப்புக்கு தோதான படிமங்கள் அதன் கட்டமைப்பில் பிறக்கவில்லை. ஆனால் இந்த சாதிய கட்டமைப்பை நிலைநிறுத்துவதை அன்றைய அரசர்களும் நிலப்பிரபுத்துவ சக்திகளும் சாதகமாகக் கருதினர். (இலங்கைக்கு

**இலங்கையின் சிங்கள சாதியத்தைப் பற்றிய மிகவும் பழமைவாய்ந்த நூல் என கருதப்படுகின்ற "ஜனவங்சய" வில் குறிப்பிடப்பட்டுள்ள 26 சாதிகளும் அவற்றின் தொழிற்பிரிவினைகளும்**


| சாதியின் பெயர் | வேறு பெயர்கள் | தொழிற் பிரிவினை |
|---|---|---|
| 1. கொவியோ | ஹந்துருவோ | விவசாயம் |
| 2. பேசகாரயோ | சலாகம, ஹாலி | நெசவு |
| 3. கம்புரோ | நவந்தன்னோ, கல்லந்தோ | தட்டார், பொற்கொல்லர் |
| 4. வடுவோ | வடுவோ | தச்சன், கொல்லர் |
| 5. ஹன்னாலி | | தையல் |
| 6. ரதவு | | சலவை |
| 7. எம்பட்டயோ | | முடிதிருத்தல் |
| 8. சொம்மன்யோ | | தோல் பதனிடுவது |
| 9. துராவோ | ராமதின்னோ | கள் இறக்குபவர் |
| 10. கும்பகாரயோ | படகெலயோ | மட்பாண்டம் செய்பவர் |
| 11. கராவோ | | மீன்பிடி |
| 12. வெத்தோ | | வேடுவம் |
| 13. பெரவாயோ | நெக்கதியோ | பறையடித்தல் |
| 14. ஹக்குரோ | | கருப்பட்டி செய்வோர் |
| 15. குண்ணோ | | சுண்ணாம்பு பதனிடல் |
| 16 பன்னயோ | | புல்வெட்டுவோர் |
| 17 யமன்கோ | | இரும்புக்கொல்லர் |
| 18 வெல்வடுவோ | | கதிரை பின்னுவோர் |
| 19 கஹாலயோ | | "கீழ்த்தர" வேலை புரிவோர் |
| 20 பதுவோ | | பல்லக்கு தூக்குவோர் |
| 21 மாலாகாரயோ | | பூத்தொடுத்தல் |
| 22 கின்னரயோ | | பாய் பின்னுவோர் |
| 23 ரொடியோ | | கயிறு பின்னுவோர் |
| 24 ஒலியோ | | நடனமாடுவோர் |
| 25 இந்திரஜாலகயோ | | |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

**பௌத்த கராவ சாதியினரின் கொடி**



"Sri Lanka Flags"-Edith M.G.Fernando (Unique memorials of Heraldry)

**கத்தோலிக்க கராவ சாதியினரின் கொடி**



"Sinhalese Banners and Standards" By Edward W.Perara -1916

*இந்தியாவிலிருந்து தோட்டத் தொழிலாளர்களை இறக்குமதி செய்த போது ஆங்கிலேயரும் தமது நிர்வாகத்தை செவ்வனே நடாத்த அங்கிருந்த சாதிய கட்டமைப்பை அப்படியே தக்க வைப்பது தமது ஆட்சியதிகாரத்துக்கு சாதகமானது என கருதியிருந்ததும் இந்த வகையில் தான்) ஏனெனில் ஏலவே உள்ள அதன் படிநிலை கட்டமைப்பானது தமது நிர்வாகத்துக்கு சாதகமானது என கருதினர். இலங்கையில் பின் வந்த பல பௌத்த துறவிகள் சாதியத்தையும் சிங்கள பௌத்த கட்டமைப்போடு இணைத்து இலக்கியங்கள், மற்றும் ஒழுக்கக் கோவைகளை அமைத்துக் கொண்டனர். இவை தான் பின்னர் சாதிய கட்டமைப்புக்கு நிறுவன வடிவம் கொடுப்பதில் பங்காற்றின. கண்டிய ராச்சிய காலகட்டத்தின் கீழ் அமைந்த நிலப்பிரபுத்துவ கட்டமைப்பின் கீழ் தான் சிங்கள சாதியம் வலுப்பெற்றதாக ஆய்வாளர்கள் பலர் சுட்டிக்காட்டுகின்றனர்.*

*பெண்களுக்கு எதிராகவும், அடிமட்ட தொழில்களைப் புரிந்த விளிம்புநிலையினருக்கு எதிராகவும் சாதிய ஒழுக்கக் கோவைகளை "பௌத்த முலாம் பூசி" அளித்ததில் பௌத்த மறுமலர்ச்சிக்கு வித்திட்டவராக கருதப்படும் அநகாரிக்க தர்மபாலவின் பாத்திரம் முக்கியமானது.*

*நாவலர் சைவ சித்தாந்த ஒழுக்கக் கோவையை நிறுவுகின்ற பணியைச் செய்கின்ற போது பெண்கள் குறித்தும், ஒடுக்கப்பட்ட சாதியினருக்கு எதிராகவும் மோசமான ஒழுக்க விதிகளுக்கு ஒப்பானவற்றை அநகாரிக்க தர்மபாலவின் ஒழுக்கக்கோவையிலும் காணலாம். (இது குறித்து பின்னர் தனியாக பார்க்கலாம்.)*

*மலைநாட்டுச் சிங்கள சாதிய கட்டமைப்பை விட கரையோரச் சிங்கள சாதியக் கட்டமைப்பு நெகிழ்ச்சியானது. ஏனெனில் காலனித்துவ ஆக்கிரமிப்பின் கீழ் கத்தோலிக்க மதத்தின் செல்வாக்கு இதில் குறிப்பான மாற்றங்களை ஏற்படுத்தின. என்றாலும் சாதியத்தின் பண்பை அப்படியே குலைக்காமல் அதன் வடிவத்தில் மாற்றங்களைக் கொண்டு வந்திருக்கின்றன. காலனித்துவ சக்திகளின் முதல் ஆக்கிரமிப்பாகிய கரையோரங்களில் இருந்து வந்த கராவ (தமிழில் கரையார் சாதியையொத்த மீனவத் தொழிலைச் சார்ந்தோர்) சாதியானது கத்தோலிக்க மதச் செல்வாக்கின் பின் "கத்தோலிக்க கராவ", "பௌத்த கராவ" என்கிற பிரிவுகளாக தம்மை அடையாளப்படுத்துகின்ற போக்கெல்லாம் இருக்கின்றன. சிங்கள சமூகத்தில் பிரதான இடத்தையும், பெரும்பாலானவர்களாகவும், ஆதிக்க சாதியாகவும் உள்ள கொவிகம (விவசாய நிலப்பிரபுத்துவத்தைச் சார்ந்த-தமிழ்ச் சூழலில் வெள்ளாளர் சாதிக்கு ஒப்பானவர்கள்) சாதி மற்றும் கராவ சாதி போன்றவற்றுக்கு தனியான அமைப்புகளும், அச்சாதிகளுக்கான கொடிகளும் கூட இருந்திருக்கின்றன. (பார்க்க படம்)*

www.tamilarangam.net

இலங்கையில் சிங்கள சாதியத்தைப் பற்றிக் குறிப்பிடும் மிகவும் பழமைவாய்நத மானுடவியல் நூலான "ஜனவங்சய"வில் 26 சாதிகள் குறிப்பிடப்படுகிறது.(பார்க்க அட்டவணை) மத்தியகால இலங்கையில் இருந்ததாகச் சொல்லப்படும் சாதிகள் 17ஐ ஜே.டி.லெனரோல் குறிப்பிடுகிறார்.

1. நவந்தன்ன - கலைஞர்கள்
2. கராவ - வேட்டையாடல் மீன்பிடி
3. துராவ - கள் இறக்குவோர்
4. ரதா - உயர்சாதியினருக்கு உடைதுவைப்போர்
5. ஹன்னாலி - நெசவு செய்வோர்
6. படஹெல - மட்பாண்டங்கள் செய்வோர்
7. அம்பெட்ட - முடிதிரத்துவோர்
8. ஹாலி - நெசவு, ஐரோப்பியர் காலத்தில் கருவா தொழில்
9. ஹக்குறு - கருப்பட்டி உற்பத்தி
10. ஹாணு - சுண்ணாம்பு
11. பண்ண - புல் வெட்டுவோர்
12 பெரவா - தாளவாத்தியம் இசைப்போர்
13 பது - பள்ளக்கு தூக்குவோர்
14. கஹல - கொலைத் தண்டனை நிறைவேற்றுவோர், சுத்திகரிப்போர்
15. ஒலி, பலி - சிரட்டை எரிப்பு, "குறைந்த" சாதியினரின் உடை துவைப்பு
16. ஹின்ன - மாவு சளிப்போர்
17. கின்னர - பாய் பின்னுவோர்

பேராசிரியர் நந்ததேவ விஜேசேகர எழுதிய "இலங்கை மக்கள்" எனும் நூலில் 43 சாதிகளின் பட்டியலைக் குறிப்பிடுகிறார்.

| | | | |
|---|---|---|---|
| 1. அஹிகுந்தித்த | 2. எம்பெட்ட | 3. ஒலி | 4. கராவ |
| 5. காப்பிரி | 6. கஹல | 7. ஹாட் | 8. கெத்தர |
| 9. கொய்கம | 10. ஜா | 11. துரய் | 12. துராவ |
| 13. நவந்தன்ன | 14 நெக்கத்தி | 15.பது | 16. பன்ன |
| 17. பனிக்கி | 18. பட்டி | 19. பரவறு | 20. பொரோகார |
| 21. பத்கம | 22. படஹெல | 23. பண்டார | 24. பெரவா |
| 25. பெத்தே | 26. பாரத்த | 27. மரக்கல | 28. மிகோ |
| 29. முக்கரு | 30. யுரேசியானு | 31. ரதா | 32. ரொடி |
| 33. லன்சி | 34. லோகரு | 35. வக்கி | 36. வன்னி |
| 37. வக்கும்புர | 38. சலாகம | 39. ஹக்குரு | 40. ஹலாகம |
| 41. ஹின்ன | 42. ஹான்னா | 43. ஹாளவாலி | |

ரொபர்ட் நொக்ஸ் 12 சாதிகள் இருந்ததாகக் குறிப்பிடுகிறார்.

| | | | |
|---|---|---|---|
| 1. ஹந்துரு | 2. ஆச்சாரி-விஸ்வ | 3. துருவே எத்தோ | 4. பனிக்கியோ |
| 5. கும்பல்லு | 6. ரதவ் | 7. ஹங்கரவமு | 8. பதுவோ |
| 9. ரெதிவியன்னோ | 10. கிலியோ | 11. கின்னரு | 12. ரொடியோ |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எவ்வாறிருந்த போதும் சாதிகளின் அளவு மேலும் கீழும் இருந்தாலும் சகலர் முன் வைத்ததிலும் வித்தியாசம் இல்லை. பல சிறிய சாதிகள் வழக்கொழிந்து போய்விட்டன. ("சாதியம், வர்க்கம், மற்றும் மாறிவரும் இலங்கைச் சமூகம்" எனும் காலிங்க டியுடர் சில்வா வின் கருத்தின்படி இவ்வாறு வழக்கொழிந்துபோன சாதியத்தின் எச்சமானது இப்போது 14 இல் தான் இருக்கிறது என்கிறார். அட்டவணையைப் பார்க்க) அவை ஏனைய சாதியினரோடு காலப்போக்கில் கலந்து விட்டன. சிங்கள சாதியமைப்பில் இறுக்கமான சாதிய படிநிலையொழுங்கு இல்லாததும் சில சம அந்தஸ்தான சாதிகள் இருந்ததும் இதற்கான காரணமாக இருக்கலாம்.

என்றாலும் இன்றும் எஞ்சியிருக்கிற வர்க்க நிலையில் பலம்வாய்ந்த ஆதிக்க சாதிகள் பல இன்றும் இலங்கையின் வர்க்க, அரசியல், நிலைகளில் தமது அதிகாரத்துவத்தைத் தக்க வைத்திருக்கின்றன. இலங்கையின் அரசியலை தீர்மானிக்கின்ற சக்திகளாக நிலப்பிரபுத்துவ பின்னணியைக் கொண்ட, அதேவேளை இன்று பெரும்பாலும் தரகுமுதலாளித்துவ சக்திகளாக தங்களை நிறுவியிருக்கிற கொவிகம மற்றும் கராவ ஆகிய சாதியினர் தான் அதிகாரத்துவ நிலையில் முக்கியத்துவ இடத்தை வகிக்கின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இன்று கீழ் மத்தியதர வர்க்கத்தினர் மத்தியில் அகமணமுறை உடைந்து கலப்பை நோக்கிச் செல்வது அதிகரிப்பதனூடாக அடித்தட்டு மக்களிடையே சாதியம் ஓரளவு தகர்ந்து வந்தாலும் மத்தியதரவர்க்க மற்றும் உயர் மத்தியதரவர்க்க மேட்டுக்குடியினரிடம் இந்த அகமணமுறை பேணப்பட்டே வருகிறது. சொத்து வேறு சாதியினருக்கு பிரிந்து செல்லாமலிருக்கவும் அது ஓரிடைத்தைநோக்கி (தம்மை) மையப்படுத்துவதற்காகவும், இந்த சாதிய அகமணை முறை இறுக்கமாக இந்த வர்க்கத்தினரிடையே பேணப்படுகிறதெனலாம்.

இலங்கையில் திறந்த பொருளாதாரக் கொள்கையைத் தொடர்ந்து ஏற்பட்ட மாற்றங்களும் அடித்தட்டு மக்களிடையே சாதிய கலப்புகளை ஏற்படுத்திவிட்டாலும், மறுபுறம் ஆதிக்க சாதிகள் கேந்திர தளங்களில் தம்மை நிறுவனப்படுத்தவும் செய்திருக்கின்றன. அதனை இலங்கையில் சகல சாதிய கட்டமைப்புக்குள்ளும் பார்க்கலாம்.

வர்க்க மற்றும் ஏனைய சமூக அந்தஸ்த்து சார்ந்த விடயங்களில் ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு மாறுவதற்கான வாய்ப்புகள் ஓரளவு இருக்கின்ற போதும் சாதியமானது பிறப்பால் தீர்மானிக்கப்படுவது என்பது முக்கிய பண்பாகும்.

இலங்கையின் அரசியலில் அன்று இலங்கை தேசிய காங்கிரஸ் தொடக்கம் அதன் பின் வந்த சகல அரசியல் கட்சிகள், அரசியல் நிலைமைகள் அனைத்திலும் சாதியத்தின் செல்வாக்கு இருந்ததை பலர் அறியார். தோற்றப்பாடாக எட்டப்பட்ட நிகழ்வுகள் இந்த உண்மைகளை துலங்க வைக்க வாய்ப்பளிக்கவில்லை. இது தமிழரசியலிலும் சரி சிங்கள அரசியலிலும் சரி பொருந்தும். அதே வேளை இவ்வாறு சாதியம் செல்வாக்கு அந்தந்த சாதிய (சிங்கள, தமிழ்) கட்டமைப்புகளுக்குள் தான் இயங்கின என்றில்லை. இனங்களுக்கிடையிலான உறவுகள் முரண்பாடுகள் என்பனவற்றைத் தீர்மானிப்பதிலும் இந்த சாதியம் பரஸ்பரம் தலையீடு செய்திருக்கிறது. இவை குறித்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். உதிரிகளாக ஆங்காங்கு இவ்வாறானவற்றுக்கு தகவல்களாக பல ஆதாரங்கள் கிடைக்கப்பெறுகின்ற போதும் இந்த நோக்கில் அவ்வகை ஆய்வுகள் முறையாக செய்யப்பட்டதில்லை. அதுவும் முக்கியமாக இலங்கையில் தற்போது நிலவும் தமிழ்த் தேசப்போராட்டத்தைத் தீர்மானிப்பதில் இவற்றின் பாத்திரம் கண்டறிவது இன்றைய நிலையில் அவசியமானதும் கூட.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பொருளாதார நெருக்கடியும், பொருளீட்டும் பொறுக்கிகளும்

கலையரசன்



"அமெரிக்கா ஒரு கனவு".

அதிக விலை கொடுக்கும் முதலாளிக்கு தனது உழைப்பை-சேவையை விற்க தயாராகும் பல்லாயிரக்கணக்கான படித்த நடுத்தர வர்க்கத்தினருக்கும், தொழில்நுட்ப அறிவற்ற சாதாரண உழைப்பாளிக்கும் உள்ள கனவு. போதுமென்ற மனதை கொண்டிருக்க சொல்லும் பழமொழியை தற்போது யாரும் நம்புவதில்லை. பேராசை, பேரவா, சுயநலம், இவ்வாறு எவையெல்லாம் தப்பென்று நீதி நூல்கள் சொல்கின்றனவோ, அவையெல்லாம் அமெரிக்க கனவின் அடிப்படைத் தகுதிகள்.

"அமெரிக்க சுதந்திரம்"சாமானியர்களும் தினசரி உச்சரிக்கும் மந்திரம். ஆனால் அவர்களது சுதந்திரம் கடனுக்குள் கட்டுப்பட்டுக் கிடக்கிறது என்பதை அமெரிக்க மக்கள் அண்மையில் தான் அறிந்து கொண்டார்கள். சுதந்திரம் இருந்தது! முதலாளிகளும், பெரிய நிறுவனங்களும், நிர்வாகிகளும், எல்லையற்ற சுதந்திரம் அனுபவித்தனர். அதிகம் சம்பாதித்தால், வரி குறையும். தாராளமாக செலவு பண்ண சுதந்திரம். லாபம் என்ற பெயரில் பெருகும் பணத்திற்கு எல்லை வகுக்கப்படவில்லை. அந்தப்பணத்தையும் எப்படியும் சேர்க்கலாம். சட்டப்படி திருடுவதற்கு கணக்காளர் வழிசொல்வார். பங்குச் சந்தையில் சூதாட முகவர்கள் இருக்கிறார்கள். பொய், புரட்டு, மோசடி, இவையில்லாமல் வியாபாரம் நடக்காது. இதையெல்லாம் யாரும் தட்டிக்கேட்க முடியாது. அரசாங்கம் தலையிட முடியாது. ஏனெனில் அது சந்தையின் சுதந்திரத்தை கட்டுப்படுத்தும். அமெரிக்கர்கள் "சுதந்திரம்" என்ற சொல்லை சரியான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அர்த்தத்துடன் தான் பயன்படுத்துகின்றனர். அந்நியர்கள் தான் அது எதோ தனிமனித சுதந்திரம் சார்ந்த விடயம் என்று நம்பி ஏமாந்து விட்டார்கள்.

பொருளாதாரம் சாமானிய மக்களுக்கு எளிதில் புரியாத ஒன்று. இருப்பினும் அனைவரும் இன்று சந்தைப் பொருளாதார விதிகளுக்கு அமைய பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர். சந்தை என்பது இயற்கைப் பொருளாதாரத்தில் ஒரு பகுதி மட்டும் தான். ஆனால் லிபரலிச, (இன்னும் தீவிரமான) நியோ லிபரலிச சித்தாந்தங்கள் தான் சந்தையை பொருளாதார சக்கரத்தின் அச்சாணி ஆக்கின. பங்குச் சந்தை தேசிய பொருளாதாரத்தை தலைமை தாங்கும் வண்ணம், அனைத்தும் தனியார்மயமாக்கப்பட்டன. அன்று பூரண தனியார்மயமாக்கலை ஆதரித்தவர்கள், இன்று நெருக்கடி காலத்தில் அரசு பொறுப்பெடுக்க வேண்டும் என்கின்றனர்.

இப்போது தான் அரசு என்ற ஸ்தாபனத்தின் சுயரூபம் வெளித்தெரிகின்றது. அதன் அடிப்படை நோக்கம், அதாவது பலமான முதலாளிகளிடமிருந்து, பலவீனமான மக்களை பாதுகாப்பது என்ற வாக்குறுதி, இன்று காற்றில் பறக்கவிடப்பட்டுள்ளது. அமெரிக்காவில் லட்சக்கணக்கான மக்கள் மருத்துவவசதியின்றி பிணியால் வாடிக்கொண்டிருக்கையில், 30 மில்லியன் மக்கள் வறுமைக்கோட்டிற்கு கீழே வாழ்ந்து கொண்டிருக்கையில், அவர்களுக்காக ஒரு சதமும் செலவழிக்காத அரசு, வங்கிகள் திவாலாகாமல் பாதுகாக்க பில்லியன் டாலர்களை தயங்காமல் அள்ளிக்கொடுத்தது. ஐரோப்பிய அரசுகளும் மக்களின் வரிப் பணத்தை அள்ளிக்கொடுத்து சந்தைப் பொருளாதாரம் அழிய விடாமல் காப்பாற்றின. தமது உதாரணத்தை பிற நாட்டு அரசாங்கங்களும் பின்பற்ற வேண்டும் என்றனர்.


அனைவரது கவலையும் வெகுவாக குறைந்துள்ள பங்குகளின் பெறுமதியை உயர்த்தவேண்டும் என்பதே. ஒரு நிறுவனத்தின் ஐந்து சதவீதத்திற்கு அதிகமான பங்குகளை அரசாங்கம் வாங்க கூடாது என்றும், அப்படி ஒரு நிலை வந்தால் பாராளுமன்ற அனுமதி வேண்டும் என்று சில நாடுகளில் சட்டம் இருக்கிறது. ஆனால் அதற்கெல்லாம் காத்திராமல், ஒரே இரவுக்குள் முடிவுகள் எடுக்கப்பட்டன. தற்போது அரசாங்கம் பங்குகளை வாங்கி, மக்கள் மத்தியில் நம்பிக்கையை உருவாக்குவதன் மூலம், நிறுவனத்தை நன்றாக இயங்க வைத்து விட்டு, பிறகு பழைய நிலைக்கு கொண்டு வருவோம் என்று பகிரங்கமாகவே சொல்கின்றனர். சுருக்கமாக சொன்னால், முதலாளிகள், அவர்களது மூலதனம் காப்பாற்றப்பட வேண்டும்.

நிதி நெருக்கடியை இடதுசாரிகள் முதலாளித்துவத்தின் வீழ்ச்சியாகப் பார்த்தனர். அது தவறு. முதலாளித்துவம் (அதிலும் குறிப்பாக வங்கித்துறை, சந்தை என்பன) அடி வாங்கியுள்ளது. அரசுகள் தலையிட்டு காப்பாற்றி விட்டன. அதே நேரம், இது தற்காலிக பின்னடைவு மட்டுமே, மீண்டும் எல்லாம் பழையபடி வந்து விடும் என்று வலதுசாரிகள் கூறுகின்றனர். அதுவும் தவறு. முதலாளித்துவ பொருளாதாரம் குறிப்பிட்ட காலம் வளருவதும், பின்னர் அளவுகடந்த உற்பத்தி காரணமாக நெருக்கடிக்குள் மாட்டிக் கொள்வதும், பின்னர் அதிலிருந்து மீள்வதும் அடிக்கடி நடப்பது தான். ஆனால் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியானது, பொது மக்களுக்கும், நிறுவனங்களுக்கும் கடன் வழங்கி, இமாலய பலத்துடன் இருந்த வங்கிகளை பாதித்திருப்பதால், அதன் விளைவு பல இடங்களிலும் எதிரொலிக்கும்.

இந்த நெருக்கடியால் அமெரிக்க வல்லரசு தகரும் என்ற எண்ணமும் தவறானது. ஜெர்மனியில் அதிகம் விற்பனையாகும் வலதுசாரி சஞ்சிகையான "டெர் ஸ்பீகல்" கூட அப்படி ஒரு கருத்தை முன்வைத்தது. உலகப் பொருளாதரத்தில் அமெரிக்காவின் ஆலோசனைகளை, மாதிரிகளை, கொள்கைகளை இனிமேல் யாரும் பின்பற்றப்போவதில்லை என்பது உண்மைதான். ஆனால் அமெரிக்கா தான் தற்போதும் உலகில் மிகப்பெரிய

www.tamilarangam.net

இராணுவ வல்லரசு என்ற நிலையில் மாற்றமெதுவும் ஏற்படவில்லை. எதிர்காலத்தில், அதுவும் பல வருடங்களுக்குப் பிறகு, ரஷ்யா அல்லது சீனா அமெரிக்காவை விட இராணுவ வளர்ச்சி கண்டால் ஒரு வேளை நிலைமை மாறலாம். அமெரிக்கா தனது பாதுகாப்பு படைகளுக்கு, அதிக பட்ஜெட் ஒதுக்கி வருகின்றது. பல நிறுவனங்கள் இராணுவத்துக்கு தேவையான ஆயுத தளபாடங்களையும், பிற கருவிக-ளையும் உற்பத்தி செய்து வருகின்றன. அவற்றில் பெரும்பகுதியை அமெரிக்க அரசாங்கம் வாங்குவதுடன்,




வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதியாகின்றது. மேலும் சினிமா, இசை, போன்ற கலாச்சார ஏற்றுமதியிலும் அமெரிக்கா முன்னணி வகிக்கின்றது. சமீபத்திய நிதி நெருக்கடியானது, இத்தகைய நிறுவனங்களில் இதுவரை முதலிட்ட வங்கிகளை ஓரங்கட்டி விட்டு, அரசே எடுத்து நடத்தும் நிலையை உருவாக்கலாம். அப்படியானால் அது ஒரு பாசிச சர்வாதிகார ஆட்சியை கூட உருவாக்கலாம்.

முதலாளித்துவத்தை ஆதரிப்பவர்களுக்கு நிரந்தர கொள்கை எதுவும் இல்லை. லிபரலிசம், நியோ லிபரிலிசம், Laissez Faire முதலாளித்துவம், சமூக ஜனநாயகம், அல்லது பாசிசம் இவ்வாறு எதை அடிப்படையாக வைத்தாவது முதலாளித்துவத்தை, அல்லது அதனால் பலனடையும் தமது இருப்பை காப்பாற்றவே விரும்புவர். 1930ம் ஆண்டு ஏற்பட்ட மோசமான நிதி நெருக்கடியில் இருந்து அமெரிக்கா மீண்டு விட்டது தானே, என்று முதலாளித்துவத்திற்காக வாதாடுபவர்கள் அடிக்கடி சொல்லக் கேட்கலாம். ஆனால் நிதி நெருக்கடி காரணமாக, அமெரிக்கா, ஜெர்மனிக்கு வழங்கிய கோடிக்கணக்கான கடனை உடனே திருப்பி செலுத்துமாறு கோரியதும், அதனால் ஜெர்மனியின் பொருளாதாரம் வீழ்ச்சிய-டைந்து, நாசிசத்தின் எழுச்சிக்கும், ஹிட்லர் அதிகாரத்திற்கு வர வழிவகுத்ததும், அதற்குப் பின்னர் ஏற்பட்ட வல்லரசுப் போரில்(2 வது உலகயுத்தம்) அமெரிக்காவும் குதித்து ஆயுதங்கள் விற்று தனது பொருளாதாரத்தை வளர்த்துக் கொண்டதும் வரலாறு. சரித்திரம் மீண்டும் திரும்பாது என்பது நிச்சயமில்லை.

நிதி நெருக்கடியின் விளைவுகள் அமெரிக்காவுக்கும், ஐரோப்பாவுக்கும் "பொருளாதார தேக்கம்" என்ற பின்னடைவை ஏற்படுத்தப் போவது மட்டும் உறுதி. அதன்படி இயற்கையான பொருளாதாரம் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கும். ஆனால் செலவைக் குறைத்தல் என்ற பெயரில் நிறுவனங்கள் அதிகமான தொழிலாளரை வேலையை விட்டு நீக்குதல், ஒரு பக்கத்தில் உதவிப் பணத்தில் அல்லது வறுமையில் வாழும் மக்களை உருவாக்கும். மக்கள் தமது பணத்தை அத்தியாவசிய தேவைகளுக்கு மட்டுமே பயன்படுத்தி, வீட்டிலே சேமிக்க தொடங்குவர். நமது நாட்டு மக்களுக்கு (அமெரிக்க-ஐரோப்பிய) "சீரழிவு கலாச்சாரம்" பற்றிய புரிதல் மிகக் குறைவு. உண்மையில் இந்த "சீரழிவு கலாச்சாரம்" தான் இந்த நாடுகளை பணக்கார நாடுகளாக தொடர்ந்து வைத்திருந்த ஊக்கியாகும். அதாவது மக்கள் பணத்தை தாராளமாக செலவழிக்க வேண்டும். அத்தியாவசிய தேவைகளோடு நிறுத்திக் கொள்ளாது ஆடம்பர தேவைகளுக்கும் செலவழிக்க வேண்டும். அப்போது தான் புதிய புதிய (ஆடம்பர பண்டங்கள் உற்பத்தி செய்யும்) நிறுவனங்கள் உருவாவதுடன், அதனால் தேசிய பொருளாதாரமும் வளர்ச்சியடையும்.

www.tamilarangam.net

சாமானியருக்கும் புரியும்படி சொன்னால், "குடி" மக்கள் அதிகளவில் மதுபான சாலைகளை நாடினால், அந்த துறை வளர்ச்சியடைவதுடன், அரசாங்கத்திற்கும் நிறைய வரி கிடைக்கும். "பணம் ஓடித்திரிய வேண்டும்" என்பது சந்தையின் பொன்மொழி. இதற்கு மாறாக இலங்கையிலும், இந்தியாவி-லும் வாழும் ஓரளவேனும் வசதிபடைத்த




மக்கள், பணத்தை தங்க நகைகளாக வீட்டுக்குள்ளேயே முடக்கி வைப்பதால், ஏற்கனவே அங்கே பொருளாதார தேக்கம் நிலவுகின்றது.

உலகமயமாக்கல் அமெரிக்க பாணி கலாச்சாரத்தை உலகம் முழுவதும் பரப்பும் பொருளாதார திட்டத்தை நடைமுறைப்படுத்-தியது. அதற்கு இந்தியா போன்ற "பழமை, பாரம்பரியம்" மிக்க நாடு கூட தப்பவில்லை. காரணம், தனி இனம் போல காட்சியளிக்கும், அந்நாட்டின் ஆளும் வர்க்கம். அன்று தமது பிள்ளைகளை டாக்டர்களாக, எஞ்சினியர்க-ளாக இங்கிலாந்திற்கும், அமெரிக்காவுக்கும் ஏற்றுமதி செய்து பெருமளவு அந்நிய செலாவணியை ஈட்டினார்கள். அண்மைக் காலத்தில் கணிப்பொறி வல்லுனர்களை அனுப்பி அந்த தேவையை நிறைவேற்றிக் கொண்டனர். இவ்வாறு ஒருபக்கம் "தங்கப்பசி" கொண்ட இந்தியர்கள் உலகிலேயே அதிகளவு தங்கத்தை நுகர்வோராக இருப்பதாலும், மறுபக்கம் NRI என்றழைக்கப்படும் வெளிநாட்டு இந்தியர்கள் அனுப்பும் டாலர்கள் அரச கஜானாவை நிறைப்பதாலும், உலக பொருளாதாரம் இந்தியாவை நெருக்கமாக கட்டிப் போட்டுள்ளது. இந்த நிலைமை, 90 களுக்கு பின்னர் ஏற்பட்ட சந்தைப் பொருளாதார சீர்திருத்தால் ஏற்படவில்லை. சுதந்திரமடைந்து நேருவின் சோஷலிசம் இருந்த காலத்தில் கூட எதோ ஒருவகையில் நிதி நெருக்கடிக்குள் சிக்கி இருக்கும். விரிவாக சொன்னால், தங்கமும், டாலரும் உலக வர்த்தகத்திற்கு இன்றியமையாதவை. இவ்விரண்டும் கையிருப்பில் குறைந்தால், அல்லது உலக சந்தையில் பெறுமதி குறைந்தால் அந்த நாடு பெரும் நெருக்கடியை எதிர்நோக்கும்.

உலகின் அரைவாசி நாடுகளை தனது காலனிகளாக வைத்திருந்த இங்கிலாந்து தான் தங்கத்தை உலக வர்த்தகத்திற்கான பொது நாணயமாக கொண்டு வந்தது. (இங்கிலாந்து நாணயமான பவுன் என்ற பெயர் அதன் காரணமாக வந்தது தான்) அதன் காரணமாக எல்லா நாட்டு நாணயமும் தங்கத்துடன் ஒப்பிட்டு பெறுமதி பார்க்கப்பட்டது. 2 ம் உலகயுத்தத்தின் பிறகு அமெரிக்கா உலக ஏகபோக வல்லரசாகியதால், டாலரை சர்வதேச வர்த்தகத்திற்கான பொது நாணயமாக்கியத்-துடன், டாலரின் பெறுமதியை தங்கத்துடன் ஒப்பிடுவதில் இருந்து கழற்றி விட்டது. இதனால் அனைத்து உலக நாடுகளும், (சீனா உட்பட) தமது திறைசேரியில் டாலர்களை நிரப்பி வைத்துள்ளன. அனேகமாக அமெரிக்கா தேசத்தில் பாவனையில் உள்ள டாலர் அளவேனும், வெளிநாடுகளில் புழக்கத்தில் உள்ளதால், அதேயளவு டாலர் தாள்களை அச்சடித்து உள்நாட்டில் புழக்கத்திற்கு விட்டுள்ளது.

தற்போது எழுந்துள்ள நிதி நெருக்கடி காரணமாக உலக நாடுகள் தமது டாலர்களை விற்க வேண்டிய நிலை வரலாம். ஆனால் அதனது கேள்வி குறைந்து, பெருமளவு டாலர்கள் அமெரிக்காவுக்கே திரும்புமாயின்,

www.tamilarangam.net

அமெரிக்காவில் இன்னொரு நிதி நெருக்கடி-யும், பொருளாதார வீழ்ச்சியும் உருவாகும். ஏற்கனவே எண்ணை ஏற்றுமதி செய்யும் ஒபெக் நாடுகள் மத்தியில் ஈரானும், வெனிசு-வேலாவும் சர்வதேச வர்த்தகத்தில் டாலருக்கு பதிலாக யூரோவை கொண்டு வரவிருந்த முயற்சி தோல்வியடைந்தது. அமெரிக்காவின் இராணுவ மேலாதிக்கம் தான் அப்படி ஒரு முயற்சியை தடுத்த சக்தி. அமெரிக்காவின் செல்வத்தில் பெரும்பகுதி வெளிநாடுகளில் இருந்து வரும் முதலீடுகளாலேயே உருவாக்கப்பட்டுள்ளது. 2 ம் உலக யுத்ததிற்கு பின்னர், அழிவில் இருந்து ஐரோப்பாவை மீட்டு பணக்கார நாடுகளாக மாற்றிய அமெரிக்கா, அதற்கு பிரதிபலனாக அமெரிக்காவில் முதலீடு செய்ய தூண்டியது. அதே போன்றே எண்ணை ஏற்றுமதியால் பெரும்பணம் ஈட்டிய வளைகுடா ஷேக்கு-களும், தமது லாபத்தில் பெரும்பகுதியை அமெரிக்க பங்குச் சந்தையில் முதலீடு செய்தனர். இதனாலேயே அந்த நாடுகளும் அமெரிக்க நிதி நெருக்கடிக்குள் சிக்கி பாதிக்கப்பட்டன.

இன்றைய நெருக்கடியில் இருந்து தப்பிக்க, அண்மைக்காலமாக பொருளாதார வளர்ச்சி கண்ட சீனா, இந்தியா போன்ற நாடுகளை வந்து முதலீடு செய்யுமாறு அமெரிக்கா கேட்டு வருகின்றது. இந்தியா அதனை செய்யும் சாத்தியம் உண்டு. அணுசக்தி உடன்படிக்கை மூலம் அமெரிக்கா, இந்தியாவை தன்பக்கம் இழுத்து வைத்துக் கொண்டுள்ளமை இங்கே குறிப்பிடத்தக்கது. ஆனால் சீனா தயக்கம் காட்டுகின்றது. அது தனது பொருளாதார பழுதுகளை திருத்திக் கொள்வதிலும், உள்நாட்டில் முதலீடு செய்வதிலுமே அதிக கவனம் செலுத்துகிறது. அப்படியே அமெரிக்காவில் முதலீடு செய்ய முன்வந்தாலும், நிலைமையை பயன்படுத்தி, அமெரிக்க நிறுவனங்களை வாங்க விரும்பலாம். அதனை (நாட்டை விற்பதற்கு சமம் என்பதால்) அமெரிக்கா விரும்பப் போவதில்லை. மேலும் இனிமேல் (சீனாவின் ஒரு பகுதியான) ஹோங்ஹோங் தான் இனிமேல் (நியூயோர்க் போல) சர்வதேச வர்த்தக மையமாக வரப்போவதாக வதந்திகள் அடிபடுகின்றன.

இன்று காணும் மாற்றங்கள் யாவும் சீனா உலக வல்லரசாக மேலாண்மை பெறும் சாத்தியக்கூறுகள் உள்ளதை கோடிட்டுக் காட்டுகின்றன. அமெரிக்க-இந்தியா அணு சக்தி ஒப்பந்தம் சீனாவுக்கு எதிரான எதிர்கால அச்சுறுத்தலுமாகும். இந்த ஒப்பந்தமானது, இந்தியா முற்றுமுழுதாக அமெரிக்க முகாமுக்குள் போய்விட்டதை காட்டுகின்றது. அதே நேரம், சீனா இலங்கையில் காலூன்றி வருகின்றது. இவ்வளவு காலமும்,



இலங்கைக்கு அதிக நிதியுதவி வழங்கி வந்த ஜப்பானை பின்னுக்கு தள்ளி விட்டது சீனா. இலங்கையின் தென்பகுதியில், எதிர்காலத்தில் வரப்போகும்(அல்லது அப்படி ஊகிக்கப்படும்) சீன கடற்படை முகாமானது, இந்து சமுத்திர ஆதிக்கத்திற்கான ஏற்பாடு ஆகும். இலங்கை சீனாவின் ஆதிக்கத்திற்கும் முழுவதுமாக போக முன்னர், இந்தியா தனது முதலீடுகளை பெருக்குவதன் மூலம் தடுக்கப்பார்க்கின்றது. அமெரிக்கா இராணுவ உதவி செய்வதன்

www.tamilarangam.net

மூலம், ஈரானின் தலையீட்டை தடுக்கப் பார்க்கின்றது. இன்றைய நிதி நெருக்கடி இந்த வல்லரசுப் போட்டியை தீவிரமாக்கலாம், அல்லது விரைவு படுத்தலாம்.

இலங்கையின் பொருளாதாரத்தில் அமெரிக்க அல்லது ஐரோப்பிய முதலீடுகள் மிகக் குறைவு. ஐரோப்பாவில் இருந்து வரும் நிதியில் பெருமளவு பகுதி, "NGO பொருளாதாரத்திற்கே" செலவிடப்படுகின்றது. வறுமை ஒழிப்பு, பெண்கள் முன்னேற்றம் போன்ற திட்டங்களை ஐரோப்பிய பணத்தில் நடைமுறைப்படுத்தும் அரசு சாரா நிறுவனங்கள் இனிமேல் இயங்க முடியாத நிலை வரலாம். அதற்கு காரணம், நிதி நெருக்கடிக்குள் சிக்கியுள்ள தமது வங்கிகளை காப்பாற்ற பெரும்பணம் செலவிடும் ஐரோப்பிய அரசுகள், அபிவிருந்தியடையும் நாடுகளுக்கு இதுவரை வழங்கி வந்த நிதியை குறைக்கவிருக்கின்றன. இது ஒருபுறமிருக்க, சர்வதேச சந்தையில் ஏறிய உணவுப் பொருட்களின் விலை இறங்கவில்லை. உள்நாட்டில் கூட உணவுப்பொருட்களை வாங்குவதும் விற்பதும் (லாபத்தை மட்டுமே முக்கியமாக கருதும் வியாபாரிகளின்) கையில் இருப்பதால், மக்கள் பட்டினியால் செத்தாலும் விலை குறையப் போவதில்லை. இது போன்ற காரணங்களால் இலங்கையிலும், இந்தியாவிலும் லட்சக்கணக்கான மக்கள், வறுமைக்குள்ளும், இன்னும் மோசமாக பட்டினிச் சாவுக்கும் தள்ளப்படுவர். இவற்றைப் பற்றி உலக அக்கறை மிக மிக குறைவாக இருக்கும். இந்த நெருக்கடியான காலத்தில், பணமிருப்பவர்கள் தமது நலன்களை மட்டுமே பார்க்கப்போகின்றனர். இதைப்பற்றி கேட்கபோனால், "தனக்கு மிஞ்சித்தான் தானமும் தர்மமும்" என்று தத்துவ முத்துகள் உதிரப்போகின்றன. உலக உணவுத்திட்டமும், ஐக்கிய நாடுகள் சபையும் இது குறித்து ஏற்கனவே எச்சரித்து விட்டன. ●


## இனி

**இனி** 3வது இதழ் டென்மார்க்கில் இருந்து வெளிவந்துவிட்டது. முதலாவது பெண் வர்ம மருத்துவர் சுப்பு லட்சுமியின் விரிவான கட்டுரையுடன், சேகுவேராவின் கெரில்லா போராட்டம் பற்றிய விமர்சன கட்டுரை மற்றும் இந்த இதழில் வர்ம மருத்துவம் பற்றிய விரிவான கட்டுரையும், டெனிஸ் மொழியிலான இரண்டாம் தலைமுறையைச் சேர்ந்த பெண் செயற்பாட்டாளர் கௌசினி யின் செவ்வி மற்றும் பல ஆக்கங்களுடன் வெளிவந்திருக்கிறது. தொடர்புகளுக்கு

Dantamil
Dalgårds vej 271
6600 Vejen
Denmark.
Phone number +
45 41427562
email:karavaithasan@yahoo.dk




www.tamilarangam.net

# ஏரி மங்குகிற நினைவு

பொட்டுப் பொட்டாகத்
தாடைவிளிம்பில் தொங்கிற்று.......
ஆற்றுக்கு அந்தப்பக்கம் நிற்;கிற
வாழ்வின் புலம்பல்.
அரசல் புரசலாக
ஊர்க்காதில் விழுந்தும் விழாததுமாக
காற்றின் இறுக்கம் தளர்ந்திருந்தது.
வயல் வெளிக்கு நடுவில் போகும்
தென்னைகள் ஓரமிட்டசாலையில்
தலை கிடந்த அலங்கோலத்தில்
விரல்கள் பதிந்த கன்னநோவில்
நுரையீரல்களும்
விலா எலும்புகளும்
நொறுங்கிய மூச்சடைப்பில்
ஒரு குரல்
நடுங்கி நடுங்கி வீழ்ந்தது.
அவர்கள் உட்கார்திருந்த தரையை இழுத்து
அந்தரத்தில் தொங்கவிட்டார்கள்.
குளத்தையும் ஏரியையும் னர்த்துக்
குப்பை கொட்டினார்கள்.
குப்பைகள் எரிந்து
கட்டைக்கரியும் புகையுமாக
நெடில் வீசிற்று.
அதனூடு அவர்கள் வாழ்க்கையின் வாடை
வீசிற்று.
இன்னும் இன்னும்.........
இரத்தக்குட்டைகளில் மயிர் உறைந்து
எனக்கு நாக்குநுனியில் வந்துவிட்டது
மறுகணம் என் தாகம் அடங்கிச்
சாம்பலாயிற்று.

-தில்லை - சுவிஸ்








தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கறுப்பு நிறமும் எதிர்கலாசாரமும்!

கல்பனா

ஈழத் தமிழ் சமூகத்தில் சித்தாந்த ரீதியாக மேலாதிக்கம் செய்யும் பிரிவாகவும் ஒட்டு மொத்த ஈழத் தமிழ் சமூகத்தையும் பிரதிநிதித்துவம் செய்யும் தரப்பாகவும் இன்று யாழ் சைவ வேளாள ஆணாதிக்க சுரண்டும் வர்க்கப் பிரிவு திகழ்கிறது. இந்தப் பிரிவினரின் சமூகப் பார்வைகளும் சமூக விழுமியங்களுமே ஒட்டு மொத்த ஈழத் தமிழ் சமூகத்தினதும் சமூக விழுமியங்களாக்கப்பட்டுள்ளன. இந்தத் தரப்பினால் ஒடுக்கப்படும், அதனால் நேரடியாக நசுக்கப்பட்டு வரும் விளிம்பு நிலைப் பிரிவினரும் கூட குறிப்பாக-அடக்கப்பட்ட சாதிப் பிரிவினர், பெண்கள், யாழ்-சைவ-வேளாள-ஆணாதிக்கப்பிரிவின் சித்தாந்தத்திற்குப் பலியாகி அதறகூடாகவே உலகைப் பார்க்க பழகிவிட்டுள்ளனர். இந்நிலையில், இந்த ஆதிக்கப் பிற்போக்குப் பிரிவினால் எது சமூகத்திற்கு ஏற்புடையதாகக் காட்டப்படுகிறதோ அதைத் தகர்ப்பதும், அப்பிரிவினால் எவையெல்லாம் ஒதுக்கப்படுகின்றனவோ அவற்றையெல்லாம் உயர்த்திப்பிடிப்பதன் மூலம் அச்சமூகத்தை எதிர்ப்பதும், சவால் விடுவதும் எமது நடவடிக்கைகளில் ஒன்றாகிறது. இதை நாம் எமது எதிர்க் கலாச்சார நடடவடிக்கையாக அடையாளங் காணலாம்.

யாழ் சைவ வேளாளஆணாதிக்க சமூகம் தனது மதம் சார்ந்த மூடக் கொள்கைகளின் அடிப்படையில் நல்ல சகுனம், அபசகுனம், மங்களம் அமங்களம், சுபம், அசுபம், தீட்டு, துடக்கு, விலக்கு போன்ற பல பிற்போக்குத்தனமான கருத்தாக்கங்களையும் சமூகத்தில் ஆழப் பரப்பி விட்டுள்ளது. இவற்றில் நிறங்களும் அடங்கும். யாழ்சைவ வேளாள ஆணாதிக்கப் பிரிவு மஞ்சள் நிறத்தை மிகவும் விரும்புகிறது. அதை மங்கள நிறமாக போற்றுகிறது. இதை நாம் கூட்டணியின் கொடியிலும் சிறிலங்கா தேசியக் கொடியில் தமிழரைக் குறிக்கும் நிறமாக மஞ்சள் நிறம் காணப்படுவதிலிருந்தும் கண்டு கொள்ள முடியும். அது மாத்திரமின்றி, பொதுவாக பல்கலைக்கழகங்களின் மேலங்கிகள் கறுப்பு நிறத்தில் இருக்க யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் மேலங்கி மாத்திரம் மஞ்சள் நிறத்திலிருப்பதிலிருந்தும் யாழ்-சைவ வேளாள ஆணாதிக்க சமூகம் "மங்களகரமான" நிறத்திற்கு கொடுக்கும் அழுத்தத்தை நாம் கண்டு கொள்ள முடியும். மஞ்சள் போன்ற பிரகாசமான நிறங்களையே இப் பிற்போக்கு ஆணாதிக்கப்பிரிவு விரும்புகிறது. அதே நேரம் மங்கிய இருண்ட

www.tamilarangam.net

நிறங்களை அபச குனம் எனக் கூறி ஒதிக்கி விடுகிறது. கறுப்பு நிறம், யாழ்-சைவ-வேளாள- ஆணாதிக்க-சுரண்டும் வர்க்கப் பிரிவால் புறக்கணிக்கப்பட்ட நிறமாகும்.

ஆனால் அதன் மனு நிறம் கறுப்பு நிறம் எதிர்ப்பின் நிறமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. உலகளாவிய அளவில் எதிர்ப்பியக்கங்கள் கறுப்பு நிறத்தை நிலவும் சமுக அமைப்புக்கு சவால் விடும் (challenge) அச்சமூக அமைப்பை எதிர்க்கும் நிறமாக கறுப்பு நிறத்தை உபயோகிக்கின்றனர். அதே போல் பெண்கள் இயக்கங்களும் நிலவும் சமூகத்தின் ஆணாதிக்க கலாச்சார முறைமைக்கு சவால்விடும் எதிர்க் கலாச்சார நிறமாக கறுப்பு நிறத்தை பிரயோகிக்கின்றனர். (குறிப்பாக உலகளாவிய அளவில் காணப்படும் women in black பிரிவினர்)

இதை விட சமூகத்தில் அடக்கி ஒடுக்கப்-பட்ட இருளில் வாழும் மக்களது அடக்கு முறைத்தன்மையின் குறியீடாக கறுப்பு நிறமுள்ளது. பாலியல் தொழில் செய்யும் பெண்கள் கறுப்பு நிற உடையாலேயே அடையாளப் படுத்தப்படுகின்றனர். அடக்கப்பட்ட சாதிப் பிரிவுகளினதும்-உழைக்கும் மக்களதும் தோலின் நிறம் கறுப்பென்பதே அடக்கும் பிரிவின் மதிப்பீடு. பிராந்திய ரீதியாக எடுத்துக் கொண்டாலும் வட இந்திய பிராமணிய ஆதிக்கப் பிரிவின் தோலின் நிறமான வெள்ளை நிறம் உயர்வான-தாகக் கருதப்பட, அப்பிரிவால் ஒதுக்கப்படும் பிரிவினர் கறுப்புத் தோலையுடையவர்களே. உலகளாவிய ரீதியில் பார்த்தால் வெள்ளை உயர்வானதாகவும் கறுப்பு அருவருப்புக்குரி-யதாகவும் வெள்ளை நிறவெறியினரால் சித்தரிக்கப்படுகிறது. இந்த வெள்ளை நிற வெறி ஆதிக்கப்பிரிவே உலகின் கறுப்பு நிறமான ஆசிய ஆப்பிரிக்க மக்களை பாரபட்சம் காட்டியும் நசுக்கியும் வருகின்றனர்.

எனவே தேசத்தின் அடக்கியொடுக்கப்-பட்ட விளிம்பு நிலைப் பிரிவின் நிறமாக கறப்பு நிறம் உள்ளது. ஒடுக்கப்பட்ட விளிம்பு நிலை மக்களே ஈழத் தமிழ் தேசத்தை உண்மையில் பிரதிநிதித்துவப் படுத்துகிறவர்களாகவும் இருப்பதால் அவர்களது குறியீட்டு நிறமான கறுப்பு நிறமே ஈழத் தமிழ் தேசத்தின் குறியீட்டு நிறமாகும்.

உலகலாவிய ரீதியில் உடல் நிறம் குறித்த ஐதீகமும் வெறுப்பும் ஒரு படிநிலை வரிசை கொண்ட மேலாதிக்க கருத்தமைப்பை கொண்டிருப்பதைக் காணலாம்.

இதற்கொரு உதாரணமாக, மேற்கு ஐரோப்பிய வெள்ளையர்கள் கிழக்கு ஐரோப்பியர்களின் நிறத்தை நோக்கும் விதம், இவ்விரு சாராரும் மத்தியகிழக்கு மற்றும் கிழக்காசியர்களை (மஞ்சல் நிறத்தவர்களாக) புறக்கணிப்பதும், கிழக்காசியர்கள், மத்திய கிழக்காசியர்கள் அனைவருமாக தெற்காசி-யர்களை பிரவுன், கருப்பு நிறத்தவர்கள் என்றும் அழைப்பார்கள். ஆக இறுதியாக நம் தெற்காசியர்கள் ஆப்பிரிக்கர்களை கருப்பு, கருவல் என நகைப்பார்கள்.

ஆக நிறங்களில் அடித்தட்டு அடக்கப்-படும் நிறத்தவர்களாக இதில் வேடிக்கை என்னவென்றால் கருப்பு இனத்தவர்களே இருக்கிறார்கள். இடையில் உள்ள அனைத்து நிறத்தவரும் மெலே உள்ளவர்கள் தம்மை பாரபட்சமாக பார்க்கிறார்கள் என்று கூறிக் கொண்டே அவர்களுக்கு கீழே உள்ள-வர்களை அசிங்கமாக பார்ப்பார்கள். இது நமது சாதிய முறையில் காணப்படுகின்ற அதே பாரபட்ச படிநிலையை ஒத்ததாக இருக்கும்.

நம்மிடையே இருக்கின்ற மேலாதிக்க கருத்தாக்கங்களின் பாதிப்பு இனம், மதம், நிறம், பால், சாதி, ஊர், வர்க்கம் என அனைத்து வேறுபாடுகளிலும் காணக்கூடியதாகவே இருக்கிறது.

அடக்கப்பட்ட விளிம்பு நிலை மக்களே புரட்சியின் கருப்பு நட்சத்திரமாகும்.

ஆக ஒன்றை அடக்கிக்கொண்டு இன்னொன்றுக்கு விடுதலை வேண்டிநிற்பதில் என்ன தார்மீகம் நமக்குண்டு என்கிற வினாவை நம்மை நொக்கி எழுப்புவது அவசியம்.

அதுவே நமது விடுதலை கோரிக்கைக்கான முன்நிபந்தனையான தகுதியும் கூட.

www.tamilarangam.net

# போரின் கருவியாக பாலியல் வல்லுறவு!



என்.சரவணன்

**போ**ரின் போது முதலாவது பாதிக்கப்படுவது பெண், இரண்டாவது பாதிக்கப்படுவதும் பெண் என்று ஒரு பழமொழியுண்டு. அனைத்து சமூக அமைப்பிலும் பாரிய நெருக்கடிநிலை தோன்றுகிற வேளை விளிம்பு நிலையினரே முதலாவதும், அதிகளவிலும் பாதிக்கப்படுவதை பல்வேறு சமூகவியலாளர்கள் மீள, மீள சுட்டிக்காட்டி வந்துள்ளனர்.

அந்தவகையில் பெண்கள் விளிம்புநிலை சக்தியினர் தான். போரின் போது பாதிக்கப்படுபவர்களில், பெண்கள், சிறுவர்கள், வயோதிபர்கள், அங்கவீனர்கள் என்போர் அதிக கரிசனைக்கும், கவனத்துக்கும் உள்ளாவது இந்த அடிப்படையில் தான். இதனை நிறுவுவதற்கு சுனாமி கூட நமக்கோர் நல்லதொரு உதாரணம்.

பஞ்சம், பட்டினிச்சாவு, நோய், இயற்கை அனர்த்தம், போர் என அத்தனைக்கும் இது பொருந்தும்.

போரின் போது பெண்கள் இன்னும் பிரேத்தியேகமான முறையில் பாதிப்புக்குள்ளாக்கப்படுகிறார்கள். பெண்கள் பாலியல் வன்முறைகளுக்கு உள்ளாக்கப்படுதல் என்பது உலக வரலாறு முழுவதும் இடம்பெற்றுத்தான் வருகின்றன. நமது சங்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இலங்கியங்கள் கூட இதனை பதிவு செய்திருக்கின்றன.

## ஸ்ரீ லங்காவில்

இன்றைய நிலையில் சிங்கள பௌத்த பேரினவாத கட்டமைப்பில், தமிழ் மக்கள் குறித்தும் இலங்கை வரலாறு குறித்தும் கட்டமைக்கப்பட்டுள்ள கருத்தியல்களை மாற்றியமைக்காமல் எதையும் செய்ய முடியாது என்பது நிரூபிக்கப்பட்டுவிட்டது.

இந்தப் பேரினவாதக் கட்டமைப்பை வளர்த்தெடுக்க எந்த ஆதிக்க அரசியல் சக்திகள் காரணமாக இருந்தனவோ இன்று அதே சக்தியானது, தானே, விரும்பினாலும் கூட தான் வளர்த்துவிட்டுள்ள கட்டமைப்பானது அப்படிப்பட்ட ஒரு தீர்வுக்கு இடமளிக்கப் போவதில்லை என்பதையும், அது ஆதிக்க சக்திகளின் இருப்புக்கே உலை வைத்துவிடும் என்பதும் அம்பலப்பட்டுள்ளது.

இந்த நிலையில் சமாதான முயற்சி..., பேச்சுவார்த்தை..., போர் நிறுத்தம்..., தீர்வு... என்பவற்றை எதிர்க்க சிவில் சமூகமே தயாராக்கப்பட்டு வருவதை தென்னிலங்கையின் அண்மைய நிகழ்வுகள் நிரூபித்து வருகின்றன. இந்த நிலையில் அரசு விரும்பியோ விரும்பாமலோ தனது இருப்புக்காக போர்க் கெடுபிடி நிலையை பேணி வருகிறது. அதற்காக எவ்வளவு பெரிய இழப்புகளுக்கும் முகம் கொடுக்க சிவில் சமூகம் பழக்கப்பட்டு - பழக்கப்படுத்தப்பட்டு வருகிறது. தென்னிலங்கையில் தொழிலாளர்களின் வேலை நிறுத்தம், பொருள் விலையுயர்வு, தீர்வைகளின் அதிகரிப்பு, வேலையில்லா திண்டாட்டம் என்பவற்றைக் கூட போரின் பேரால் நியாயப்படுத்துவதை எதிர்த்து பெரிய எதிர்ப்பு "நடவடிக்கைகள்" எதுவும் இல்லை.

அரசாங்கங்களின் இருப்புக்கான அரசியல் தந்திரோபாய நடவடிக்கைகளில் ஒன்றாகவே போர்ச்சூழல் பாதுகாக்கப்பட்டு வருகிறது. போரின் போது படையினரின் உளப்பலத்தை பாதுகாப்பதும், உற்சாகத்தை பேணச் செய்தலும் அரசின் கடமையாகிறது. படையினரின் உயிரிழப்புகள், இராணுவத்தினரின் உயிரிழப்புகள், பொருளிழப்புகள், முகாம் இழப்புகள் எனபனவற்றால் படையிலிருந்து வெளியேறுவோரின் தொகை அதிகரித்து வந்த அதே நேரம் படைக்கு புதிதாக சேருவோரின் தொகை குறைந்துக் கொண்டே வருகிறது. தென்னிலங்கையில் சிங்கள இளைஞர்கள் பலர் தமது வீடுகளில் பெற்றோரை மிரட்டுகின்ற வாத்தைப் பிரயோகமாக "படையில் போய் சேர்ந்து விடுவேன்" என்பது சர்வசாதாரணமாக ஆனது.

இந்த நிலையில் இருக்கின்ற படையினரை தொடர்ந்து தக்க வைக்கவும், புதிதாக படைக்குச் சேருவதை ஊக்குவிக்கவும் பல வழிமுறைகளை அரசு கையாள்கிறது. படையில் இணைவோருக்கான சம்பள, சலுகைகள் அதிகரிப்பு அவற்றில் முக்கியமானவை. இது போன்ற வழிமுறைகளில் ஒன்றே படையினரின் போர்க்கால குற்றங்களை பொருட்படுத்தாமை என்பது.

அந்த போர்க்கால குற்றங்களில் பாரிய ஒன்றாக தமிழ்ப் பெண்களின் மீதான பாலியல் வல்லுறவு நிகழ்கிறது. இது வெளிப்படையாக பாலியல் இச்சை சார்ந்ததாக காட்டப்பட்டாலும் அதற்கும் அப்பாலான பொருண்மைகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**படையினரால் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டு கொல்லப்பட்ட பெண்களின் புகைப்படங்கள் ஆதாரங்களுக்காக இங்கு பாவிக்கப்படுகிறது. சில வருடங்களுக்கு முன் பல சிரமங்களின் மத்தியில் படைக்குள் இருந்தவர்களிடம் இருந்து வெளியில் எடுத்துவரப்பட்டவை. சரிநிகரில் ஒரு சில பகைப்படங்கள் பாவிக்கப்பட்டன. மற்றவை வேறெங்கும் பிரசுரமாக்கப்படவில்லை.**

உள்ளன.

இதற்கான உள்ளார்ந்த அனுமதியும், ஆசீர்வாதமும் படைத் தரப்பில் வழங்கப்பட்டுவருவதை சம்பவங்கள் பல நிரூபித்துள்ளன. வெளியில் செய்தி கசியாமல் எதனையும் செய்யலாம் என்கின்ற நிலைப்பாடு இராணுவ வட்டாரத்தில் இருக்கிறது.

1994இல் பதவிக்கு வந்த பொ.ஐ.மு. அரசாங்கம் அதே ஆண்டு இறுதியிலிருந்து நடத்திய பேச்சு வார்த்தைகள் 1995 ஏப்ரலில் முறிவடைந்தது. 1995 ஒக்டோபரில் சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையின் மூலம் யாழ் குடா நாட்டைக் கைப்பற்றிய அரசாங்கம் அது தொடக்கம் யாழ் குடா நாட்டை ஒரு மூடுண்ட பிரதேசமாகவே ஆக்கி வந்தது. வெளியுலகத்துக்கு அங்கு இராணுவத்தைக் கொண்டு சிவில் நிர்வாகத்தை நடாத்தி வருவதாகவும் பிரச்சாரப்படுத்தியும் வந்தது.

போரினால் அரசு சந்தித்து வந்த தொடர் தோல்விகளினால் படையினரின் உளநிலை வீழ்ச்சி கண்டிருந்தது. இதேவேளை மூடுண்ட பிரதேசமாக இருந்த யாழ் குடா நாட்டில் பல நூற்றுக்கணக்கானோர் காணாமல் போனோர்கள். அடிக்கடி ஆங்காங்கு சடலங்கள் கிடைத்துக் கொண்டிருந்தன. காணாமல் போவோரின் தொகை அதிகரித்துக்கொண்டே சென்றது.

இப்படிப்பட்ட நிலையில் தான் பாலியல் வல்லுறவு சம்பவங்கள் குறித்த தகவல்கள் தொடர்ந்து வெளி வந்து கொண்டிருந்தன. வடக்கு கிழக்குப் பகுதிகளில் படையினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் படையினராலேயே மேற்கொள்ளப்பட்ட சம்பவங்கள் குறித்த உண்மைகளை வெளிக் கொணர்வது எவருக்கும் அவ்வளவு இலகுவான காரியமாக இருக்கவில்லை. அரச பயங்கரவாதம் சட்டபூர்வமான முறையில் அவசரகால சட்டம், பயங்கரவாதத் தடைச்சட்டம் போன்றவற்றினூடாகவும், ஊடகத் தணிக்கை போன்றவற்றினூடாகவும் மேற்கொள்ளப்பட்டது. அச்சட்டங்கள் மக்களின் மீதான இராணுவ அட்டுழியங்களுக்கும், படுகொலைகளுக்கும், பாலியல் வல்லுறவுகளுக்குமான அனுமதிப்பத்திரமாகவே அமைந்தது.

1971 ஏப்ரல் கிளர்ச்சியின் மூலம் ஜே.வி.பி.யை அடக்குவதாக கூறிக்கொண்டு சிங்கள இராணுவம் தனது சொந்தத் தேசத்து சிங்கள யுவதிகளையே பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கினர். மனம்பேரி எனும் ஜே.வி.பி. இளம் பெண்ணின் கதை மட்டுமே மேற்பூச்சுக்காக வழக்கு நடாத்தி சம்பந்தப்பட்ட படையினருக்கு தண்டனை வழங்கப்பட்டது. ஜே.வி.பி.யை அடக்கவென சிறிமாவோ பண்டாரநாயக்கவினால் அப்போதைய இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியிடம் உதவி கோரப்பட்டதைத் தொடர்ந்து இலங்கை வந்தடைந்த இந்திய இராணுவமும் இந்த காலத்தில் பாலியல் வல்லுறவினை மேற்கொண்டது தொடர்பாக பதிவுகள் பெரிதாக வரவில்லை. ஆனால் அன்றைய ஜே.வி.பி.க்கு தலைமை தாங்கிய பலர் இன்றும் அந்தக் கொடுரங்களை நினைவு கூர்ந்த


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வண்ணமுள்ளனர்.

அதே இந்திய இராணுவத்தை 1987ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பெண்கள் மாலையிட்டு, திலகமிட்டு வரவேற்றபோது நாளை இவர்கள் தம்மையும் தமது பிள்ளைகளையும் கொன்றொழிக்கப்போகிறார்கள் என்றோ தமது பெண் பிள்ளைகளை பாலியல் வன்முறைக்குள்ளாக்கப் போகிறார்கள் என்பதையோ அறிந்திராதிருந்தனர்.



Krishanthy Kumaraswamy



மனம்பேரி

இந்திய இராணுவ நுழைந்ததுமே இதனை தொடங்கி விட்டனர். 1987இல் ஒக்டோபர் முதல் டிசம்பர் வரையான காலத்திலேயே அதிகமான பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இராணுவ நடவடிக்கையின் அங்கமாகவே இது மேற்கொள்ளப்பட்டதென பல நூல்களிலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

இந்திய இராணுவம் யாழ் பல்கலைக் கழகத்தினுள் புகுந்து தமிழ் மாணவிகளை பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கி அவர்களின் பாலுறுப்புகளை சிதைத்து பின் கொன்று புதைத்திருந்தனர். பின் அச்சடலங்கள் அப்புதைகுழிகள் தோண்டியெடுக்கப்பட்டன.

உளவியலாளர் தயா சோமசுந்தரத்தின் Scarred Minds எனும் நூலில் இது பற்றிய பல தகவல்களை வெளியிட்டிருக்கிறார்.

மூன்று இந்திய இராணுவத்திர் துப்பாக்கி முனையில் பாலியல் வல்லுறவு புரிய முற்பட்டபோது அவர்களை நோக்கி -என்னை இப்படி செய்யாதீங்கோ! என்னை சுட்டுக்கொல்லுங்கோ- என கதறியழுத சம்பவமும். திருநெல்வேலியில் ஒரு பெண் ஓடிப்போய் கிணற்றில் விழுந்து தற்கொலை செய்ய முயற்சித்தமை போன்ற சம்பவங்களையும் அந்நூலில் பதிவாக்கியிருக்கிறார்.

இது தவிர 1968இல் வியட்நாமில் அமெரிக்காவுக்கு ஒரு மை லாய் கிராமம் போல, 1989இல் இந்திய இராணுவத்துக்கு ஒரு வல்வை படுகொலையை குறிப்பிடுவது வழக்கம். 1989 ஒகஸ்ட் 2, 3, 4 ஆம் திகதிகளில் வல்வெட்டித்துறையையும், அதனை அண்டிய ஊர்களுக்கும் ஊரடங்குச்சட்டம் பிறப்பித்து ஆயிரக்கணக்கான வீடுகள் கடைகளை உடைத்தும் எரித்தும் சேதத்துக்கு உள்ளாக்கியதுடன், பெண்கள், வயோதிபர், சிறுவர்கள் என 63 பேரை வெட்டியும், சுட்டும் தாக்கியும் படுகொலை செய்ததுடன், 15 திருமணமான பெண்களையும், 50க்கும் மேற்பட்ட இளம் பெண்களையும் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கினர்.

## உலகம் முழுவதும் இது தான்....

பொதுவாக போர்க்காலங்களில் பாலியல் வல்லுறவுக்கூடாக ஒரு சமூகத்தை அவமானத்துக்குள்ளாக்குள்ளாக்கலாம் என்று எதிரித் தரப்பு நம்புவது வழக்கம். இது ஹிட்லரின் நாசிப் படைகள் தொடக்கம் அண்மைய பொஸ்னிய-சேர்பிய போர் வரை காணமுடியும். பொஸ்னிய இனத்தின் தூய்மையைக் கெடுக்க வேண்டுமானால் அவ்வினத்தின் பெண்களின் மீது பாலியல் வல்லுறவு கொண்டு இனக்கலப்பு செய்து விட்டால் அது நடக்கும் என சேர்பியர்கள் கருதினார்கள். அதன் விளைவாக பொஸ்னியப் பெண்களை சிறைப்படுத்தி அவர்களுக்கென்று தனியான முகாம்களை அமைத்து (Rape Camps) அவர்களை சேர்பியர்கள் சென்று மாறி மாறி பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கி அவர்களை கர்ப்பம் தரிக்கச் செய்து பிள்ளை பெற செய்தனர். அதன்பின்னர் பிறந்த அப்பிள்ளை என்ன இனம் என்று கேலி செய்தனர். நூற்றுக் கணக்கான பெண்களுக்கு இந்த கதி ஏற்பட்டது. இந்த இனக்கலப்புக்கூடாக இனக்கலப்பை செய்துவிட்டதாகவும், அப்பெண்களுக்கு பிறந்தவர்கள் எவரும் இனி பொஸ்னியர்களாக அறிவித்துக் கொள்ள முடியாதென்றும், தான் இனக்கலப்பை செய்துவிட்டதாகவும்

www.tamilarangam.net

அறிவித்துக்கொண்டார்கள். அவ்வினத்தின் தூய்மையைக் கெடுத்து விட்டதாகவும், களங்கப்படுத்தி விட்டதாகவும், புனிதம் கெடச் செய்து விட்டதாகவும் பொஸ்னியர்களுக்கு அறிவித்தார்கள். 1992 அளவில் 20ஆயிரத்துக்கும் மேற்பட்டபெண்களும், இளம் யுவதிகளும் இதன்போது பாலியல்வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டார்கள். பொஸ்னியாவில் நிகழ்ந்தது பெண்களின் மீதான வல்லுறவு அல்ல. ஒட்டுமொத்த மனித்தத்தின் மீதான களங்கம் ("The war on women in Bosnia was truly the rape of humanity"[2])

போர்க்காலங்களில் பெண்களை கைது செய்வது, சித்திரவதைக்கு உள்ளாக்குவது, குறிப்பாக பாலியல் வல்லுறவு உள்ளிட்ட பாலியல் சித்திரவதைக்கு உள்ளாக்குதல் அன்று தொடக்கம் இன்று வரை நிகழ்ந்த வண்ணமே உள்ளது.

போர் நடந்த பங்களாதேஸ், கம்போடியா, சைப்பிரஸ், ஹைட்டி, லைபீரியா, சோமாலியா, உகாண்டா போன்ற நாடுகளில் இச்சம்பவங்கள் பல பதிவாகியுள்ளன.

1990இல் 5000க்கும் மேற்பட்ட குவைத் பெண்கள் ஈராக்கிய துருப்புக்களால் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டனர்.

ருவாண்டாவில் 5 லட்சம் பெண்கள் பாலியல் வன்கொடுமைகளுக்கு உள்ளானார்கள். அல்ஜீரியாவில் சில கிராமங்களில் புகுந்த ஆயுததாரிகள் ஒட்டுமொத்த கிராமத்து பெண்களையும் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கினர். சில தரவுகளின் படி அங்கு 1600 இளம் பெண்கள் கடத்தப்பட்டு பாலியல் அடிமைகளாக வைக்கப்பட்டிருந்திருக்கின்றனர்.

இரண்டாவது உலகப் போர் நடந்து கொண்டிருந்த போது 1937இல் ஜப்பான் துருப்புக்களால் சீனாவின் நான்கின் எனும் பகுதி ஆக்கிரமிக்கப்பட்ட வேளை அங்குள்ள 20,000க்கும் மேற்பட்ட சீனப்பெண்கள் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டதற்காக உலகப்போரின் பின்னர் விசாரணை நடந்தது.

ருவாண்டாவில் போரில் தப்பிய இளம் அப்பாவிப் பெண்களை பாலியல்வல்லுறவுக்கு உட்படுத்த ஆயுததாரிகள் பணிக்கப்பட்டனர். இவ்வாறு கர்ப்பம் தரிக்கப்பட்ட பெண்கள் அவர்களது குடும்பங்களிலும், சமூகத்திலும் விரும்பத்தகாதவர்களாக ஆனார்கள். சிலர் தற்கொலையும் செய்து கொண்ட சம்பவங்களும் பதிவானது. இவ்வாறான செயற்பாடுகளின் மூலம் அப்பெண்ணையும், அப்பெண் சார்ந்த குடும்பத்தையும், அவர்களின்



இனக்குழுமத்தின் உளப்பலத்தை குறைப்பதும், இனத்தூய்மை மீதான மாசுபடுத்தலும், அவர்களின் அடையாளத்தை உருக்குலைப்பதும், அவர்களின் கலாச்சார நம்பிக்கைகளை கேலிக்குரியதாக்குவதும் நோக்கமாக இருந்திருக்கின்றன. இவை எதிரிப்படைத் தலைமைகளால் ஊக்குவிக்கப்பட்டுமிருக்கின்றன.

இலங்கையில் அனுராதபுரத்தில் படையினரை நம்பியே மிகப் பாரிய அளவிலான பாலியல் தொழில் விடுதிகள் நடத்தப்படுகின்றன. எல்லைப்புக் கிராமங்களில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பல பெண்கள், குறிப்பாக கணவரை இழந்தவர்கள் பலர் இதில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இவ்வாறான விடுதிகள் இராணுவ அதிகாரிகள் சிலரது சொந்த விடுதிகளாகவும் உள்ளன. பெண்கள் அமைப்புக்கள் பலவற்றின் அறிக்கைகளில் இந்த விடுதிகள் குறித்து சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

இப்படி யுத்த காலங்களில் எதிரித் தரப்பின் பெண்கள் படையினருக்கு விருந்தாக ஆக்கப்படுவதும் பலருக்கான பாலியல் போகப்பொருளாக, பாலுறவு இயந்திரமாக ஆக்கப்படுவதும் அங்கு மட்டுமல்ல

www.tamilarangam.net



இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது ஜப்பானியப் படைகள் கிழக்காசிய நாடுகளில் புரிந்த கொடுமையும் இவை தான். அவை நீண்ட காலமாக வெளித் தெரியாமல் இருந்து மிக அண்மையில் தான் பெண்களை பாலியல் அடிமைகளாக முகாம்களில் வைத்திருந்த விடயங்கள் வெளிச்சத்துக்கு வந்தன. ஜப்பான் அன்று இந்தோ-னேசிய, பிலிப்பைன்ஸ், மற்றும் கொரியா உள்ளிட்ட நாடுகள் பலவற்றில் பெண்கள் பலரை தடுத்து வைத்து படையினரின் பாலியல் தேவைகளுக்கு பயன்படுத்தி வந்த சம்பவங்கள் உலகையே உலுக்கியது.

எதிரி நாட்டுப் படையினர் மீது நடத்தப்-பட்டு வந்த இத்தகைய மனிதநேயமற்ற சம்ப-வங்களே இலங்கையிலும் நடந்து வருகின்-றன.

ஒரு சில ஆண்டுகளுக்கு முன் கூட இந்தோனேசியாவில் சுகர்னோ அரசாங்கத்-துக்கு எதிரான கிளர்ச்சியின் போது சீன நாட்டைச் சேர்ந்த பெண்கள் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்ட செய்தி இன்று உலகப்புகழ் பெற்றவை.

ஸ்ரீ லங்கா அரசின் யுத்த அணுகுமுறைகள் எதிரி நாட்டுடனான யுத்தமென்பதையும் தமிழ்ப் பெண்கள் தங்கள் நாட்டுப் பெண்களில்லை வேற்று நாட்டுப் பெண்களே என்பதையும் நமக்கெல்லாம் தெளிவு-றுத்தியதும் இதே அரச படை தான். சிங்கள இராணுவத்திற்கான சிங்கள இராணுவ ஆட்சேர்ப்பு, தமிழ் மக்கள் மட்டும் தேடி வேட்டையாடப்படல், தமிழர் பகுதிகளின் மீதான குண்டுவீச்சுக்கள், அழிப்புக்கள் என்பவற்றின் வெளிப்பாடுகள் அத்தனையும் இது சிங்களப் படை தான் என்பதை நிரூபித்தது. எனவே ஸ்ரீ லங்கா அரச படையும் வேற்று நாட்டுப் படையெனும் உணர்வும், ஆக்கிரமிப்பு இராணுவம், எதிரிப் படை என்கின்ற மனப்பதிவுக்கும் தமிழ் மக்கள் எப்போதோ உள்ளாக்கப்பட்டுவிட்டனர்.

ஸ்ரீ லங்கா படையை அவ்வாறு "சிங்களப் படை", "எதிரிப் படை" யென்று சொல்வதற்கு முழுத் தகுதியையும் படிப்படியாக குறுகிய காலத்தில் அடைந்தது இவ்வாறுதான்.

(சிங்களப் படையென்ற சொல் இனவா-தத்தை வெளிப்படுத்துவதாக விமர்சிக்கப்பட்ட காலமொன்று இருந்தது. ஆனால் சிங்களவ-ர்களை மட்டுமே கொண்ட படையாகவும் எதிரிநாட்டின் மீது யுத்தம் செய்வது போல யுத்தக் குற்றங்களில் ஈடுபடுவதாலும் இப்பதம் பொறுத்தமானதே)

எனவே இப்படிப்பட்ட சிங்களப் படையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற பாலியல் வல்லுறவுகள் தமிழ் மக்களின் இனத்துவத்தை அவமானப்படுத்த பயன்படுத்-துகின்ற ஒன்றாகவே கொள்ள முடிகிறது.

ஆனால் தற்செயலாக கிருஷாந்தி குமாரசுவாமி பாலியல் வல்லுறவுக்கு-ள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டதும், கிருஷாந்தியைத் தேடிச் சென்ற அவரது தாயார், சகோதரன், அயலவர் ஆகியோரையும் கொன்று புதைத்த சம்பவம் தற்செயலாக அம்பலத்துக்கு வந்ததும் (கிருஷாந்தி குடும்பத்தின் வர்க்கப்பின்னணி காரணமாக அதற்கு தொடர்புசாதனங்கள், பெண்கள் அமைப்புகள், சட்ட உதவிகள் வாய்ப்பாக அமைந்ததால்) அது உலக அளவில் அரசை அம்பலத்துக்கு கொண்டு வந்தது.

www.tamilarangam.net

தவிர்க்க இயலாமல் சிங்கள அரசு, தாம் போர்க் குற்றங்களுக்கு எதிராக எப்போதும் உறுதியாக இருப்பதாக பிரச்சாரப்படுத்துவதற்காக கிருஷாந்தி வழக்குக்கு அரசினால் முக்கியத்துவமும் கொடுக்கப்பட்டது. அதன்படி 20 மாதங்களாக நடந்த கிருஷாந்தி வழக்கின் தீர்ப்பாக 6 பொலிஸாருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

இதனை சாதகமாக்கியபடி அரசு இன்றும், பாதிக்கப்படும் பெண்கள் மீதான தனது கரிசனையை பிரச்சாரப்படுத்தி வருகிறது. இந்த பிரச்சாரங்களின் முன்னால் ஏனைய சம்பவங்கள் அனைத்தையும் மூடி மறைத்து வருகிறது. ஏனைய சம்பவங்களில் பாதிக்கப்பட்டவர்கள் சமூக அளவிலும் அந்தஸ்துடையவர்கள் அல்லர்.

இன்று வெளிக் கொணரப்படுகின்ற சம்பவங்கள் அனைத்துமே பாதிக்கப்பட்ட பெண் செத்தால் மாத்திரம் தான் சாத்தியமாகிறது. பெண்கள் ஊடக நிறுவனத்தைச் சேர்ந்த பெண்ணியவாதியான ஷாமினி பெர்ணாண்டோ இது குறித்து அப்போது கருத்துதெரிவிக்கையில் "ஒரு பெண் படையினரால் தனக்கு ஏற்பட்ட அவலத்தை சட்டத்தின் முன் கொண்டு வர வேண்டுமெனில் நிச்சயம் சாகத்தான் வேண்டுமா," என வினவுகிறார். உண்மையில் இன்று வழக்கு தொடரப்பட்டிருக்கும் சொற்ப சம்பவங்களைத் தேடிப்பார்த்தால் அவை பாலியல் வல்லுறவின் பின்னர் கொலை செய்யப்பட்டவர் குறித்தானதாகத் தான் இருக்கின்றது. கிருஷாந்தி, ராஜினி, கோணேஸ்வரி போன்றன நல்ல உதாரணங்கள்.

இதே வேளை இது வரை சிங்களப் படையினரால் மேற் கொள்ளப்பட்டு வந்திருக்கிற பாலியல் வல்லறவு சம்பவங்கள் அனைத்திலும் பெண்கள் அதிக சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டுள்ளனர்.

ஈழப்போராட்ட வரலாற்றில் அதிகளவு பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உள்ளானது சந்திரிகா என்கிற பெண்ணொருவர் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் தான் (1994-2005) என்பது பதிவாகியிருக்கிறது. சர்வவல்லமை பொருந்திய நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியாகவும், முப்படைகளின் தளபதியாகவும், பாதுகாப்பு அமைச்சராகவும் சந்திரிகா தான் இருந்தார் என்பது இங்கு கவனிக்கவேண்டிய ஒனறு.

1996 இல் மாத்திரம் 150 தமிழ் பெண்கள் படையினரின் பாலியல் வதைக்கு உள்ளாக்கப்பட்டதாக சீனப்பத்திரிகையொன்று அறிக்கை வெளியிட்டது. *(South China Morning Post, 11 January 1997)*

97 ஒக்டோபர் 16 அன்று அம்பாறையில் பொலிஸாரும் படையினரும் தங்கநாயகி எனும் பெண்ணை கூட்டாக பாலியல் வல்லுறவு கொண்டு விட்டு அப்பெண்ணின் பெண்குறியை வெட்டி சின்னாபின்னப்படுத்தி விட்டே சென்றனர். அதே போல 97 மே 17 அம்பாறையில் கோணேஸ்வரி பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்ட பின்னர் கோணேஸ்வரியின் பெண்குறியில் கிரனைட் வைத்து சிதறச்செய்தனர். பெரும்பாலான பாலியல் வல்லுறவுச் சம்பவங்களின் பின் இறுதியில் கொலை புரிந்து வந்திருக்கின்றனர். இதன் மூலம் சகல சாட்சிகளையும் இல்லாது போய்விடுமென்றே சிங்களப் படையினர் நம்புகின்றனர்.

இதை விட இது வரை காலம் போரின் போது கைது செய்யப்பட்ட பெண் புலிகள் பலரை பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டமை குறித்த சம்பவங்கள் 94க்கு முன்னர் அதிகளவு தகவல் கிடைத்திருந்தன. ஆனால் உயிர்விடும் தறுவாயில் பிடிக்கப்பட்ட பெண் போராளிகளை நிர்வாணப்படுத்தி பாலுறுப்புகளில் போத்தல்களாலும், கம்பிகளாலும் சேதப்படுத்தியதை நிரூபிக்கின்ற புகைப்படங்கள் எமக்கு கிடைத்த போது மிகுந்த அதிர்ச்சிக்கு உள்ளானோம். குறிப்பிட்ட தாக்குதல் சம்பவம் முடிந்ததும் மரணமுற்ற பெண் போராளிகளை நிர்வாணப்படுத்தி காட்சிப்படுத்தப்பட்டதை தொலைக்காட்சி செய்திகளிலும் காட்டப்பட்டது. அவை பற்றிய புகைப்படங்களும் கிடைத்திருக்கின்றன.

இதன் மூலம் எதிர்பார்க்கப்படுவது என்ன? குறிப்பிட்ட சமூகத்தை அவமானப்படுத்தி

www.tamilarangam.net

விட்டதன் வெற்றிக் களிப்பையல்லவா? ஏற்கெனவே சமூகத்தில் ஒருவர் தனக்கு வேண்டாத இன்னொருவரை அவமானப்படுத்த வேண்டுமென்றால் அவருக்கு கிட்டிய பெண்ணை வல்லுறவுக்குள்ளாக்குவேன் என்று (வழக்கிலுள்ள துஷனம்) கூறினாலே மற்றவர் ஆத்திரப்படுவார் அல்லவா? அப்படிப்பட்ட வெளிப்பாடொன்றே இந்த நிர்வாணக் காட்சிப்படுத்தலும்.

"தமிழ் மக்களை பயங்கரவாதிகளிடமிருந்து மீட்டெடுப்பதற்காக நடத்தப்படும்" சமாதான யுத்தத்தின் மறு பக்கம் எவ்வளவு கோரமானது என்பதைக் காட்ட தமிழ் மக்களுக்கு எதிரான இந்த சம்பவங்கள் போதுமானது. அரசாங்கத்தின் சர்வதேச பிரச்சாரங்கள் சமீப காலமாக தோல்வியடைவதற்கு ஒரு காரணம் போர்க்கால கொடுமைகளின் அத்தனை விபரீதங்களும் எல்லைத்தாண்டி போகுமளவுக்கு அதிகரித்திருப்பதே.

அரசு இவ்வாறான இம்சைகளின் வாயிலாக தமிழ் மக்களை பணிய வைத்து அரசு தரும் தீர்வினை ஏற்கச் செய்கின்ற நடவடிக்கையாக, போரின் கருவியாக, வதையின் கருவியாக, பாலியல் வல்லுறவு தொடர்ச்சியாக பாவிக்கப்பட்டு வருகிறது. அரச பயங்கரவாதத்தின் உச்ச வடிவம் இது தான். இது இனிமேல் தொடராது என்பதற்கான உறுதியை எவரும் தந்துவிடமாட்டார்கள்.

(1997ஆம் ஆண்டு 158ஆவது சரிநிகர் இதழில் ஜென்னி என்கிற பெயரில் என்.சரவணனால் எழுதப்பட்ட இந்தக்கட்டுரையானது பறைக்காக மேலும் பல இடங்களில் புதிதாக சேர்த்தும் திருத்தப்பட்டும் இந்தக் கட்டுரை முடிக்கப்பட்டுள்ளது. இத்துடன் பட்டியலிடப்பட்டிருந்த பாலியல் வல்லுறவு சம்பவங்கள் பலவற்றின் தரவுகள் பட்டியல் கைவசம் கிடைக்கவில்லை. கூடவே அன்று பல சர்ச்சைகளுக்கு உள்ளான கலாவின் -கோணேஸ்வரிகள் கவிதையும் பிரசுரமாக்கப்பட்டது. அக்கவிதை இன்று மீண்டும் உங்கள் உணர்வுகளுக்காகவும், சிந்தனைக்காகவும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.) -ஆ-ர்

**உதவியவை...**


1. Report of Special Rapporteur on Violence Against Women - Ms.Yakin Erturk, 3 March 2004,
2. Mass Rape: War on Women - Dahlia Gilboa -
3. History of Rape: A Bibliography - Author Blaschke, Stefan
4. Experts Make Treatment of Wartime Rape a Priority By Jennifer Friedlin
5. License to Rape and Killl, :: Was > SRI LANKA:THE ARROGANCE OF POWER: Myths, Decadence & Murder by Rajan Hoole
6. (Memorial for IPKF – Indian Peace Keeping Force) Memorial for IPKF - Innocent People Killing Force By Dr. T. Somasekaram
7. Scarred Minds: The Psychological Impact of War on Sri Lankan Tamils by Prof Daya Somasundaram
8. Sexual violence against Tamil women - D. B. S. Jeyaraj, 22 December 2000
9. Krishanti, a Woman of Sri Lanka By Danica Anderson
10. Violence Against Women in Armed Conflict - Amnesty International New Zealand
11. WAR and RAPE: by: Janet M. Eaton, PhD, February 8, 2000
12. Rape as a Weapon of War - Claudia Card - Hypatia Vol. 11, No. 4 (Fall 1996) © by Claudia Card
13. Sexual violence as a weapon of war - Unicef - 1996 Report
14. Rape: weapon of war - new internationalist - issue 244 - June 1993 by Angela Robson




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கோணேஸ்வரிகள்

நேற்றைய அவளுடைய சாவு- எனக்கு
வேதனையைத் தரவில்லை.
மரத்துப்போய்விட்ட உணர்வுகளுள்
அதிர்ந்து போதல் எப்படி நிகழும்!?

அன்பான என் தமிழச்சிகளே!
இத்தீவின் சமாதானத்திற்காய்
நீங்கள் என்ன செய்தீர்கள்!?
ஆகவே வாருங்கள்
உடைகளைக் கழற்றி
உங்களை நிர்வாணப்படுத்திக் கொள்ளுங்கள்
என் அம்மாவே உன்னையும்தான்.

சமாதானத்திற்காய் போரிடும்
புத்தரின் வழிவந்தவர்களுக்காய்
உங்கள் யோனிகளை திறவுங்கள்
பாவம்
அவர்களின் வக்கிரங்களை
எங்கு கொட்டுதல் இயலும்.

வீரர்களே! வாருங்கள்
உங்கள் வக்கிரங்களை தீர்த்துக்கொள்ளுங்கள்
என் பின்னால்
எனது பள்ளித்தங்கையும் உள்ளாள்
தீர்ந்ததா எல்லாம்

அவ்வளவோடு நின்று விடாதீர்!
எங்கள் யோனிகளின் ஊடே
நாளைய சந்ததி தளிர்விடக்கூடும்.
ஆகவே
வெடிவைத்தே சிதறடியுங்கள்
ஒவ்வொரு துண்டுகளையும் கூட்டி அள்ளி
புதையுங்கள்
இனிமேல் எம்மினம் தளிர்விடமுடியாதபடி.

சிங்கள சகோதரிகளே!
உங்கள் யோனிகளுக்கு
இப்போது வேலையில்லை.

**கலா (இலங்கை) -சரிநிகர் (17.5.1997)**

## பாலியல் வல்லுறவு குறித்து செய்தியிடலின் போது எதிர்நோக்கும் பிரச்சினை!

சம்பவங்களில் பாதிக்கப்பட்டவர்கள் எல்லோருமே இது குறித்த முறைப்பாடு செய்ய முன்வருவதில்லை. பெரும்பாலானோர் தங்களுக்குள் புதைத்துக் கொள்கின்றனர். முறையிட்டுவிட்டு அதன்பின்னர், அதே இராணுவப் பிரதேசத்தில் தனக்கும் தனது குடும்பத்தினருக்குமான பாதுகாப்புக்கு எந்த உத்தரவாதமுமில்லை என்பதை அவர்கள் அறிவர். அடுத்தது சமூகத்தின் முன் தனக்கு ஏற்படக்கூடிய அவமானத்தையும் எதிர்காலத்தையும் பற்றிய பீதி முறையிடச் செய்ய விடாது.

இவ்வாறு தைரியமாக முறையிட வருவோர் மிக மிக சிலரே அவர்களும் தொடர்ந்து அதே உறுதியுடன் இருப்பதில்லை. அதற்கான காரணம், அவர்களுக்கு இது குறித்து ஆதரவாக இருந்தவர்கள் படிப்படியாக குறைவது. பாதிக்கப்பட்ட பெண் கூட அச்சம்பவத்தின் மீதான ஆத்திரத்தை காலப்போக்கில் இழந்து விடுவர். தொடர்ந்து வரும் மிரட்டல், பீதி எதிர்காலம் குறித்த அச்சம் என்பனவும் இதற்கு காரணமாகிவிடுகின்றன. கோணேஸ்வரி வழக்கு குறித்த பணிகளில் ஈடுபட்டு வந்த பெண்கள் அமைப்பொன்றைச் சேர்ந்த பெண்ணியவாதி-யொருவர் இது குறித்து கருத்து தெரிவிக்கையில் மட்டக்களப்பில் இப்படிப்பட்ட ஒரு சம்பவத்தில் பாதிக்கப்பட்ட பெண் ஆரம்பத்தில் வழக்கு தொடர்வதற்கு காட்டிய ஆர்வமும், உற்சாகமும் தற்போது எதிர்மாறாக காணப்படுவதாகவும், வழக்குக்கே சமூமளிப்பதை தவிர்த்து வருவதாகவும் தெரிவித்தார். இந்த நிலைமைகளை சரியாக விளங்கிக் கொள்ள வேண்டியிருக்கிறது.

வெளித்தெரியப்பட்ட பல சம்பவங்கள் குறித்து போதுமான விபரங்களை அறிய முடியாதுள்ளது. அவை குறித்து சொல்ல பாதிக்கப்பட்டவர்கள் முன்வருவதில்லை. அவை பற்றிய பதிவுகளை எங்கும் பெறுவதும் இலகுவானதல்ல என்பதை வாசர்கள் அறிவீர்கள்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கற்பு-ஒழுக்கம்-பாலுறவு: புனைவுகள்



பாலியல் குறித்த விடயங்கள் புலமைத்துவ மட்டத்தில் பேசுபொருளாக ஆக்கப்பட்டு வருகிறது. இதே வேளை பெண்களின் மீதான பாலியல் வன்முறைகளின் சமீபகால அதிகரிப்பையும் அதன் கொடுரத்தையும் கூடவே அறிந்து அனுபவித்து வருகிறோம்.

இளையதம்பி தர்சினி (வயது 20) எனும் பெண் இரு வருடங்களுக்கு முன் டிசம்பர் 18 அன்று கடற்படையினரால் கடத்திச் செல்லப்பட்டு பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கி கொலை செய்து பின் கல்லொன்றுடன் கட்டி கிணற்றொன்றில் போட்டிருந்த செய்தி அனைவருக்கும் தெரியும். இந்தச் செய்தி வெளியான போது கூடவே இந்தப் பெண்ணின் ஒழுக்கப்பண்புகள் குறித்த செய்தியும் சிலரால் பரப்பப்பட்டன. படையினரின் இந்த காடைத்தனத்தை மூடிமறைக்க அரச இயந்திரமும், பேரினவாத கட்டமைப்பும் அப்பெண்ணின் ஒழுக்கப்பண்புகள் மீது கேள்வியெழுப்பும் வண்ணம் கதைபரப்பியதை பெண்கள் அமைப்புக்கள் கண்டித்தன.

இத்தனை கோரத்தனத்தின் பின்னும் கூட அதிகாரத்துவம் படைத்த ஆணாதிக்கம் தனது "ஆண்மைத்துவ" செய்கையை மறைக்கவென, பலியாக்கப்பட்ட பெண்ணையே மீண்டும் மோசமாக சித்தரித்து அக்காடைத்தனத்தை நியாயப்படுத்தவோ அல்லது அதனை சமப்படுத்தவோ முனைவதைக் காண்கிறோம்.

இதுவரை காலமும் பாலியல் வல்லுறவுக்குள்ளான பெண்ணை ஆபாசமான உடையணிந்திருந்தாள், ஆபாசமாக காட்சி தந்தாள், மோசமான இடத்திலிருந்தாள், பிழையான பாதையில் வந்தாள், பிழையான நேரத்தில் வந்தாள் என வல்லுறவுக்கு நியாயம் சொல்லும் வழக்கம் சாதாரண சமூக பேச்சாடலில் மாத்திரமல்ல, சட்டத்தின் முன் கூட காணப்படுகிறது. இது ஒரு சட்ட வலுவாகவும் எதிரிக்கு சாதகமாக அமைந்த எத்தனையோ வழக்குகளைக் காண முடிந்திருக்கிறது.

எனவே தான் இந்த கற்பொழுக்கம் குறித்தும் பாலுறவு குறித்தும் நிலவுகின்ற விடயங்களை ஆராய்வது அவசியமாகிறது.

பெண்ணின் உயிரியல் அம்சமான பாலுறுப்புகள் மீதான அதிகாரத்துவத்துக்கு ஆணாதிக்க மரபு வழிவந்த சமூகபண்பாட்டுக் காரணிகள் முக்கியத்துவம் செலுத்துகின்றன.

ஆண்மை-பெண்மை குறித்த மரபுப் புனைவுகளின் வாயிலாகவும், ஐதீகங்களின் வாயிலாகவும் இது பலமாக வேரூன்றியுள்ளன. இவற்றை எமது கல்வி, தொடர்பூடக, மத விவகாரங்கள் பாதுகாத்து, வற்புறுத்தி வந்துள்ளன.

தனது கன்னித்தன்மையைப் பாதுகாக்க வேண்டியவளாக பெண் பழக்கப்படுத்தப்பட்டுள்ளாள். பாலியல் பற்றிய புரிதல் பெண்களுக்கு மறுக்கப்பட்டதாகவும், வரையறுக்கப்பட்டதாகவும் ஆக்கப்பட்டுள்ளன. பாலியலா-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

னது இரகசியத்துக்கும், அந்தரங்கத்துக்கும் உரிய ஒன்றாகவும் ஆக்கப்பட்டுள்ளது. அத்துடன் பாலியல் குறித்த வேட்கைகள், நாட்டங்கள் செயற்கைத்தனமானதாக கற்பிதம் செய்யப்பட்டுள்ளது. பேசாப்பொருளாக வைத்திருக்கப்பட்டாலும் கூட அது பெண்களுக்கு மட்டும்தான் என வரையறுக்கப்பட்டது. பெண்கள் மத்தியில் இவை பேசாப் பொருளாக இருக்கும் வரை அவர்களின் பாலியல் வேட்கைகள் தணிக்கப்படுமென்ற நம்பிக்கை ஆணாதிக்கச் சூழலில் நிலவுகின்றது.

ஒரு தாரமணம், குடும்பம், வம்சாவழி, ஒழுக்க மரபுகள் என்பன தனிச்சொத்துடைமையின் வழிமுறைகள். இதில் ஒரு தார மணமானது தந்தை வழிச்சமூகத்தின் இருப்புக்கு (அதாவது தனது விந்தின் விளைவேயென்பதை நிறுவுவதற்கு முன்நிபந்தனையாக திகழ்கிறது.) அவசியமாக இருக்கிறது. குறிப்பிட்ட குழந்தை தனது ஆண்மைத்துவத்தின் விளைவு-வெளிப்பாடு எனக் கருதுகிறது.

எனவே தான் ஆணாதிக்கமானது "கற்பு" என்பதை பெண்ணின் மீதான விதியாக ஆக்கிய அதே நேரம் ஆணின் "கற்பு மீறலை" அது தனது ஆண்மையின் வெற்றியாகவும் நிறுவி விட்டிருக்கிறது.

இந்த கற்பொழுக்கமானது வரலாற்று பூர்வமாகவே பெருங்கதையாடலாக சித்திரித்து வரப்பட்டுள்ளது. அதன் விளைவாக இது இன்றும் பலமாக நிறுவப்பட்டுள்ளது. இந்தக் கதையாடலின் மத்தியில் விஞ்ஞானபூர்வமான உண்மைகள் வைதீக பிற்போக்கு சக்திகளால் காலாகாலமாக காயடிக்கப்பட்டு வருகின்றன.

பெண்ணின் இந்த கற்பொழுக்கத்துக்கு பெண்ணின் மீதான "யோனி மைய வாதம்" ஆற்றுகின்ற பாத்திரம் கரிசனைக்குரியது. இது தான் பெண்ணின் மீதான இயற்கையான உயிரியல் "கொடுமை". இனப்பெருக்க மையமாக அமைந்திருக்கிற உயிரியல் இயல்பை பெண்ணின் கர்ப்பம் குறித்த பயத்திற்கும் அடிப்படையாக இது ஆகியது. இந்த பயத்தின் அடிப்படையிலேயே ஆண்-பெண் உறவு கட்டமைக்கப்பட்டு குடும்ப அமைப்பு எனும் அதிகாரத்திற்கு ஒடுக்கியது. "ஒருத்திக் கொருவன்" எனும் சித்தாந்தத்தை பெண்ணுக்கு திணித்தது. இவை கெடாமலிருக்க ஒழுக்கநியதிகள், கண்காணிப்புகள், விட்டால் போதுமென்ற உடனடித் திருமணங்கள்,

ஆணுறுப்பு லிங்கமாகவும் வழிபாட்டுக்குரிய ஒன்றாகவும் கருதப்படுகிறது. (இது எப்படி வழிபாட்டுக்கு வந்தது என்பதை பெட்டியில் உள்ள கதையைப் பார்க்க) அதற்கு கோவில் கட்டி கும்பிடுகின்ற அதே நேரம் பெண்ணின் யோனியானது தீட்டு, தூய்மை, துடக்கு, விலக்கு, அசிங்கம், அருவருப்பு, அவமானம் என்கின்ற புனைவுகளையும், அதன் மீதான வெறுப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

பாலுறவு தவிர்த்தால் யோனியை ஒரு வேண்டத்தகாத ஒன்றாகவே ஆணாதிக்க சூழல் கற்பிதம் கொண்டிருக்கிறது. இன்றுள்ள தூஷண வார்த்தைகளைப் பார்த்தால் இதன் விளைவினை விளங்கிக் கொள்ள முடியும். நிலவுகின்ற தூஷண வார்த்தைகள் அனைத்துமே பெண்களின் பாலுறுப்புகளைக் குறித்து கேலி செய்கின்றவையாகவே உள்ளன. இதன் மூலம் வேண்டாதவரை அவமானப்படுத்த முடியும் என்கின்ற ஐதீகம் நிலவுகிறது. ஒருவரைத் துன்புறுத்த முடிவு செய்தால் எதிரிக்கு நெருக்கமான பெண்ணின் (தாய், சகோதரி, மனைவி) பாலுறுப்புகள் மீது கேலி செய்தால், அவமானப்படுத்தினால் கோபம் கொள்ளச் செய்யலாம் என்கின்ற ஐதீகமும் நிலவுகிறது.

அதே வேளை இதே யோனி புனிதம் கெடாமல் இருக்க வேண்டுமென்ற எதிர்பார்ப்புகளும், அவற்றுக்கான விதிகளும் கட்டுப்பாடுகளும் சுமத்தப்பட்டுள்ளன. ஆண் பல பெண்களுடன் கொள்ளும் பாலுறவுத் தொடர்புகள், ஆண்மையின் சிறப்பாகவும் பெண் தனது கணவனைத் தவிர்ந்த எவருடனும் வைத்துக் கொள்கின்ற பாலுறவுத் தொடர்புகளினால் அவளது "கன்னித்தன்மை" புனிதம் கெட்டதாகவும், கற்பிழக்கப்பட்டதாகவும், நடத்தை கெட்டதாகவும், ஒழுக்க


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மீறலாகவும் புனையுமளவுக்கு கருத்தியல்கள் கட்டமைக்கப்பட்டுள்ளன.

இன்றும் பாலுறவானது விஞ்ஞான பூர்வமான பரஸ்பர புரிதலுடனான கூட்டுச் செயற்பாடாக இல்லை. பாலுறவின் போது பெண்ணானவள் வெறும் போகப் பொருள் மாத்திரமே ஆண் விரும்பிய போது "சகலவற்றையும்" சகித்துக் கொண்டு இசைந்து கொடுக்கும் இயந்திரம் மாத்திரமே.



எனவே இந்த யோனி மையவாதம் தான் யோனியை மையமாகக் கொண்ட பாலுறவுக்கு அப்பால் - எல்லாமே வக்கிரம் என்ற புனைவையும் ஏற்படுத்தியது. எதிர்பாலுறவுக்கூடாகத்தான் (hetro sexual) பாலியல் இன்பம் கிட்டும் என்கின்ற புனைவுகளும் இதன் வெளிப்பாடே. எனவே தான் பின்னர் புட்ட உறவு, வாய் உறவு மற்றும் ஒரு பாலுறவு வரை எல்லாமே அபத்தமானதாகவும், வக்கிரம் கொண்டதாகவும், இயற்கைக்கு முரணானதாகவும், சட்டவிரோதமானதாகவும் பிரச்சாரம் செய்யப்பட்டன. இது ஆணின் பாலாதிக்கத்துக்கு அவசியமான ஒன்றாக இருக்கிறது.

மேலும் நிலவுகின்ற சமூக அமைப்பைப் பொறுத்தளவில் தனது சொந்த பாலுறுப்பு தவிர்த்து ஏனையோரின் பாலுறுப்புக்களை அருவருப்பாக பார்க்கின்ற உளவியல் ஆண்களிடம் இருப்பதாக சமூகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர். இதற்கு எதிர்மாறாக, பெண்கள் இருக்க கற்பிக்கப்பட்டுள்ளனர். கட்டாயப்படுத்தப்பட்டுள்ளனர்.

குறிப்பாக குழந்தைகளுக்கு குண்டி கழுவுவது முதல் கொண்டு ஏனையோரின் உள்ளாடைகளை கழுவுவது மற்றும் குழந்தைகள், பிள்ளைகளின்-ஏன் வீட்டிலுள்ள அனைவரதும் பாலுறுப்புகள் உள்ளிட்ட சுகாதார மருத்துவ விடயங்களில் அக்கறை கொள்வதும், ஏன், சொந்த பாலுறுப்பு மீதான சுகாதார மற்றும் மறு உற்பத்தி குறித்தும் சகல வழிகளிலும் பெண்ணே, பொதுவாக எந்தவித அருவருப்புக்குமுள்ளாகாமல் சகிப்புடன் பாலுறுப்பு நலன்களில் ஈடுபாடு கொள்ள கற்பிக்கப்பட்டுள்ளாள். இப்படியான பொறுப்புகளிலிருந்து விலகி வரும், ஆணாதிக்கத்திடம் இப்படிப்பட்ட அருவருப்புகள், வெறுப்புணர்வுகள் இருப்பது குறித்து பின்னென்ன ஆச்சரியப்பட இருக்கிறது.

எனவே தான் இந்த கற்பு, கன்னித் தன்மை, போன்ற மரபான ஐதீகங்கள் இன்று பாலியல் வல்லுறவை விளங்கிக் கொள்ள முடியாத அளவுக்கு கொண்டு சென்று விடுகிறது. சமூகத்தில் உள்ள பாலொடுக்குமுறைகளை இனங்காணாமல் செய்து விடுகிறது. குடும்பத்தில் கணவனால் பாலியல் வன்முறைகள் மேற்கொள்ளப்படுகின்ற வேளைகளில் அது அவனின் உரிமையாக கொள்ளப்படுகிறது. பெண்கள் அதனை சகிக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. இருக்கின்ற ஆணாதிக்க கட்டமைப்புடன் சமரசம் செய்து கொள்ளச் செய்துள்ளது. இந்த கட்டமைப்பின் மீதான மீறல் மேற்கொள்ளப்படுமாயிருந்தால், மீறியவளை நடத்தை கெட்டவளாக ஆக்கிவிட்டுள்ளது.

பாலியல் குறித்த இந்தப் புனைவுகளைத் தகர்ப்பதே பெண் விடுதலையை சாத்தியமாக்கும்.

இன்றைய பெண்கள் மீதான வன்முறைகளில் பாலியல் வன்முறையானது அதிகரித்து வருவதானது அதிகாரமற்ற பாலாரின் மீதான ஆண்களின் கையாலாகாத்தனத்தையே குறிக்கிறது. அதிகாரத்துவத்தின் அடக்குமுறைக்குள்ளாவதால் அதிகாரம் முதலில் அவசியம். இன்று இந்த அதிகாரத்துக்கான ஒரு பயணத்தையே மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. ஒரு புரட்சிகர சமூக மாற்றத்துக்கான பயணத்தில் தங்களின் விடுதலைக்கான பாத்திரத்தை ஆற்றுவது, விடுதலையில் அக்கறையுள்ள அனைத்து பெண்களினதும் கடமை.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# யுத்த காலங்களில் பெண்கள்...

**யுத்த காலங்களில் பெண்கள் எவ்வாறு பாலியல் வன்முறைகளுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதற்கு நமது இந்து மத புராணங்கள், இதிகாசங்கள் என்ன கூறுகின்றன என்பதை பின்வருமாறு பெரியார் விளக்குகிறார். பெரியார் சிந்தனை -3 இலிருந்து பெறப்பட்டவை இவை.**



எதிரியை தோற்கடிக்க எதிரியின் மனைவியை கற்பழிக்க சிவன் வழிகாட்டுகின்றார். இந்து மதத்தின் மூத்த கடவுள் சிவனுக்கும் சங்காசுரனுக்கும் 100 வருடமாக யுத்தம் நடந்ததாம். சங்கரன் என்ற அசுரனை கடவுளால் கொல்லமுடியவில்லையாம். ஏன் என்று ஆராய்ந்த சிவன் காரணத்தை கண்டறிந்தாராம். சங்கரனின் மனைவி கற்புடையவள் என்பதால் சங்காசுரனை அழிக்கமுடியாது எனக் கண்டாராம். சிவன் சங்காசுரன் வேடம் போட்டுச் சென்று துளசியை கற்பழித்தபின், சங்காசுரனைக் கொன்றாராம். இதன் பின் துளசி உண்மை அறிந்து "ஓ! விஷ்ணு, கல்நெஞ்சம் படைத்த வஞ்சகனே! என் கணவரைச் சதி செய்து கொன்று விட்டாய். நீ கல்லாக போ!"148 என்று சபித்தாள். மகாபாகவத புராணம் (9,24,25) இல் கீழ் சாதி பெண் இகழ்ந்தாலும், மேல் குலத்தைச் சேர்ந்தவன், பெண்ணின் கற்புரிமையை அழிக்க தர்மசாஸ்திரம் அங்கீகரிப்பதுடன், இது மேல் சாதிப்பிரிவின் பெருமையை கொடுப்பதாகும் என்று விளக்கி கற்பழிப்பை ஊக்குவிக்கின்றது. துளசி கீழ் சாதிப் பெண்ணாக இருப்பதால் அவளை கற்பழித்த சிவனின் வெற்றியை இந்து மதம் போற்றுகின்றது. இதை புராணமாக கூற, நாம் கேட்டு மௌனம் சாதித்து ஆணாதிக்க மரப்பில் அங்கீகரிக்கின்றோம். இந்த இந்து மதத்தை பெண்கள் எப்படி போற்றமுடியும்.

---

வரலாற்றில் மதயுத்தங்கள் முதல் ஆக்கிரமிப்பு யுத்தங்கள் வரை பெண்களை கைப்பற்றுவதும், கற்பழிப்பதும், தொடர் விபச்சாரத்தில் தள்ளுவதும், தமது -வைப்பாட்டியாக-வைத்திருப்பது என்ற ஆணாதிக்க கொடுரம் எதையும் இராவணன் செய்ததில்லை. இராவணன் சீதையை விரும்புகின்ற போது, அவளின் விருப்பமின்றி தொடுவதைக் கூட கைவிட்டவன். சீதையை இராவணன் தொடாது நிலத்துடன் தோண்டி சென்ற போது, சீதை தனது மேலாடைகளை களைந்து எறிந்த நிர்வாணமான நிலையிலும், இராவணன் காமம் கொண்டு சிதைக்கவில்லை. மாறாக பெண்ணை பெண்ணாக மதித்தான். இராவணன் பெண்ணை தொடுவதால் மண்டை வெடித்துவிடும் என்றால், கற்பழிப்பை வேறுவழியில் நடத்தியிருக்கமுடியும். இராமாயணத்தின் நீதி இராவணன் தளத்தில் இருந்து சொல்லப்பட வேண்டி பல்வேறு தரவுகளை உள்ளடக்கியதே ஒழிய, இதை மறுத்து

www.tamilarangam.net

இராமனின் ஆணாதிக்க வக்கிரத்தை சொல்லுவதே இராமாயணம்.

## திரௌபதி

இந்த ஐவரில் அருச்சுனன் பந்தயம் ஒன்றில் திரௌபதி என்ற பெண்ணை வென்று எடுத்ததை தொடர்ந்து, அவளை ஐவரும் தமது பாலியல் தேவைக்கு பயன்படுத்தினர். இவர்களிடையே இருந்த போட்டியைத் தணிக்க வேதவியாசன் ஆண்டு ஒருவர் அவளை வைத்திருக்க ஆலோசனை கூறினான். ஐவரின் பாலியல் தேவையை பூர்த்தி செய்யும் பொது மகளிர் என்பதால், அவளை துணிந்து பந்தயத்தில் பணயம் வைத்தனர். முன்பு பந்தயத்தில் வென்ற அப்பெண்ணை வேறு இடத்தில் வைத்தபோது தோற்கின்றனர். அவளை வென்றவர்கள் பொதுவிபச்சாரத்தில் உரிந்து பார்க்க, (இப்படி கூறிய வரலாற்றை தாண்டி எந்த இடத்திலும் அப்படி உரிந்த ஆதாரத்தை கொண்டிருக்கவில்லை. பாண்டவர்கள் யுத்த மற்றும் மரபை தாண்டி அநியாயமாக கிருஷ்ண சதி மூலம் நடத்திய யுத்த உபதேசம் மூலம் பார்ப்பனிய ஆதிக்கத்தை நிலைநிறுத்த, உரிந்த வரலாறு புதிதாக கீதையில் இணைக்கப்பட்டதே. இங்கு கீதையே புனைவானதுதான். ஆனால் துரௌபதை உரிந்த கதை இடைச் செருகலாக முன்னைய புனைவில் இணைக்கப்பட்டது.) பலர் முன்னிலையில் உரிந்த போது, முன்பு பொது விபச்சாரத்தில் பந்தயத்தில் வென்ற உரிமையுடன் அனுபவித்தவர்கள், ஒரு பெண்ணுக்கு நடக்கும் அநியாயமாக எந்த நிலையிலும் எதிர்த்து போராட முனையவில்லை. பெண் ஆணின் தனிப்பட்ட பந்தயச் சொத்து என்ற ஆணாதிக்க அடிப்படையில் உரிவதை பார்த்து நின்றனர். இங்கு யாரும் நீதியைக் கோரவில்லை.

இந்த திரௌபதை பண்டவருடன் வாழ்ந்த காலத்தில் கர்ணனுடன் உறவு கொள்ள துடித்ததை, கண்ணன் என்ற அடுத்த ஆணாதிக்க பொறுக்கி பாண்டவரிடம் கூறியதாக பண்டவர் வரலாறு. பீஷ்மனை நேரடி யுத்தத்தில் வெல்ல முடியாத அருச்சுனன், சிகண்டி என்ற அலிப் பெண்ணை அருச்சுனன் முன் நிறுத்தி(இங்கு பெண்கள் யுத்தத்தில் பணயம் வைப்பது நிகழ்கின்றது), அதன் மறைவில் நின்று சதி மூலம் கொன்றான். இப்படி நிறைய வரலாற்று மோசடியே நீதி நூலாக இருப்பதும், இந்து விளக்க நூலாக இருப்பதும், இவைகளை நம்புவதும் சமூக முட்டாள்த்தனத்தை காட்டுகின்றது. காட்டிக் கொடுப்பும், சதியும், மோசடியும் கொண்ட இந்த பாண்டவர் வரலாற்று நீதி, இன்று நாட்டை ஏகாதிபத்தியத்திடம் தாரைவார்க்கும் ஆணாதிக்க இந்து வானரங்களின் செயலை மறைமுகமாக ஊக்குவித்து நிற்கின்றது.

பாரதப் போரின் விளைவுபற்றிய அருச்சுனனின் கண்ணோட்டம் முற்றாக ஆணாதிக்கம் கொண்டதாக வெளிப்படுகின்றது.

"அதர்ம்மாபிபவால் க்ருஷ்ண! ப்ரதுஷ்யந்தி குலஸ்த்ரீய

ஸ்தரீஷீதுஸ்டாஸீ வார்ஷ்ணேய! ஜாயதேவர்ணஸங்கர"133

என்ற கூற்றின் அர்த்தம் " கண்ணா, அதர்மம் சூழ்வதனால் குலப் பெண்கள் கெட்டுப் போகிறார்கள். வருஷ்ணி குலத் தோன்றலே, பெண்கள் கெடுவதனால் வருணக் குழப்பம் உண்டாகிறது"133 என்று கூறும் போது, வருணக் கலப்பையும், பெண்ணின் கற்பையும் குறித்தே கவலைப்படுகின்றான் இதனால் அமைதியை விரும்புகின்றான். இதே போல் வர்க்கமுரண்பாடற்ற அமைதியான சுரண்டலை நடத்த விரும்புவோரும், சொத்து சிதைவை தடுக்கவும், ஆணாதிக்க சிதவை தடுக்கவும் என சமுதாயத்தின் சூறையாடல்கள் மீதே, தனிமனித உரிமைகளை பேணமுனைகின்றனர்.

பார்ப்பனியம் தனது எதிரிகளை இட்டு பகவத் கீதையில் அவர்களின் பிறப்பை இழிவுபடுத்தியே சாபம் இடுகின்றது.

"தானஹம் த்விஷத க்ரூரான் ஸம்ஸாரேஷீ நராயமானன்

கஷபாம்ப ஜட்ரமஸீபானா ஸீரீஷ்வேவ யோனிஷீ "133

இதன் அர்த்தம் "என்னைப் பகைக்கும் கொடியோரை- உலகத்தின் எல்லாரிலும் கடைப்பட்ட இந்தக் கீழ்மக்களை நான் எப்போதும் அசுரயோனிகளில் பிறக்கும்படி எறிகிறேன்."133 என்று இழிந்த சாதிகளை ஆணாதிக்க வக்கிரத்துடன் உருவாக்கிய சாதித்திமிரை இது வெளிப்படுத்துகின்றது. கடவுள்களின் இந்த திமிர்பிடித்த சாபங்கள் எல்லாம் நிஜ உலக ஆணாதிக்க பார்ப்பனிய திமிர்கள்தான். இந்த தீமிரில் பிதற்றுவதைப் பார்ப்போம். மறுபிறவியில் கரடி, சிங்கம் முதலியவற்றின் யோனிகளில் பிறக்க பண்ணுவேன் என்று கூறத் தயங்கவில்லை. இதை மேலும் பார்ப்போம்.

"ஆஸீரீம் யோனிமாபான்னா மூடா ஜன்மனி ஜன்மனி

மாமப்ராப்யைவ கவுந்தேய! ததோயாந்த்ய யமாம் கதி "133

இதன் அர்த்தம் "குந்தியின் மகனே, பிறப்புதோறும் அசுரக் கருக்களில் தோன்றும் இம்மூடர் என்னை யெய்தாமலே ஒன்றுக்கொன்று மிகவும் கீழான பிறவியை அடைகிறார்கள்"133 என்று அருச்சுனக்கு கூறும் போதே சாதியத்தை கட்டிக்காக்க பிறப்பை அடிப்படையாக கொள்ள ஆணாதிக்கத்தை ஆயுதமாக கையாள்வதைக் காணமுடிகின்றது.

# லிங்க வழிபாடு!

பிரம்மா நடத்தும் வேள்விச் சாலைக்கு சிவன் சென்றார். வேள்வி மண்டபத்தில் சிவபெருமான் நிர்வாணமாக, காம விகாரத்தோடு குடிபோதையுடன் வார்த்தையில் எழுத முடியாதபடி அவ்வளவு ஆபாசமாக நடந்து கொண்டார்.

சிவனின் காம நிலையைக் கண்டு ரிஷி பத்தினிகள் அதிர்ச்சியும், ஆச்சரியமும், அச்சமும் கொண்டனர். சிலர் வீடு நோக்கி ஓட்டம் பிடித்தனர். சிலர் காம மோகத்தில் நிர்வாணமாக இருந்த சிவனைத் தழுவி இன்பம் பருகினர்.



இதனைக் கண்ட ரிஷிகள் மனம் சகியாது மயங்கி வீழ்ந்தனர். உணர்வு வந்தபின் விழித்தெழுந்து சிவனை சபித்தனர். ரிஷிகளின் சாபத்தால் சிவனின் ஆண் அவயம் அறுந்து விழுந்தது. அதன் விளைவாக வானம், பூமி அதிர்ச்சி ஏற்பட்டது. உலகம் கிடுகிடுத்தது.

இதனால் ரிஷிகள் சிவனிடம் ஓடினர். திரும்ப சாந்தி நிலவ வேண்டினர். பின்னர் பார்வதி தேவியின் யோனியில் அமர்ந்து அமைதி பெற்றதாம் அந்த அவயம். அது சிவலிங்கமாக தோன்றி விட்டது.

ஆதீனங்களும் மடாதிபதிபதிகளும் நடத்தி வரும் சிவாலயங்களில் இது வரை தொழுது வழிபடும் சிவலிங்கம் தோன்றிய வரலாற்றுக் கதை இதுவே. இந்து கலாசாரம் ஆலயங்கள், விழாக்கள் மூலம் பரப்பிவரும் ஒன்றாகும். இதனை பதம் புராணம், ஸ்ரஸ்தி காண்டம் அத்தியாயம் 17 விவரிக்கிறது.

www.tamilarangam.net

# விதைத்தவைகள்

உங்களுக்குத் தெரியுமோ என்னவோ
எம் இனத்தின் ஒவ்வொரு மனிதரும்
கொல்லப்படுவதற்கென்றே படைக்கப்பட்டவர்கள்.

கசாப்புக் கடைக்காரனின் பின் வாசலில்
காத்திருக்கும் ஆடுகளைப் போல்
நாம் காத்திருக்கிறோம்.
எமை பலி கொண்டு
ஒரு தேவதையின் ஆட்சியை நிலைநிறுத்த
நீங்கள் நம்ப வேண்டாம்.

ஆனால் என் தாய் மண்டியிட்டுக் கதறுகிறாள்
சிதறுண்டு போன உடலங்களையாவது தன்னிடம் தரும்படி
அவள் அழுது புலம்புகிறாள்.
இரத்தத்தில் குளித்து பிய்ந்து போய் இருக்கும் உடல்களின்
மென் நெற்றி பொட்டுகளில்
முத்தமிட்டு புதைகுழியில் மூடுவதற்காய்.



இப்போதும் மருமாதா தன் வயிற்றிலும்
மார்பிலும் அடித்துக் கதறுகிறாள்.
அந்த 38 பேரின் சாட்சியாக அவள் உள்ளாள்.


நீங்கள் என் தாயின் வயிற்றில் விதைத்தவைகள்
அவள் கால்களுக்கிடையால்
இரத்தமாய் கொட்டும்
அப்போது நீங்கள் அதிர்ச்சியடைய வேண்டாம்

மீண்டும் பொறிப்பதற்கு
பயங்கரவாதிகள் என்ற வாசகம்
இல்லாமலா போய்விடும்!?

-கலா

www.tamilarangam.net

# பொட்டை முடிச்சு



நூற்றாண்டின் இரவுகளை முடிச்சவிழ்க்கிறேன்
இத்தும் புரிபிஞ்சும்
அசவின் கயிறுகள்.
உயிரின் சுவைகொண்ட
இரத்தத்தை நக்கியும்
கொடுவலிகளைக் குடித்தும்
பாய்கள்.
விந்தூறி நனைந்தும்
சாயம் வெழுத்தும்
எனது தலைமுறைகளின்
அசவு.
இறுகியும் இறுக்கியும்
பொட்டைமுடிச்சு.
தகப்பன்கள்
கணவன்கள்
மகன்கள்
தலைமுறைகளின் ஆதிக்கம்.....
எனது தாய் தனது
சேலைத்தலைப்பில்
முடிந்துவைத்திருக்கும்
சில்லறைகளாய்.

-தில்லை - சுவிஸ்

www.tamilarangam.net



# நினைவில்...
# தோழர் பொன். கந்தையா

கரவைதாசன்

வர்க்க உணர்ச்சியும், உண்மையான ஜனநாயகப் பிரியமும், புரட்சிகர உணர்ச்சியும் கொண்ட வர்களை எப்பொழுதும் கொம்யூனிஸ்டுகள் வசீகரிப்பதைப்போல் வேறெவரும் வசீகரிப்பதில்லை. ஐம்பதுகளில் இலங்கைத் தீவே வர்க்கத்துருவப்பட்டிருந்தபோது வடமராட்சியில் கம்யூனிஸ்ட்கள் தோழர் பொன் கந்தையா அவர்களை வசீகரித்திருந்ததில் வியப்பேதும் இல்லை!

அன்று தமிழ்மக்கள் பாராளுமன்ற அங்கத்தவராகத் தேர்ந்தெடுத்த ஒரேயொரு இடதுசாரி பாராளுமன்ற அங்கத்தவர் தோழர் பொன். கந்தையாதான். இல்லையேல் சரித்திரம் ஒட்டுமொத்த தமிழர்களையே பிற்போக்குவாதிகள் என்று நாமாகரணம் சூட்டியிருக்கும்.

தோழர் பொன்.கந்தையாஅவர்கள் 1956 இல் பருத்தித்-துறைத்தொகுதியில்தான் வெற்றியீட்டினார். (அந்நாட்களில் உடுப்பிட்டித்தொகுதியென்று ஒன்று இருக்கவில்லை. பின்னாட்களில்த்தான் பருத்தித்துறைத் தொகுதி இரண்டாகப்-பிரிக்கப்பட்டு பருத்தித்துறைத் தொகுதி தனியாகவும் உடுப்பிட்டித்தொகுதி தனியாகவும் உருவாக்கப்பட்டது.) அது 1953 ஹர்த்தால் மூலம் அந்நாள் இலங்கைப் பிரதம மந்திரியாகவிருந்த டட்லி சேனனாயக்காவை கொழும்பு துறைமுகத்தில் நின்ற போர்க்கப்பலுக்குள் தஞ்சம் புகும்படி வெருட்டியடித்த தொழிலாளர் போராட்டத்தின் பின் நடந்த தேர்தலாகும். அன்று நூறு தொகுதிகளில் லங்கா சமசமாஜக்கட்சி தேர்தலில் நின்றது. முன்னீடாக தேர்தல் காலத்திலேயே அமைச்சரவை அட்ட-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வணையைத் தயாரித்து தேர்தல் விஞ்ஞாபனத்தில் சேர்த்திருந்த காலம் அது. அன்று ஆட்சியைக் கைப்பற்றும் முன்னோக்கு லங்காசமசமாஜக் கட்சிக்கோ அல்லது இலங்கைக் கம்யூனிசக்கட்சிக்கோ இருந்திருந்தால் தொழிலாளிவர்க்கம் ஒரு துளி இரத்தமும் சிந்தாமலே ஆட்சியைக் கைப்பற்றியிருக்கலாம். அந்த மட்டத்திற்கு வர்க்கத் துருவப்படுத்தல் இலங்கை முழுவதும் நடைபெற்றிருந்தது. அந்தப் புறநிலைச் சூழல்தான் கந்தையாவையும் பாராளுமன்றத்திற்கு அனுப்பியிருந்தது. தோழர் பொன் கந்தையா அவர்கள் இலங்கைக் கொம்யூனிசக் கட்சியின் சார்பிலேயே போட்டியிட்டு வெற்றிபெற்றிருந்தார். அரசியலிலே புறநிலைக்காரணி மாத்திரமல்ல அகயவயக்காரணியும் தீர்க்கமான பாத்திரத்தை வகுப்பதாகும். இலங்கை முழுவதும் காணப்பட்ட வர்க்கத் துருவப்படுத்தலின் வீச்செறிவின் வெளிப்பாடாய் வடமராட்சியில் கந்தையாவும் அவரோடொத்த தோழர்களும் காணப்பட்டார்கள். அந்தத் தேர்தலில் இலங்கைக் கொம்யூனிஸ்ட் கட்சிக்கும், லங்காக சமசமாஜக் கட்சிக்குமிடையே தேர்தலில் போட்டியில்லா ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டிருந்தது. அதன் கீழ் இடதுசாரிகள் ஒருமுகப்படுத்தப்பட்டிருந்தனர்.

ஆனால்1960 தேர்தலிலே இந்தக் கட்சிகளிடையே போட்டியில்லா ஒப்பந்தம் நிலவவில்லை. 1960 உடுப்பிட்டித் தொகுதியில் கொம்யூனிஸ்ட்கட்சி வேட்பாளராகப் போட்டியிட்ட பொன் கந்தையாவை எதிர்த்து சமசமாஜக் கட்சி வேட்பாளரான ஆர்.ஆர். தர்மரத்தினம் போட்டியிட்டார். இடதுசாரி வாக்குகள் இரண்டாகப் பிரிந்தன. ஆதலால்தான் பொன் கந்தையா அவர்கள் தோல்வியினைச் சந்திக்க நேர்ந்தது. அந்தத் தேர்தலில் கிடைத்த கொம்யூனிஸ்ட் வாக்குகளையும் லங்காசமசமாஜக் கட்சிக்குக் கிடைத்த வாக்குகளையும் கூட்டினால் அன்று தேர்தலில் வெற்றிபெற்ற எம்.சிவசிதம்பரத்திற்குக் கிடைத்த வாக்குகளிலும் பார்க்க பல ஆயிரம் கூடியதாகும்.

எழுபத்தியேழு தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி ஒரு சிறுபான்மைத் தமிழரை வேட்பாளாராக நியமிப்பதென்று முடிவெடுத்தது. சிறுபான்மைத் தமிழரைப் பெரும்பான்மையாகக் கொண்ட கோப்பாய் தொகுதியிலேயே நியமிக்க வேண்டும் என்று பலரும் பிரேரித்திருந்தனர். அதற்குப் பதிலிறுத்த அமிர்தலிங்கம் "நாம் கோப்பாயிற் போட்டியிட்டால் வெற்றியீட்டுவது உத்தரவாதமில்லை. ஒரு சிறுபான்மைத்தமிழர் வெற்றியீட்டக்கூடிய வாய்ப்பு உடுப்பிட்டியில்தான் இருக்கிறது. அந்தத் தொகுதி கொயூனிஸ்ட் கந்தையா வெற்றியீட்டின தொகுதியாகும்." எனக் கூறினார். அதன் பின்பே உடுப்பிட்டித் தொகுதியில் ஒடுக்கப்பட்டவர்களுள் ஒருவரான திரு.த.இராசலிங்கம் தேர்தலிற் போட்டியிட்டு வெற்றியீட்டினார்.

உடுப்பிட்டி கிராமசபைத் தலைவராக வரலாறு முழுவதும் எண்பதுகளில் கிராமசபை கலைக்கப்படுமட்டும் சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த ஆர்.ஆர். தர்மரத்தினமே இருந்தார். வல்வெட்டித்துறையின் நகரசபைத் தலைவராக திருப்பதியென்ற கொம்யூனிஸ்டே அறுபதுகளின் பின்பகுதி மட்டும் இருந்தார். பருத்தித்துறை மாநகரசபைத் தலைவராக அறுபது மட்டும் கொம்யூனிஸ்டான சேனாதிராசாவே இருந்தார்.

1942 இல் கண்டியிலுள்ள போகம்பரைச் சிறையிலிருந்து தப்பியோடிய என்.எம் பெரேராவும் பிலிப் குணவர்த்தனாவும் வல்வெட்டித்துறையினூடேயே தப்பிச் சென்றனர். அந்த மட்டத்திற்கு அந்தப் பிரதேசத்தில் இடதுசாரிச் சம்பிரதாயம் இருந்தது.

அந்த நாட்களில் அந்தப் பிரதேசத்திலுள்ள கற்சுவர்கள், மதில்கள், சுமைதாங்கிகள், கிணற்றுச் சுவர்கள், கிட்டங்கிகள், மதகுகள் என்று பார்த்த இடமெல்லாம் சிவப்புப் பெயிண்டால் கீறப்பட்ட அரிவாளும் சுத்தியலும் சின்னம் கண்கொள்ளாக் காட்சியாகத் தோன்றும். வீட்டு நிலைகளிலே

www.tamilarangam.net

கூட அரிவாளும் சுத்தியலும் பொறிக்கப்பட்ட நிலைகளைக் காணலாம். பெண்கள் அணிந்திருந்த தாலியின் குடத்தில்கூட அரிவாளும் சுத்தியலும் பொறித்திருந்ததாகக் சிலர் சொல்லக்கேள்விப்பட்டிருக்கின்றேன்.. பொன். கந்தையாவின் உருவப் படங்கள் ஏறத்தாள எல்லா வீடுகளிலும் வைக்கப்பட்டிருக்கும். கம்பர்மலையென்ற கிராமத்திலுள்ள இரண்டு வாசிகசாலைகளிலும் பொன். கந்தையாவின் உருவப் படங்கள் மாலை அணிவிக்கப்பட்டு அதன் உள் அறைகளில் இன்றுவரை வைக்கப்பட்டிருக்கிறது. கரவெட்டிகிழக்கு வளர்மதிக்கிராமத்தில் இன்றும் பொன்கந்தையா அவர்களின் நினைவுதினம் கொண்டாடப்பட்டு வருகிறது. கன்பொல்லைக்கிராமத்தில் கனுவில் சனசமூகம் என்னும் பெயரினிலேயே அவர்களது வாசிகசாலை அமைந்திருந்தது. அதன்தலைவராக வ.தங்கமணி அவர்களும் அவரைத் தொடர்ந்து ஆசிரியர் க.இராசரத்தினம் அவர்களும் தலைவராக இருந்தபோது பொன்கந்தையா அவர்களது நினைவு தினம் தொடர்ச்சியாக நினைவுகூரப்பட்டு வந்திருக்கிறது. 1966க்குப் பின் சாதியத்திற்கு எதிரான போராட்டத்தில் கைக்குண்டு தயாரிக்கும்போது வெடிவிபத்து ஏற்பட்டு கன்பொல்லைக் கிராமத்தினைச்சேர்ந்த மூன்று போராளிகள் தோழர்கள் மாணிக்கம்.சீவரத்தினம், கந்தன்.செல்வராசா, கிட்டினர்.வேலும் மயிலும் (நாகேஸ்) ஆகியோரின் தியாகத்தின் பின் அக்கிராமத்தில் அத்தியாகிகளின் நினைவு தினம் முன்னிறுத்தப்பட்டு இன்றுவரை நினைவு கூரப்பட்டு வரும்பொழுது கந்தையாவை இன்றிருக்கும் சந்ததி மறந்துவிட்டதா? எனச் சந்தேகிக்கத் தோன்றுகிறது. கம்பர்மலை அரசினர் பாடசாலையில் இன்றுவரை பொன். கந்தையாவின் உருவப் படம் சரஸ்வதி போன்ற சாமிப் படங்களோடு வைக்கப்பட்டுள்ளது. இப்படி வடமராட்சியிலுள்ள ஏறத்தாள எல்லாக் குக்கிராமங்களிலும் அவருடைய உருவப்படத்தினை பொது இடங்களிலும் அவரது தோழமைக்குரியவர்களது வீடுகளிலும் காணலாம்.

கந்தையாவை விளங்கிக் கொள்ள வேண்டுமாக இருந்தால், அவர் அரசியலுக்கு வந்த காலத்தில் அமைந்திருந்த சமூகபொருளாதார அபிவிருத்திகளைக் கருத்தில் கொண்டால்த்தான் அது விளங்கும். பொன். கந்தையா பாராளுமன்றத்தில் ஒரு மாதிரி கிராமம் ஆக்கவேண்டும் என்று பேசிய கம்பர்மலைக் கிராமத்தின் வாழ்சூழல் நிலமைகளையும் கன்பொல்லை, கரவெட்டிகிழக்கு வளர்மதிகிாரமம் போன்ற ஒடுக்கப்பட்ட மக்கள் கிராமத்து மக்களுடன் இவர் வாழ்ந்த வகையை எடுத்துப் பார்ப்போம். முதலில் கம்பாமூலையென அந்நாட்களில் அழைத்துவரப்பட்ட கம்பர்மலை:- /கம்பர்மலை/ உடுப்பிட்டிக்கும், வல்வெட்டித்துறைக்கும் இடையேயுள்ள குக்கிராமமாகும்.. இந்தக் கிராமத்திற்கு ஐம்பதுகளில் கந்தையா அரசியல் வேலைக்கு வந்தபொழுது அந்தக் கிராம சூழலையும் அந்த மக்களின் வாழ் நிலமைகளையும் கண்டு திடுக்கிட்டார். அந்தக் காலத்தில் அங்கே சேட்டுப்போடுகின்ற ஒரு ஆண்களும் அந்நாட்களில் கிடையாது. மேற்சட்டை அணிந்த பெண்களும் அருமையாகவே இருந்தார்கள். எஸ்..எஸ்.சி சித்தியெய்திய ஒரு மனிதர்கூட இருக்கவில்லை. உத்தியோகம் பார்க்கும் ஒரு மனிதர்கூட இருக்கவில்லை. ஒரு சரியான ஆளமான ரோட்டு இருந்திருக்வில்லை. மழைக்காலங்களில் வண்டில் சென்றால் வண்டில் சில்லு அச்சாணியளவுக்குப் புதைந்துவிடும். அங்கே மண்ணெண்ணை நெருப்புப்பெட்டி வாங்க ஒரு பெட்டிக் கடை கிடையாது. அங்கே ஏறத்தாள எல்லோருமே காணியற்ற குத்தகை விவசாயிகளும், கூலிவிவசாயிகளும், மரமேறுபவர்களும், மேசன் வேலைக்குப் போகும் அல்லது கல்லுடைக்க அல்லது கிணறு வெட்டப்போகும் கூலிகளுமே இருந்தனர். வயற்காணிகள், தோட்டக்காணிகள், பனங்காணிகள், குடியிருப்பு நிலங்கள், குளங்கள், கிணறுகள் எல்லாமே வல்வெட்டி, உடுப்பிட்டியைச் சேர்ந்த பெரிய வெள்ளாளர் என்று சொல்லப்படும் நிலக்கிழார்களுக்கே

www.tamilarangam.net

சொந்தமாக இருந்தது.

அந்நாளில் வல்வெட்டித்துறையே வல்வெட்டியின் சின்னத்துறைமுகமாக இருந்தது: வல்வெட்டித்துறையின் முக்கால்வாசிக் காணிகள் இந்தப் பெரிய வெள்ளாளருக்கே சொந்தமாக இருந்தது. கந்தையா அந்தப் பின்தங்கின கிராமத்திற்கு அரசியல் வேலை செய்ய முதல்நாள் வந்தபொழுது இரவுகாலம் ஆனதால் மீண்டும் தனது சொந்த இடமான கரவெட்டிக்குப் போவதற்கு அப்பொழுது போக்குவரத்து வசதிகள் இருக்கவில்லை. அந்நாளில் அங்கிருந்த போக்குவரத்து வசதி திருக்கல் வண்டிதான். அந்நியனான கந்தையாவைத் துயிலவைப்பதற்கு அந்தக் குடிசைகள்கூட அனுமதிக்க மறுத்தன. அன்று கந்தையாவோடு சொற்ப அறிமுகமான வைத்திலிங்கம் என்ற ஒருவர் தனது வீட்டிற்குச் சொற்ப தூரத்தி-


பொதுக்கூட்டத்தில்
எஸ்ஜே.வி.செல்வநாயகம்

லுள்ள செம்பாடு என்னுமிடத்திலுள்ள செம்மறிப் பட்டிக்கு நடுவேயுள்ள அட்டாளையில் துயில வைத்தாரென்று அந்தக் கிராமத்திலுள்ள வயதான கிராம வாசிகள் இன்றும் கூறுவர்கள். காடுமேடு சொந்தம். கல்லு முள்ளு இன்பம் என்றே அரசியல் வாழ்வைத் தொடங்கியவர். மணிக்கூடோ கலண்டரோ இல்லாத அந்தக் கிராமத்திற்கு அவர் ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் கிரமமாக வரத்தொடங்கினார்.

அந்தப் பிரதேசத்து மக்கள் செறிவின் நூதனமென்னவென்றால் பெரிய வெள்ளாள-ரின் அடிமை குடிமையாக வாழ்ந்த மக்களி-னங்களை நாட்டின் எல்லைப்புறங்களில் சுடலைக் கருகாமையில், முட்புதர்க்காட்டின் தொடக்கத்தில், பனங்கூடற் கரையில், வயல்வெளிக் கரையில் என்று குடியேற்றி வைத்திருந்தனர். நாட்டின் மையங்களில் ஒருவரையும் குடியிருக்க அனுமதிக்கவில்லை. இந்த உண்மையை முதலிற் கண்டுபிடித்து அம்பலப் படுத்தியவரும் பொன். கந்தையாதான்.

அந்தக் கிராமத்தில் பொன் கந்தையா அவர்கள் நடாத்திய முதலாவது போராட்டம்.- அந்தக் கிராமத்து எல்லையில் உள்ள வயல் நிலங்களை நிலக் கிளார்கள் வாரமுறையில் விவசாயம் செய்யும் படி விட்டிருந்தார்கள். வாரமுறையென்பது விளைச்சலில் மூன்றில் ஒன்றை நிலக்கிளாருக்குக் கொடுக்க வேண்டும். பருவ மழையை நம்பி விவசாயம் செய்பவர்கள் போகம் சரியான சாகுபடியைக் கொடுக்கவில்லையென்றால் நிலக்கிளார்கள் அப்பொழுது விவசாயம் செய்த விவசாயிட-மிருந்த காணியைப் பறித்து வேறு விவசாயிகளிடம் கொடுத்து விடுவர். அதனால் அங்கே தொடர்ந்து விவசாயிகள் குத்துவெட்டுப் பட்டுக்கொண்டிருப்பர். பருத்தித்துறை நீதவான்கோட்டில் கம்பர்மலை விவசாயிகளின் வழக்குகள் நிறைந்திருக்கும். அதிகமான சந்தர்ப்பங்களில் விவசாயி மூன்றில் ஒன்று தானியம் கொடுக்கவேண்டி-யதற்குப் பதிலாக அரைவாசி நெல்லைக் கொடுப்பதன் மூலம் சமரசத்திற்கோ, இணக்கத்திற்கோ வந்து விடுவர். ஒற்றுமை இல்லாமையை வர்க்கக் குணாம்சமாகக் கொண்ட அந்த விவசாயிகளோடு பொன். கந்தையா தொடர்ந்து கலந்துரையாடி, ஒரு சின்ன விழிப்புணர்வையும் விளக்கத்தையும் ஏற்படுத்தியிருந்தார். ஒருவர் செய்த வயற்காணியை இயற்கை வஞ்சித்ததால் ஏற்பட்ட துர்அதிஷ்டத்திற்காக நிலக்கிளார் பறித்து மற்றவரிடம் கொடுப்பதை அனுமதிப்-பதில்லை என்ற முடிவுக்கு வரப்பண்ணினார். இப்பேற்பட்ட இக்காட்டான பிரச்சனைகளை கூட்டுமுயற்சியால் தீர்ப்பதற்காக ஒரு /கிராமமுன்னேற்றச் சங்கம்/ ஒன்றை

www.tamilarangam.net

ஏற்படுத்தினார்.

இந்தக் கிராம முன்னேற்றச் சங்கத்தின் துணையோடு 1953 அந்தக்கிராமத்தில் ஒரு சனசமூக நிலையத்தை ஏற்படுத்தி அதற்குப் /பாரதிவாசிகசாலை/ என்ற பேரையும் சூட்டப்பண்ணினார். கம்பர்மலையென்று இன்று அழைக்கப்படும் அந்தக் கிராமத்தின் அக்காலப் பெயர் கம்பாமூலை என்பதாகும். ஒடுக்கப்பட்ட மக்களின் ஊர்பேர்களை அந்தக்காலத்து விதானைகளும் றிஜிஸ்டா-ரென்று சொல்லப்படும் பதிவுகாரர்களும் மணியகாரர்களும் கொச்சையாகப் பாவிப்பதை கந்தையா பலமுறை எதிர்த்திருந்தார். கந்தையா கம்பாமூலையைக் கம்பர்மலை என்று மாற்றும் படிக்கு கிராமச்சங்கத்திற்கு புத்திமதி கூறிமாற்றியதோடு இனிமேல்வரும் பதிவுகளை /கம்பர்மலை/ என்று பதியும்படி கிராம முன்னேற்றச் சங்கத்தின் மூலம் அந்த விண்ணப்பத்தைத் தானே ஆங்கிலத்தில் எழுதி கிராம முன்னேற்றச்சங்க நிர்வாகி-ளிடம் கையெழுத்து வாங்கி விண்ணப்பித்தார். அந்தக் கிராமத்தை ஊடறுத்தச் செல்லும் சேறும் புழுதியுமாக இருந்த ஒழுங்கைக்கு கிழக்குத்தெரு என்ற பெயரே அந்நாளில் இருந்தது: அந்தக் கிழக்குத்தெருவை பாரதிவீதியென்று அழைக்கும்படி புத்திமதி கூறினார். கிழக்குத்தெருவை பாரதிவீதியென்-றழைத்தால் தபாலை விநியோகிக்க மாட்டோ-மென்று தபால்காரர்களும், தபால்கந்தோரும் எதிர்ப்புத்தெரிவிக்கவே, கந்தையா போஸ்ட்மாடர் ஜெனறலுக்கு கிராமமுன்-னேற்றச் சங்கத்தின்பேரால் கடிதமொன்றை எழுதினார். கிழக்குத்தெருவை பாரதி வீதியென்றழைப்பதால் அரசாங்கத்திற்கோ தாபால் இலாகாவிற்கோ எந்தவித நட்டமும் ஏற்பாடாதென்றும் அந்த ஒடுக்கப்பட்ட கிராமத்தைத் தலைநிமிர அனுமதிக்க வேண்டும் என்றும் எழுதி அதில் வெற்றியும் கண்டார்.

இன்னும் அந்தக் கிராமத்தில் ஒடுக்கப்-டவர்களினுள்ளே ஒடுக்கப்பட்டவர்களாக ஒரு குறிச்சியிருந்தது. இரண்டு, மூன்று குளிநிலத்-திலேயே மூன்று நான்கு குடும்பங்கள் வாழும் அந்தக் குறிச்சியில் பதினாறு பதினேழு வயதிலேயே கலியாணம்செய்திடுவர்கள். பிள்ளைச் செல்வங்களும் மின்னலுக்கொன்று முளக்கத்திற்கொன்றாய் கீரியும் நாரியுமாகப் பொரித்திருந்து எப்பொழுதும் கலகலப்பும் குய்யோ முறையோ ஐயோ என்ற ஒலியோடும் ஓலத்தோடும் விளங்கிய அந்தக் குறிச்சியை மல்லிகைத்தெரு என்று அழைக்கும்படி வேண்டியிருந்தார்.

கந்தையாவின் அடுத்த சாதனை.-கம்பர்மலைக் கிராமத்திலேயுள்ள விவசா-யிகளும் கூலித்தொழிலாளர்களும் தங்களின் சொந்தப் பிள்ளைகளைத் தாங்களே சுரண்டி உழைத்துக் கொண்டிருந்தார்கள். அவ்வூர்ப்பிள்ளைகளில் சொற்ப வீதத்தினர் மாத்திரம் பக்கத்துரர்களிலுள்ள ஆரம்ப பாடசாலைக்குச் சென்றனர். அவர்களைக் கூட நாலாம் ஐந்தாம் தரத்தோடு மறித்து விவசாயத்தில் பயன் படுத்தவதோ கூலி வேலைக்கு அனுப்புவதோ வழக்கமாக இருந்தது. பால்மணம் மாறாத அந்தப் பிள்ளைகள் தமது தாய் தந்தையாரோடு தாமும் கோழியோடு எழும்பி, கோட்டானோடு உறங்குமளவுக்கு பன்னிரண்டு பதின்மூன்று மணித்தியாலங்கள் வேலை செய்வார்கள். இதிலே மாடு, ஆடுகளைப் பராமரிப்பதும் அடங்கும். அந்த ஊர்மக்களுக்கு கந்தையா துணிந்து சொல்லியிருந்தார். இந்த ஊர்மக்களை மாதிரிச் சொந்தப் பிள்ளைகளைச் சுரண்டுவதைத் தான் காணவில்லையென்று. அந்த ஊர்மக்களுக்குக் கந்தையா சொல்லியதோடு பள்ளிகூடத்திற்குப் போகாமல் மறிக்க வேண்டாமென்று தொடர்ந்து போராடிக்கொண்டிருந்தார். இவையெல்லாம் கந்தையா தேர்தலில் வெல்வதற்கு முன்பு நடந்த சம்பவங்கள். **கந்தையாவின் போராட்டம் வீண்போகவில்லை. கந்தையா அறுபதுகளின் முற்பகுதியில் மரணிக்க முன்னரே இந்தக் /கம்பர்மலைக்/ கிராமத்தில் பலர் எஸ்.எஸ்.சிசித்தியெய்தி, அரசாங்க எழுதுவினைஞர்களானதோடு ஏச்.எஸ்.சி சித்தியெய்தி சர்வகலாசாலைக்கும் போயினர்.**

www.tamilarangam.net

ஏன் அறுபதுகளின் பிற்பகுதியில் வல்வெட்டி வல்வெட்டித்துறை, உடுப்பிட்டியிலும் பார்க்கக் கூடியவர்கள் **இக்கிராமத்திலிருந்து சர்வகலாசாலைக்குப் போனார்கள் என்றால் மிகையாகாது.**

கந்தையா இதனோடு நிற்கவில்லை. அந்தக்கிராமத்தில் ஓர் மாதர் முன்னேற்றச் சங்கத்தையும் ஏற்படுத்தியிருந்தார். தான் தேர்தலில் வெற்றியீட்டியதன் பின் அந்த மாதர் முன்னேற்றச் சங்கத்தை கச்சேரியிற் பதிவு செய்து அதற்கு அரசமானியம் பெறும் வழிகளையும் செய்திருந்தர்ர். அதிலே பெண்களுக்கான தையற் கலை, நெசவு வேலை போன்றவை கற்பிக்க வழிதுறைகள் ஏற்பட்டதோடு தாய்மைப்பேறு பெறுபவர்களுக்கு அறிவுரைவழங்க பயிற்றப்பட்ட தாதிகள் மாதந்தோறும் வரும் வழிகளையும் செய்திருந்தார்.

அதனோடு அவர் நிற்கவில்லை. அங்கேயொரு முதியோர் கல்விக்கூடத்தை ஏற்படுத்துவதற்கு முயற்சித்திருந்தார். அது அந்த ஊர்மக்களின் பழமையை உடைக்க முடியாமையால் நிதர்சனமாகவில்லை.

கந்தையா தேர்தலுக்காக அரசியலுக்க வரவில்லை. கொம்யூனிச அரசியல் செய்பவர்களின் சம்பிரதாயமும் அதுவாகாது. லெனின் காத்துமழைக்குக் தாங்கக் கூடிய கொள்கையை வைத்திருந்தவர். கொண்ட கொள்கையை நிர்மாணிப்பதற்காக களைக்காமற் சளைக்காமற் பாடுபட்டவர். அதிலே அவர் பரிபூணர ஆனந்தைத்தைக் கண்டவர். லெனின் 1917 புரட்சிக்கு முன் கால்நூற்றாண்டுகாலம் அரசியல் வாழ்க்கை வாழ்ந்தவர். அவரது 30 வருடகால சுறுசுறுப்பான அரசியல் வாழ்வில் ஆறு வருடங்களே ஆட்சியதிகாரத்தில் இருந்தவர். அதற்கு முந்திய இருபத்தினாலு வருடத்தில் அவர் ஓர் சட்டவிரோதி, நாடுகாடற்ற நாய், ஒரு தலைமறைவுப் போராளி, ஒரு அரசியற் கைதி, ஓர் அகதி. இந்த இருபத்திநாலு வருடங்களும் அவர் உளத்திருப்தியைத் தவிர வேறு ஒரு லாபத்தையம் எதிபார்க்கவில்லை. புரட்சிக்குச் சில மாதங்கள் முன்னதாக 1917 ஜனவரியில் லெனின் ஒரு பிரசித்தமான கூட்டத்தில் கூறினார்:-தானும் தன்னோடு இணைந்துள்ள தோழர்களும் ரசியப் புரட்சிவரை உயிர்வாழ மாட்டோமென்று. இதுதான் பொன். கந்தையாவின் சம்பிரதாயம். மேற் சொல்லிய லெனின் பற்றிய வசனங்களை இந்தக் கட்டுரை எழுதுபவரின் முந்திய எழுத்தறிவில்லாத கொம்யூனிசப் பரம்பரை வாய்மொழி வாய் மொழியாகப் பரப்பியிருந்தனர். இதை எழுதும் எனக்கு இத்தகவல்களைத் தந்த அழகலிங்கம் அவர்கள் கூறினார். தனக்கு முதன் முதலாக ஏங்கல்ஸ்சின் வாழ்க்கை வரலாற்றைப் பற்றிக் கூறியவர் கற்கண்டன் என்ற கிணறு வெட்டும் தொழிலாளி. 1958 கிணறு வெட்டுவதை விடுப்புப்பார்க்கச் சென்ற பொழுது காலை உணவருந்தும் ஓய்வு நேரக் கலந்துரையாடலில் அவர் ஏங்கல்ஸ்சைப் பற்றிக் கூறியிருந்தர். அந்த ஊரிலுள்ள ஒரு நாளும் பள்ளிக் கூடம்போகாத கூலிவேலைசெய்யும் தொழிலாளர்கள் லெனினைப் பற்றி ரசியப்புரட்சியைப் பற்றி ரசியாவின் வாழ்நிலமைகளைப் பற்றி தொழிற்சாலைச் சௌகரியங்களைப் பற்றி கதைகதையாகச் சொல்லியதாக. அந்தப் படிப்பறிவில்லாத மக்களுக்கு கற்பூரபுத்தியும் போட்டோகிராபிக் ஞாபகசக்தியும் இயற்கை தந்த பாதுகாப்புப் பரிசாக இருந்தது.. அவர்கள் வாய்மொழி மூலமாக அனேக விடயங்களைக் கற்றிருந்தனர். **பலர் தங்களின் பிள்ளைகளுக்கு லெனின் ஸ்டாலின் என்றெல்லாம் பேர் வைத்திருந்தனர். ரசியாபோன்று தமது நாடும் ஒருநாள் வாழ்வதற்கு அனுகூலமுள்ள நாடாக வரும் என்பதிலே அசைக்க முடியாத நம்பிக்கை வைத்திருந்தனர்.** அவர்கள் இவையெல்லாவற்றையும் கட்டாயம் கந்தையாவிடமிருந்துதான் கற்றிருக்க வேண்டும். ஏனினில் **சண்முகதாசன் 1965 இன் பின்புதான் அவ்வூருக்கு வந்தார்.** அல்லது வி.பொன்னம்பலம் ஏ.வைத்திலிங்கம் டொமினிக் ஜீவா போன்றவர்களிடம் கற்றிருக்க வேண்டும். இவர்கள் எல்லோரும்

www.tamilarangam.net

அக்கிராமத்தின் வழமையான விருந்தாளிகள்.

கந்தையா 1956 இல் தேர்தலில் வென்று பாராளுமன்றம் போனது ஓர் அரசியற் சகாப்தமாகும். தென்னிலங்கையில் இடதுசாரிகள் அதிகம் பேர் தேர்தலில் வென்று பாராளுமன்றம் போன சகாப்தமாகும். பாராளுமன்ற முதற் கூட்டத்திலேயே கந்தையா தன்னை அமிலப் பரிசோதனையால் உரைத்துக்காட்ட வேண்டியிருந்தது.

"தனிச்சிங்களச் சட்ட மசோதா" பாராளுமன்ற விவாதத்தில் கொல்வின் ஆர். டி.சில்வாவின் விவாத மொழி நடையோ கர்ணகடூரமான பொறிப்பறக்கும் விவாதமாகும் . கொல்வின். ..தாய்மொழி எங்கே? தேவையில்லையென்றால் வெளிநாடுகளிலுள்ள விபச்சாரவிடுதியில் மாத்திரம்தான்..... இந்த நாட்டில் இரண்டுமொழியும் ஒரு நாடும் தேவையோ? அன்றேல் ஒரு மொழியும் இரண்டு நாடுகளும் தேவையோ?... என்ற கோடையிடிபோன்றதே கொல்வினின் பேச்சு நடையாகும். கொல்வின் அந்நாளில் மாக்சியத்திலிருந்து சீரழியாமல் இருந்தார்.

கந்தையா, இங்கிதமாகவும் இதமாகவும் பேசுவதற்குப் பழக்கப்பட்டவர். மிருதுவான மொழிநடையே மனதைக் கௌவக்கூடியவை என்ற எண்ணங்கொண்டவர். சிந்தனைச் செறிவும் மக்கள் விசுவாசமும் இல்லாதவர்கள் தான் மேடைகளிலே வார்த்தைமொங்கான்களைத் துணைக்கழைப்பவர்களாகும்.

பொன். கந்தையா தனிச்சிங்களச் சட்டத்தை எதிர்த்து வாக்களித்துவிட்டு பண்டாரநாயக்கா கொண்டு வந்த எல்லா முற்போக்கு நடவடிக்கைகளையும் ஆதரித்து வாக்களித்தார். **பொன். கந்தையா தனிச் சிங்களச் சட்டத்திற்கு எதிராக் உரையாற்றுகையில் இந்த நாட்டில் வாழும் தமிழ் பேசும் குடிமகன் ஒருவன், தனது மனைவியுடன் அல்லது தனது பிள்ளைகளுடன் அல்லது தனது உறவினர்களுடன் எந்த மொழியில் உரையாடுவது? என்பதைத் தீர்மானிக்கும்படி கோர வரவில்லை எனவும், பதிலாக இந்த நாட்டின் தமிழ்ப் பிரஜை என்ற வகையில், தனது அரசாங்கத்துடன் எந்த மொழியில் உறவாடுவது? என்பதைத் தீர்மானிக்கும்படி கோருவதாக மிகவும் நறுக்காகவும் மிக இங்கிதமாகவும் தெரிவித்தார்.** தமிழரசுக் கட்சி, தமிழ்க் காங்கிரஸ் கட்சி பின்னாளில் தமிழர் விடுதலைக்கூட்டணி, தமிழ் விரோதச் சட்டங்களை எதிர்த்து வாக்களித்த அதே வேளை யூ.என்.பியோ சிறீலங்கா சுதந்திரக் கட்சியோ கொண்டு வந்த எல்லாப் பிற்போக்கு நடவடிக்கைளையும் ஆதரித்தே வாக்களித்து வந்தனர். இவற்றில் **ஆகக் கேவலமானது இலங்கையிலிருந்து பிரித்தானியக் கடற்படைத் தளத்தை உடனே எடுக்கவேண்டுமென்ற தீர்மானத்தை கந்தையாவைத் தவிர்ந்த எல்லாத் தமிழ் பாராளுமன்ற அங்கத்தவர்களும் எதிர்த்தே வாக்களித்தனர். அதனோடு நில்லாமல் உடனே மகாராணியைத் தலையிடும்படி தந்தியும் அடித்தனர்.** இந்த வருந்தி அடிமையாகும் கேவலமான செயலுக்காகவாவது நான் இவர்களை எதிர்த்துத்தான் தீரவேண்டும் என்று கந்தையா பலமுறை பேசியிருக்கிறார்.

பொன். கந்தையா பாராளுமன்றம் சென்ற ஒரு மாதகாலத்தினுள்ளேயே கம்பர்மலைக் கிராமத்தில் ஒடுக்கப்பட்டவர்களின் பிள்ளைகளும் போய் கற்கக்கூடிய சாதிபேதம் பாராத ஒரு பாடசாலையை ஆரம்பித்தார். ஆரம்பத்தில் அந்தப் பாடசாலை கிடுகுக் கொட்டிலில் தொடங்கப்பட்டு அவ்வூரிலும் பாக்கத்தூரிலுமுள்ள சொற்ப படித்த இளைஞர்கள், யுவதிகளை ஆசிரியர்களாகக் கொண்டே ஆரம்பிக்கப்பட்டது. பிள்ளைகளைப் பள்ளிக்கனுப்பாத தாய் தந்தையர்களைத் தங்கள் பிள்ளைகளை புதிதாகத் தொடக்கப்பட்ட பாடசாலைக்கு அனுப்பும்படி வேண்டியதோடு அப்பாடசாலையை எப்பாடுபட்டும் ஒரு பாடசாலைக்குரிய அத்தனை தராதரமும் உள்ளதாக ஆக்கித் தருவேன் என்று அவர் உத்தரவாதமளித்தார்:

இந்தப்பாடசாலை தொடங்கப்பட்டதுதான் தாமதம் அவ்வூரைச் சூழவுள்ள நிலக்கிள்களும் சாதிவெறியர்களும் யாழ்பாணக்

www.tamilarangam.net

குடநாட்டிலுள்ள தனியார் இந்துப பாடசாலைகளின் சொந்தக்காரான இந்து போர்ட் இராசரத்தினத்தைப் பிடித்து அந்தப் புதிதாகத் தொடங்கப்பட்ட பாடசாலைக்குப் பக்கத்தில் துரிதகதியில் ஒரு பாடசாலைக் கட்டிடத்தை சீமெந்தால் கட்டி ஓடு போட்டு இந்துப் பாடசாலை ஒன்றைத் தொடங்கினார்கள். இந்தப் பிற்போக்குப் பாடசாலை கட்டத்தொடங்கிய செய்தியை ஊரவர்கள் போய் கந்தையாவுக்குச் சொன்னார்கள். சொன்னவுடன் அந்தக் கணமே கம்பர்மலைக்கு வந்து புதிதாகக் கட்டப்படும் பாடசாலைக் கட்டிடத்தைப் பார்வையிட்டார். அவர் மறுநாளே கொழும்புக்குப் பயணமாகி அப்பொழுது கல்வி மந்திரியாக இருந்த டபிளியூ.தகநாயக்காவோடு கதைத்து யாழ் குடாநாட்டில் கோரத் தாண்டவமாடும் சாதி ஒடுக்குமுறை சுரண்டல் போன்றவற்றை விளங்கப்படுத்தி கொட்டில் பாடசாலையை அரசாங்கத்தால் அங்கீகரிக்கப் பண்ணியதோடு அந்தப் பாடசாலையைச் சீமெந்தால் கட்டுவதற்கும் அதற்கான நிலத்தைக் கொள்வனவு செய்வதற்கும் தளபாடங்கள் வாங்குவதற்கும் வேண்டிய நிதியையும் ஒதுக்குவித்தார். கந்தையா அதனோடு நிற்கவில்லை. பக்கத்தில் சாதிவெறியர்களினால் தொடங்கப்பட்ட இந்துப் பாடசாலையை அங்கீகரிப்பதையும் தடைசெய்தார். சாதிவெறியர்கள் எப்படி முயன்றும் **அந்தச் சாதிபேத இந்துப் பாடசாலையை அரசாங்கம் அங்கீகரிப்பதைக் கந்தையா தொடர்ந்து தடைசெய்தார். ஈற்றில் இந்தப் பிரச்சினை பாராளுமன்றத்திற்கு எடுக்கப்பட்டது. பாராளுமன்றத்தில் திரு.எஸ் ஜே.வி. செல்வநாயகத்திற்கும் பொன் கந்தையாவிற்குமிடையே நீண்டவிவாதம் ஏற்பட்டது.**

பாராளுமன்றத்தில் கந்தையா:- கம்பர்மலை ஓர் இருண்ட ஒடுக்கப்பட்டவர்களும் வறியவர்களும் வாழும் பின்தங்கிய கிராமம். இந்தச் சமுதாய அமைப்பின் இருண்டகோடி அங்கேதான் அஸ்தமித்துள்ளது. அங்கேயுள்ள மக்கள் அனைவரும் குப்பையிற் பிறந்து குப்பையில் வளர்ந்து குப்பையில் மடிபவர்கள். அங்கே வீதியோ ஒரு பெட்டிக்கடையோ கிடையாது. அங்கே இன்றுவரை படித்தவர்கள் என்று சொல்லப்படுவதற்கு ஒருவருமில்லை. அங்குவாழும் அதிகமான மக்களுக்குக் குந்தியிருக்கக் குடிநிலம் இல்லையாகும். உயர்சாதி நிலச்சுவாந்தர்களால் அக்கிராம மக்கள் தலைநிமிரவிடாமல் காலங்காலமாக நசுக்கப்பட்டே வந்தார்கள். அந்த மக்களை நாகரீக உலகத்திற்கு அழைத்து வருவதற்காக ஏற்கனவே ஓர் அரசாங்க பாடசாலை தொடங்கப்பட்டுவிட்டது.

அப்பொழுது செல்வநாயகம் அங்கே இரண்டு பாடசாலை இருப்பது அந்த மக்களுக்கு இரண்டுமடங்கு வாய்ப்புகளை அளிக்கும்தானே. அக்கிராமத்திற்கு அது இன்னும் நல்லது தானே என்றார். அதை மறுதலித்த கந்தையா இந்த இந்துப்பாடசாலை வந்தால் அந்த அரசினர் பாடசாலையின் வளர்ச்சி குன்றிவிடும். அது மாத்திரமல்ல அங்கே இந்தப் பாடசாலையை அங்கீகரிப்பதென்பது சாதிவெறியை அங்கீகரிப்பதாகி விடும். இறுதியாக கந்தையா, தந்தை செல்வநாயகத்திற்கு தனிப்பட்ட முறையிற் சொன்னார். **"திரு. செல்வநாயகம் அவர்களே நீங்கள் உங்கள் தொகுதியான காங்கேசன்துறைத் தொகுதியின் பிரச்சனைகளைக் கவனியுங்கள்."** பருத்தித்துறை தொகுதி மக்கள் தங்கள் தொகுதியின் சுகதுக்கங்களைக் கவனிப்பதற்கும் அவர்களைப் பிரதிநிதித்துவப் படுத்துவதற்குமாக என்னைத் தேர்ந்தெடுத்துள்ளார்கள். ஆதலால் என்னுடைய தொகுதிப் பிரச்சனை எனக்குத் தெரியும்.

கந்தையா இந்தப் பாடசாலை தொடங்கப்பட்ட அனுபவத்தை யாழ் குடாநாடு எங்கணும் விஸ்தரித்தார். அவர் அன்று சிறுபான்மைத் தமிழர் மகாசபை என்று சொல்லப்பட்ட ஒடுக்கப்பட்டவர்களின் ஸ்தாபனத்தோடு சேர்ந்து இருபத்தொன்பது பாடசாலைளை உருவாக்கியிருந்தார்.

தகவல்: அழகலிங்கம், மு.தவராசா(தவம்)

நிறைவு அடுத்த இதழில்

# 35வது இலக்கியச் சந்திப்புத் தொடர் — ஸ்ருட்கார்ட 2008
























www.tamilarangam.net















மே 23-25 ஏற்பாடு செய்யப்பட்டிருந்த (INSD-International Network for Sri Lankan diaspora) புலம்பெயர்ந்த இலங்கையர்களுக்கான இணையம் மாநாடு ஒஸ்லோவில் INSD-German உடன் இணைந்து நோர்வே சுதந்திர ஊடக இயக்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இலங்கையின் போர்நிறுத்தம், பேச்சுவார்த்தையை மீள ஆரம்பித்தல், மனிதஉரிமை பேணல், ஊடக சுதந்திரம் ஆகியனவற்றை வலியுறுத்தி இம்மாநாடு நடந்து முடிந்தது. ஐரோப்பிய நாடுகளிலிருந்தும், இலங்கையிலிருந்து கலந்து கொண்ட இம்மாநாட்டின் முடிவில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை நோர்வே சமாதானத்தூதுவர் ஜோன் ஹன்சன் பவரிடம் கையளிக்கப்பட்டது.

www.tamilarangam.net

# மார்க்சியமும் தேசியப் பிரச்சினையும்

**ரெஜி டெப்ரேயுடன் ஒரு நேர்காணல்**

தமிழில்: வளர்மதி



ரெஜி டேப்ரே பிரெஞ்சு மார்க்சிய அறிஞர்,பிரெஞ்சு மார்க்சிய அறிஞரான அல்தூசரின் கீழ் தனது உயர்கல்வியை கற்றதுடன் 1960களில் கியுபாவில் ஹவானா பல்கலைகழகத்தில் பேராசிரியராக பணியாற்றியபின் பொலிவியப் புரட்சியில் சேயுடன் இணைத்துகொண்டவர். பல்வேறு மார்க்சிய ஆய்வு நூல்களை எழுதியவர். Revolution in the Revolution? புரட்சியில் புரட்சி? எனும் நூல் அதிகம் பேசப்பட்ட இவரது நூல்களில் ஒன்றாகும்.

முதலில், தேசம் குறித்த விவாதத்தில் கொஞ்சம் தத்துவமும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று நினைக்கின்றேன். நான் மார்க்சியத்தை முதன்முதலாக தீவிரமாக கேள்விக்குட்படுத்த ஆரம்பித்தது தேசம் பற்றிய பிரச்சினையில் தொடங்கித்தான். எதற்கும் அசைந்து கொடுக்காத அந்த அரணில் விழுந்திருந்த இந்த விரிசல்தான் மேலும் மேலும் அதன் உள்நோக்கிப் பயணிப்பதைத் தவிர்த்துவிட்டு கோட்டைக்கு வெளியே ஒரு சுற்று சுற்றிவர வாய்ப்பு ஏற்படுத்தித் தந்தது.... அதுதான் என்னை வெளியே விலகி நிற்க வைத்து, இன்னும் விரிவானதொரு சட்டகத்தில் வைத்து அதைப் பார்க்கும் வாய்ப்பைத் தந்தது. வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், வரலாற்றைப் புரிந்து

www.tamilarangam.net

கொள்ளும் முயற்சியில் மார்க்சியம் ஒரு முக்கியமான, தீர்மானகரமான கட்டம்தான் என்றாலும் அதுவே இறுதிக் கட்டம் அல்ல என்ற புரிதலுக்கு வருவதற்கு எனக்கு உதவியது.

**Le Nourel Observaten இதழில் சமீபத்தில் வெளியான தேசியப் பிரச்சினை குறித்து உங்கள் கட்டுரையொன்றில் தேசத்தை ஒரு வரலாற்று ரீதியாக கடந்து செல்லக்கூடிய (transitory) வகையினமாகப் பார்க்கும் கருத்தை நீங்கள் விமர்சிப்பது போலத் தெரிந்தது. "மொழியைப் போலவே தேசமும் பல உற்பத்தி முறைகளையும் ஊடறுத்துச் செல்கிற ஒரு மாறாநிலை மதிப்புரு (invariable)' என்று எழுதியிருந்தீர்கள். அப்படியென்றால் முதலாளியத்திற்கு முந்தைய உற்பத்தி முறைகளிலும் கூட தேசமும் தேசிய அரசுகளும் தொடர்ந்து நிலவும் என்பதாகச் சொல்ல வருகின்றீர்களா?**


ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து சிக்கலான பல கேள்விகள் வலைப் பின்னல் இங்கு எழுகிறது. இதில் உங்கள் கடைசிக் கேள்வியிலிருந்து - பொதுவுடமை உற்பத்தி முறையில் தேசம் பற்றியதிலிருந்து தொடங்க அனுமதியுங்கள். இங்கு நமது விவாதம் பொதுவுடமை உற்பத்தி முறை பற்றி இல்லையென்றாலும் அந்தக் கருத்தாக்கம் முதிர்ச்சியடையாத, சிறுபிள்ளைத்தனமான கற்பனாவாதக் கருத்தமைவுகளில் சிக்குண்ட ஒன்று என்பதை இச்சந்தர்ப்பத்தில் சொல்லி விடுவது அவசியம் என்று நினைக்கின்றேன். அதாவது, பொதுவுடமைதான் வரலாற்றின் இறுதி இலக்கு என்கிற கருத்து ஒரு கருத்துமுதல்வாத, இயந்திரவியல் வகைப்பட்ட கருத்தாகவே இருக்கிறது. இதை ஒரு தூய மார்ச்சியப் பகுத்தறிவுவாத (Pure Marxist Reason) கருத்தாக்கம் என்று சொல்வது இன்னும் சரியாக இருக்கும். பற்றாக்குறை (sacrcity) யை ஒழிப்பது, அரசு உலர்ந்து உதிர்வது, மூளை உழைப்பிற்கும் உடல் உழைப்பிற்கும் இடையிலான ஏற்றத்தாழ்வான உறவை ஒழிப்பது என்பன போன்ற கருத்தாக்கங்களை முன்வைக்கிறது என்ற அளவில் மார்க்சியத்தை ஒரு கற்பனாவாதக் கருத்தியல் என்று சொல்வது மிகவும் சரி என்றே நினைக்கிறேன். இதனால்தான் மார்க்ஸ் சிலவற்றை கற்பனாவாதச் சிந்தனையிலிருந்து அப்படியே எடுத்துக் கொண்டுவிட்டார். இவை குறித்த தீவிரமான கேள்விகள் எதுவும் எழுப்பாமலேயே விட்டுவிட்டார். பொதுவுடமை உற்பத்தி முறை என்று சொல்லப்படுவது எல்லாம் நகர்ந்து கொண்டு போகிற தொடுவானம் என்பதற்கு மேலாக எதுவும் இல்லை. இப்போது நாம் அரசு 'உலர்ந்து உதிர்வது' பற்றியும், இன்னும் சமீபமாக பற்றாக்குறையை ஒழிப்பது பற்றியெல்லாம் கூட சில நல்ல தீவிரமான புரிதல்களுக்கு வந்திருக்கிறோம் பாடங்கள் கற்றுக் கொண்டிருக்கிறோம். எப்படியிருந்தாலும், ஒரு உறவுநிலை என்கிற அளவில் வரலாறு நெடுக பற்றாக்குறை என்பது இருந்து வந்திருக்கிறது. மேலும், எல்லாவிதமான பற்றாக்குறைகளும் ஒப்பீட்டளவிலானவைதான் (relative). புதிய அடிவைப்பு என்பதே பற்றாக்குறையை இடைவிடாமல் தோற்றுவிக்கிறது என்கிற அர்த்தத்தில் இந்த ஒப்பீட்டுத்தன்மை அனைத்தும் தழுவியதாக (absolute) இருக்கிறது. கடைசியாக தானியங்கியாக மாற்றப்பட்ட ஒவ்வொரு இயந்திரமும் அது கிடைக்கப் பெறாத முந்தைய தலைமுறைகளுக்கு ஒரு பற்றாக்குறையாக, அரிதான பண்டமாகவே எப்போதும் இருக்கும். வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், பொருட்களுடனான மனிதனின் பொருளாதார உறவில் பற்றாக்குறை ஒரு தவிர்க்கவியலாத, பிரிக்க முடியாத காரணியாக இருக்கிறது. அதேபோல், சமூக உறவுகளில் அதிகாரம் என்பது மெல்ல மெல்ல மறைந்து விடும் என்கிற கருத்தாக்கம் கூட எந்தவிதமான பொருண்மை அடிப்படையும் அற்ற ஒரு கருத்து என்பதையும் நிறுவ முடியும். ஆனால் இப்போதைக்கு இந்தப் பிரச்சினையை கொஞ்சம் ஒதுக்கி வைத்துவிடுவோம் தேசம் குறித்த நமது விவாதித்திற்குத் திரும்புவோம்.

பொதுவுடமை உற்பத்திமுறை என்கிற கருத்தாக்கத்தின் கற்பனாவாதத் தன்மையைக் காட்டும் விஷயங்களில் மற்றொன்று அது அனைத்தும் தழுவியதாக (universal) சொல்லப்படுவது அதாவது, குறிப்பான பண்பாட்டுக்கு தேசியத் தனித்துவங்கள் மறைந்து போவதை அது எதிர்பார்க்கும் முறை. வரலாற்றின் நிரந்தரமான இயங்குசக்தியாக

www.tamilarangam.net

முரண்பட்ட வர்க்க சக்திகளுக்கு இடையிலான போராட்டமே இருந்து வருகிறது என்கிற கோட்பாட்டோடு எந்தத் தொடர்புமற்ற ஒரு கருத்துமுதல்வாதக் கருத்தாக்கம் இங்கு நம் முன் நிற்கிறது. மார்க்சிடம் தங்கிவிட்ட ஊகச் சிந்தனையின் (speculative thought) மிச்ச சொச்சம் (அதற்கும் மேலாக, அது இன்னும் சிக்கலான பிரச்சினையாகவும் இருக்கலாம்.) இது. எப்படியோ, ஆனால் Aufklarung இருந்து எடுத்துக் கொண்ட கருத்தாக்கம்.

உணர்வு, தேசத்தின் உட்கிடக்கை ஒரு மாறாநிலை மதிப்புரு. நிலப்பிரபுத்துவத்தின் அழிவு, இன்னும் பிற விஷயங்களினால் தோற்றம் பெற்ற தேசம், ஒரு வரலாற்று ரீதியாக கடந்து செல்லக்கூடிய வகையினம் என்பது உண்மையே என்றாலும், வரலாற்று ரீதியாக தீர்மானிக்கப்பட்டது. அதனால் உரு மாறுநிலை மதிப்புரு என்றே இருந்தாலும், மனிதத் திரள்களை பண்பாட்டு ரீதியில் ஒழுங்கமைவு செய்யும் அடிப்படையான முதல்நிலைக் காரணி



சரி தேசம் என்ற பல உற்பத்தி முறைகளையும் ஊடறுத்துச் செல்கிற ஒரு மாறாநிலை மதிப்புரு என்பது பற்றிய உங்கள் கேள்வியை எடுத்துக் கொள்கிறேன். இந்தக் கேள்வியிலேயே ஒரு பொறி இருக்கிறது. எப்படி? எப்படியென்றால், தேசம் என்பது வரலாற்று ரீதியாக தீர்மானிக்கப்பட்ட, உருவான ஒரு சமூக அமைவாக இருக்கிறது. இந்த அளவில் அது ஒரு மாறுநிலை மதிப்புரு (variable). என்றாலும், தேசம் வெளிப்படுத்தும் என்கிற வகையில் அது மாறாநிலை மதிப்புருவாகவும் இருக்கிறது. இதைத்தான் கிரேக்கர்கள் Polis என்று அழைத்தார்கள். இனக்குழு உறவுச் சமூகம், இரத்த உறவுமுறைச் சமூகக் காலங்கள் தொட்டு தற்காலத்திய தேசங்கள் வரை இது தொடர்ந்து கொண்டிருக்கிறது. இன்னும் ஏதாவது வடிவத்தில் தொடர்ந்து கொண்டிருக்கும்.

நீங்கள் ஆட்சேபிக்கவில்லையென்றால், உங்கள் கேள்வியை இன்னும் சற்று


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விரிவாகவே பார்க்கலாம். வரலாற்று ரீதியாக தீர்மானிக்கப்பட்ட தேசிய அரசின் வடிவத்திற்குள் நாம் சிக்குண்டுவிடக் கூடாது. அதை ஊடுருவி இந்த வடிவம் எதனால் ஆனது என்பதைக் காண முயற்சிக்க வேண்டும். வாழ்க்கையை புனிதமானதாகவோ தீண்டத்தகாததாகவோ ஆக்கிக் கொள்வதன் ஊடாக தம்மைத் தாமே ஒழுங்கமைத்துக் கொள்கிற, மனித இனத்திற்கே உரித்தான ஒரு இயற்கையான தேவையிலிருந்து இது எழுகிறது. தேசியப் பிரச்சினையின் உட்கிடக்கையாக இருப்பது இந்தப் புனிதத் தன்மைக்கான வேட்கையே. முதல் பார்வைக்கு இது ஏதோ ஒரு ஆன்மீகக் கருத்தாக்கம் போலக் கூடத் தோன்றக்கூடும். இதிருக்கட்டும். ஆனால் இப்போதுள்ள சோசலிச அரசுகள் அத்தனையையும் பாருங்கள். அவை அனைத்துமே தமது தாய் நாட்டைப் புனிதமானதாகவும் அதைக் காக்க வேண்டியது மண்ணின் மைந்தர்களது கடமை என்றும் உண்மையிலேயே உள்ளார்ந்து நம்புவதும் பேசுவதும் தெளிவாகவே தெரியும். . . . உதாரணத்திற்கு, தூர கிழக்கில் நிகழ்ந்த சீன - ரசிய மோதலின் போது யாலு நதியின் இரு கரைகளிலிருந்தும் வெளிவந்த இராணுவ இதழ்கள் அத்தனையும் 'புனிதம்' என்கிற வார்த்தையைப் பிரயோகித்தன. எங்கோ, ஏதோ ஆழத்திலிருந்து வருகிற இந்த சொல்லாக்கங்களை எங்கும் கேட்க முடிகிறது கியுபா, போலந்து ஏன் சீனா, ரசியா என்று எங்கும் தேசிய எல்லைகள் கேள்விக்குள்ளாகிற எந்த இடத்திலும் இவற்றைக் கேட்க முடிகிறது. ஆச்சரியம், இல்லையா. ஆனால் கடந்துபோன ஒரு காலத்தின் வழக்கிழந்து போய்விட்ட இந்த சொல்லாட்சிகள் ஏதோ தப்பித்தவறி, வாய்குழறி, தற்செயலாக, இயந்திரத்தனமாக ஒன்றிரண்டு விழுந்துவிடுகின்றன என்று ஒருவேளை நீங்கள் மறுக்க வரலாம். ஆனால், நாம் இதை அப்படி லேசாக எடுத்துக் கொள்ளக்கூடாது என்று நினைக்கிறேன். இது ஏதோ வாய்தவறி உளறியதாகவே இருக்கட்டும் ஆனாலும், நாம் இதை குறைந்தது நம் கவனத்திற்குரிய உளறலாகவாவது எடுத்துக் கொள்ளலாம் இல்லையா?

சரி, இன்னொரு கோணத்திலிருந்து இதைப் பார்ப்போம். தேசம் என்கிற இந்த நிகழ்வை மனித இனத்தின் இருப்பை ஒழுங்கு செய்து ஆள்கிற சில பொதுவான விதிகளில் வைத்துப் பார்க்க வேண்டும் என்று நினைக்கிறேன். இந்த இருப்பு மரணத்திற்கெதிராக போராட்டத்தில் வெல்லப்பட்ட ஒன்று. மனித சமூக அடைவுகளையும் அனல் (thermal) உள்ளாற்றல் அமைவுகளையும் அச்சுறுத்துகிற, பாதிப்புக்குள்ளாக்குகிற, கைக்குப்படாத, வகுப்படுத்த முடியாத ஆற்றலைக் கட்டுக்குள் கொண்டு வரும் முயற்சி, அதாவது கழிவாற்றலின் பற்றாக்குறைக்கெதிரான (entropy) போராட்டம் இது. கையகப்படுத்தப்பட முடியாத இந்தக் கழிவாற்றல் அச்சம் தருகிற ஒரு ஒழுங்கின்மை (chaws). இதில், புலன்களால் உணரத்தக்க அல்லது பருண்மையான இரண்டு அம்சங்கள் இருக்கின்றன. ஒன்று, என்ன செய்தாலும் திரும்ப நிகழ்த்த முடியாத, வாழ்விலிருந்து மரணத்தை நோக்கிய காலத்தின் நிறுத்தமுடியாத பயணம். மற்றது, ஒரு சமூகக் குழு (community) உடைந்து, வெறும் நிகழ்தகவின் (probality) கைகளில் விடப்பட்டுவிட்ட, எந்தவொரு ஒழுங்குசெய்யும் விதிகளுமற்ற நிலைக்குத் தள்ளிவிடுகிற, வெளி (space) சிதறடிக்கப்பட்டுவிட்ட நிலை. ஒழுங்கின்மையும் மரணமும் விளைவிக்கிற இரட்டை அச்சுறுத்தல்கள் இவை. இவற்றுக்கு எதிராக, மரணத்தை வென்று வாழ்வதற்காக, மனித இனம் இரண்டு அவசியமான தற்காப்பு விதிகளை, நிகழ்வுகளை உருவாக்கிக் கொண்டுள்ளது. இவை, எல்லா சமூக வடிவங்களிலும் இருப்பதனால் முதல்நிலைக் காரணிகளாக, மானுடவியல் காரணிகளாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

இவை, முதலாவதாக, காலத்தை வரையறுத்துக் கொள்வது அல்லது வேறு மாதிரியாகச் சொல்வதென்றால், ஒரு அனாதிகால ஆரம்பத்தை வகுத்துக் கொள்வது - Ark* என்ற அந்தப் பொருளில். இதன் அர்த்தம், காரணம் - விளைவு என்கிற முடிவில்லாத ஒரு பின்னோக்கியச் சூழலாக சமூக உருவாக்கத்தைப் பார்ப்பதிலிருந்து தப்பித்துக் கொள்வது. Polisன் புதிரான புரதான

www.tamilarangam.net

தோற்றம், நாகரீகத்தின் அல்லது கிறித்து சகாப்தத்தின் தோற்றம், இஸ்லாமிய சகாப்தத் தோற்றம் - இல்லாத ஒரு ஆரம்பப் புள்ளி குறித்துக் கொள்ளப்படுவது. இந்த ஆரம்பப் புள்ளி அல்லது சூன்யப் புள்ளி, இதுதான் கூங்குச் சுழலை (ritual repetition) அனுமதிக்கிறது ஆதிகால நினைவுகளை கூங்குச் சுழல், நினைவு விழாக்கள், கொண்டாட்டங்கள் - சுருங்கச் சொல்வதென்றால், திரும்ப நிகழமுடியாத காலத்தை வெல்வதைக் குறிக்கிற இந்த எல்லாவகையான மந்திரச் சடங்குகளையும், உருவாக்கிக் கொள்கிறது.

எந்தவொரு மனித சமூக அமைவிற்கும் உரிய இன்னொரு அடிப்டையான குறிப்பியக்கம் (gesture), ஒரு மூடுண்ட வெளிக்குள் தன்னை வரையறுத்துக் கொள்வது. புனிதம் என்பது – கோயில் என்ற அர்த்தத்தில் இங்கும் வந்துவிடுகிறது. கோயில் என்பதின் தோற்றம் எது? ஆதிகால பூசாரி அல்லது தேவதூதர்கள் தேடி அடைந்த, தம் கைகளை விண்ணை நோக்கி உயர்த்தி அறிவிக்கிற புனித வெளி புனிதச் சடங்குகள் நிகழ்த்துவதற்குரிய வெளி. அடிப்படையான இந்த குறிப்புணர்த்தல் எல்லாச் சமூகங்களின் தோற்றத்திலும், குறைந்தது அவற்றின் புராணங்களில் எல்லாம் பார்க்க முடிகிறது. ஆனால், இத்தகைய புராணங்கள் நிலவுவதே ஏதோவொரு உண்மையைக் குறிப்பதாக இருக்கிறது.


ஒரு உதாரணத்திற்கு, ரோம் நிறுவப்பட்டது பற்றிய புராணக் கதையை எடுத்துக் கொள்வோம். நான் ரோமைத் தேர்வு செய்தது அதனுடைய முக்கியத்தவம் கருதி. அது மட்டுமில்லாமல், மார்க்சியத்தில் கலந்திருக்கும் சில அனைத்துத் தழுவிய கருத்தாக்கங்கள், யூத - கிறிஸ்தவ பாரம்பரியத்திலிருந்து மட்டுமில்லாமல் ரோமிய அனைத்துத் தழுவியதன்மை (Roman Universalism) யிலிருந்தும் பெறப்பட்டதாக இருக்கலாம் என்பதும் ஒரு காரணம். ரோம் எப்படி நிறுவப்பட்டது என்பதற்கு வருவோம். ரோமுலஸ் தன் சகோதரனைக் கொன்றுவிட்டு தன் கலப்பை கொண்டு ஒரு காடை உழுகிறான். (அனாதிகால கால் இதுதானோ?) அந்த நகரம் கட்டி எழுப்ப வேண்டிய வெளியை இப்படித்தான் தீர்மானிக்கின்றான். இந்த இடம்தான் Pomaerium *. இப்படியாக, ஒரு குழுமம் (collectivity) ஒரு மூடுண்ட அமைப்பிற்குள் தன்னைத்தானே ஒழுங்கமைவு செய்து கொண்டு தன்னை கட்டியெழுப்பிக் கொள்கிறது. இந்த அர்த்தத்தில்தான், எல்லை வரையறுத்துக் கொள்வது (demarcation) என்பது ஒரு அடிப்படையான செயலாகிறது. இதே அர்த்தத்தில்தான் ரூகோ தனது சமத்துவமின்மை குறித்த சொல்லாடல் (discourse on equality) என்ற நூலில் இப்படி எழுதுகிறார்: - ஒரு துண்டு நிலத்தை வேலியிட்டுக் கொண்டு- இது எனக்குக் கொஞ்சம்'' என்று கவனமாகச் சொன்ன முதல் மனிதன். அவன்தான் சிவில் சமூகத்தைத் தோற்றுவித்தவன்'.* 'அரசு' என்று சொல்லாமல் 'சிவில் சமூகம்' என்று அவர் சொன்னது கவனத்திற்குரியது. எல்லை வரையறுத்துக் கொள்ளல் (enclosure) என்ற கருத்தாக்கத்திற்குள்ள சிறப்பான இடத்தோடும், அதாவது பொதுவில் அமைப்பாக இருக்கிற எந்த ஒன்றோடும் இதை ஒப்பிட்டுப் பார்க்கலாம். கழிவாற்றல் என்கிற கட்டுக்கடங்காத காட்டாற்றின் மீள்வருகை, ஒழுங்கான போக்கை மீறிக் கொண்டு ஒழுங்காற்றல் பாயும் அந்த நீரோட்டம், உள்ளடங்கிக் கொள்ளலால் அடையப் பெறுகிறது. ஒழுங்கின்மையைக் கட்டுக்குள் கொண்டுவரும் முயற்சியில் கழிவாற்றல் கழிந்து போகிறது. வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், அடிப்படையான ஒரு ஒழுங்கின்மை – ஒரு ஒழுங்கின்மை இல்லாதிருப்பது, எந்த விதிகளுமற்ற ஒரு சிதறுண்ட நிலை என்கிற பொருளியல் - குறித்த அச்சத்தின் விளைவாகவே, இந்த உணர்ச்சிக்கு இந்த முதல் நொடியில் மனித சமூகம் தோன்றுகிறது.

பொதுவில் அமைப்புக்கள் என்ற வகையில், நிலவுகிற மனித சமூக அமைப்புக்களின் நிலைமைகளில் தேசம் என்ற என்கிற இந்தப் புள்ளி ஒரு எதிர்நீரோட்டத்தில் அமைவு கொண்டிருக்கிறது. அதோடு மிகத் தெளிவாகவே வரலாற்று ரீதியாக உருவான இனக்குழுக்கள், இரத்தவழி உறவுகள் தொடங்கி மற்ற இரண்டாம் நிலை பண்பாட்டு உருவாக்கங்களான இனத்தொகுப்புகள் (ethnic


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

groupings) மக்கள் கூட்டங்கள் என்கிற தொடர்ச்சியான மற்ற மனித கூட்டிணைவுகளுக்குப் பிறகே தேசம் வருகிறது. என்றாலும், இதில் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய முக்கிய புள்ளி என்னவென்றால், தேசம் வரலாற்று ரீதியாக ஒரு கடந்து செல்லக்கூடிய வகையினம் என்கிற கருத்து, ஒரே நேரத்தில் சரியானதாகவும் தவறானதாகவும் இருக்கிறது என்பதுதான். தேசிய அரசுக்கும் இது பொருந்தும். ஆனால், இது மனித இயற்கையின் - மிகத் தவறாகப் பொருள் கொள்ளப்பட்டு விடுகிற சொல் இது – ஒரு அடிப்படையிலான முதல்நிலை



மாறாநிலை மதிப்புருவின் ஒரு குறிப்பான வடிவம்தான்.

அடிப்படையான குடும்ப முக்கோணத்தைப் போலவே இதுவும் ஒரு மாறாநிலை மதிப்புருதான் சொல்லத்தேவையில்லை. குடும்பம் ஒன்றும் ஏதோ ஒரு தெய்வீகமான ஒரு மாறாத அமைப்பு இல்லை என்பதை நானும் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் தாய், தந்தை, குழந்தை என்கிற உறவுமுறை ஒன்றுமே மாறாத, அடியோட்டமாக வருகிற, ஒரு மாறாநிலை மதிப்புருவாக – ஒரு உயிரியல் யதார்த்தமாக இருக்கிறது. தந்தைவழிக் குடும்ப அமைப்பிலிருந்து சிலக்குடும்ப அமைப்பு, இன்னும் வரலாற்று ரீதியான பல்வேறு சாத்தியப்பாடுகளின் ஒரு முழுத் தொகுதியின் ஊடாகவே நாம் வந்திருக்கிறோம். என்றாலும், அடிப்படையான இந்த மாறாநிலை மதிப்புருவின் மேலமர்ந்தே வந்திருக்கிறோம். தேசமும் இதேபோன்ற ஒரு அடிப்படைதான். ஒரு மூடுண்ட அமைவிற்கான தேவை, எல்லைகள், சுவர்கள் கொண்ட ஒரு உயிரியிலான ஒரு கூட்டுச் சமூகத்தை உயிர்ப்புள்ளதாக வைத்துக் கொள்ள உறவும் மூடல் என்கிற அளவில் அது ஒரு மாறாநிலை மதிப்புருவாக இருக்கிறது. இதனாலேயே, எது அதற்கு உள்ளே இருக்கிறது, எது வெளியே நிற்கிறது என்கிற வரையறுப்பு. உண்மைதான், வரலாற்றாசிரியர்கள் பல்வேறு காலங்களில் இந்த எல்லைகள் எவ்வாறெல்லாம் வரையறுக்கப்படுகின்றன என்பது பற்றியெல்லாம் ஆய்வு செய்யலாம். ஆனால் இது எல்லா அடையாளங்களும் வித்தியாசங்களைச் சுட்டுபவை, எல்லா அடையாளப்படுத்தல்களும் வகைப்படுத்தல்கள், என்கிற அடிப்படையான உண்மையை மறந்துவிடக் காரணமாகி விடக்கூடாது. சுற்றியிருக்கும் நிலைமைகளிலிருந்து வித்தியாசப்படுத்தாமல், அதற்கெதிராக நிறுத்தாமல், எல்லைகளை வரையாமல், சமூகத்தின் தனிநபர்களுக்கு எந்தவொரு பலன்பாட்டு அடையாளமும் இருக்கமுடியாது. இது எல்லாமும் அபௌதிகமானதாகக் (meta physical) கூடத் தோன்றலாம். ஆனால் இயற்கை அறிவியல் பூர்வமாகவும் நிரூபிக்க முடியும் என்று நம்புகின்றேன். நல்லகாலமாக 'கார்னோஷியன் புரட்சியின்' பயனாக இந்தச் சிந்தனைகளையெல்லாம் ஒழுங்குபடுத்திச் சொல்வதற்கு நமக்கு வசதிகள் கிடைக்கலாம்.

**இயக்க ஆற்றலியலில் வரும் "கார்னோஷியன் புரட்சி" யைப் பற்றியா சொல்கிறீர்கள்?**

ஆமாம், அனல் - இயக்க ஆற்றலில்தான். இது கொஞ்சம் அதிக அருவமான மாதிரியாகக் கூட இருக்கலாம். ஆனாலும், சற்று வளமான ஒன்று. இப்போது ஆற்றல் (enegy) என்கிற அடிப்படையிலும் ஏன் தரவு-ஆய்வுக் (data – procesing) கோட்பாட்டின் அடிப்படையிலும் கூட நனவிலி கூட குறித்து ஆராய முயற்சிகள நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இது நமக்கு

www.tamilarangam.net

இன்னும் துல்லியமான ஆய்வுக் கருவிகளைத் தருவதோடு தற்போதுள்ள அறிவுத் தொகுப்பை முற்றிலும் நிராகரித்து விடாமல் அதேநேரத்தில் அதைத் தாண்டிச் செல்வதற்கான புதிய அடிப்படையையும் தந்து நம்மை இன்னொரு பகுத்தறிவுத் தளத்திற்கு இட்டுச் செல்வதாகவும் இருக்கிறது.

சரி, இவையெல்லாம் மார்ச்சியத்தில் எதைக் கேள்விக்குள்ளாக்குகின்றன? என்னுடைய பார்வையில் 'இயற்கை' என்பதற்குரிய இடம் குறித்த அதன் கருத்தாக்கத்தை வரலாற்றை இயற்கையானதொரு நிகழ்வாக கற்பித்துக் கொள்ளவும் அதன் முதல்நிலைக் காரணிகளை - இயற்கையான காரணிகள் என்ற அளவில் - கழித்துக்கட்டி விடவும் மார்க்சுக்கு உதவும் இயற்கையை வரலாற்றுப்படுத்தும் முறையை குடும்பமும் தேசமும் தான் சமூக இருப்பின் இந்த முதல் நிலைக் காரணிகள்: பொதுவில் சொல்வதென்றால், குடும்பம் தலைமுறைகள், பாலியல் இவை குறித்த எல்லாமும் ஒரு பக்கம் நாகரீகங்கள், தேசங்கள் இன்னபிறவாக நாம் சொல்லும் பண்பாட்டு உருவாக்கங்கள் குறித்த எல்லாமும் இன்னொரு பக்கம். இந்தக் கருத்தாக்கங்களுக்கு மார்க்சியத்தில் எந்தத் துல்லியமான இடமும் பயன்பாடும் இல்லை என்பதாலேயே இவை குறித்த எந்தத் தெளிவான பார்வையும் மார்ச்சியத்திடம் இல்லாமல் போய்விட்டது.

வரலாற்றுப் பொருள்முதல்வாதத்தில் - இங்குதான் நாம் விண்ணிலிருந்து மண்ணுக்கு இறங்கி வருகிறோம் - மிக முக்கியமான, அதன் மையக் கருத்தாக்கம் ஒன்று இருக்கிறது. முற்றுமுழுதான கருத்துமுதல்வாதத்தோடு (absolute idealism) அது ஒன்றுபடுகின்ற இந்தப் புள்ளி, அதன் மோசமான பலவீனமும் கூட. மனிதன் தன்னைத் தானே படைத்துக் கொள்ளும் திறன்பெற்றவன் என்ற நம்பிக்கையே அது. வரலாற்றில் இருத்திப் பார்க்கும் போது, தன்னுடைய இருப்புக்கும், தற்போதைய நிலைக்கும் தானே காரணம் என்கிற புறக்காரணிகளின் தலையீடுகளற்ற, முற்றுமுழுதான ஒரு சுதந்திரத்தை மனிதன் பெறுகிறான் என்ற கருத்து அது. இயற்கைக்கு இடமே அளிக்காத ஒரு வரலாற்றுக் கட்டம் என்று புரிந்து கொள்ளப்படுகிற 'பொதுவுடமை'-யும் கூட இதே தவறை உள்ளடக்கியிருக்கிறது. பொதுவுடமை உற்பத்தி முறை பற்றி தொலைநோக்கான பார்வையோடு விளக்கங்கள் சொல்லும் சோவியத் பிரச்சார இலக்கியங்கள் எல்லாவற்றிலும் - உதரணத்திற்கு 22வது காங்கிரஸ் அல்லது 90 வருடங்களில் பொதுவு-டமைச் சமுதாயத்தைக் கட்டியெழுப்புவது பற்றிய 1962 ஆம் வருடத்திய திட்டம் - எப்போதும் விவசாயத்திற்கல்லாமல், தொழிற்துறையை முற்றுமுழுக்க இயந்திரமாக்கலுக்கே அழுத்தம் தரப்பட்டிருப்பது நாம் கொஞ்சம் கவனமாகவே அலசிப் பார்க்க வேண்டிய விஷயம். உருளைக்கிழங்குகளைப் பயிரிடுவதும் தானியங்களை விதைப்பதும் இயற்கையான காலச் சூழலுக்கு உட்பட்டவை ஆகையால், அவற்றை முழுமையான எந்திரமயமாதலுக்குள் கொண்டுவந்துவிட முடியாது. இது முக்கியமான ஒரு விஷயம். ஏனென்றால், ஏற்றத்தாழ்வான அளவில் சிரமங்கள் உடைய வேலைகள் எப்போதுமே இருக்கும் என்பதால் அது உழைப்பைப் பிரித்துவிடுவதிலும் பிரதிபலிக்கும். உருளைக் கிழங்குகளை வயலில் பயிரிடுவதை விட ஆய்வுக் கூடத்தில் கருத்துக்களை உருட்டிக் கொண்டிருப்பது சுலபம் என்பது தெளிவான விஷயம். ஆக, உருளைக் கிழங்குகளை யார் கையிலெடுக்கப் போகிறார்கள் என்பது பற்றி முடிவு செய்ய யாராவது ஒருவர் வேண்டும். அடிப்படையிலேயே ஒருவரும் செய்ய விரும்பாத வேலைகளோடு ஒப்பிடும்போது எல்லோருமே செய்ய விரும்புகிற வேலைகள் போட்டியின் காரணமாகவே அரிதாகிவிடும். இவற்றுக்கு ஆட்களைப் பிரித்துவிடுவதற்கு எப்போதுமே யாராவது ஒருவர் வேண்டும்.

ஆனால், சரியாக இது பற்றி மட்டும்தான் எதிர்காலப் பொதுவுடமைச் சமுதாயம் குறித்த அந்தத் திட்டங்களில் எதுவுமே பேசப்படுவதில்லை. இயந்திரமயமாக்கல் பற்றிய அந்த ஒரு பேச்சைத்தான் திரும்பத் திரும்ப கேட்க முடிகிறது. சோஷலிச விவசாயத்தில் உள்ள இந்தக் கடுமையான சிக்கல்கள் குறித்துப் பேசாமல் இருப்பதற்கும் தேசம் -


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இங்கு இயற்கை, ஒருவருடைய பிறந்த இடத்தோடு அவருக்குள்ள பிணைப்பு என்ற பொருளில் - குறித்த மௌனத்திற்கும் ஒரு காரியத் தொடர்பு இருக்கிறது என்று நினைக்கிறேன். நகரங்கள், தொழில்துறை, தொழில்நுட்பம் இன்னும் இதுபோன்ற பிறவற்றின் ஒழுங்கமைந்த பண்பிலிருந்து முற்றிலும் வேறுபட்ட, வேரோடு வேராக இருக்கிற, நம்மை முகத்திலடிப்பது போன்ற பொருண்மைத் தன்மை வாய்ந்த ஒரு வெளிக்கு உரிய விஷயங்கள் இவையிரண்டும். இதுவரைக்குமே தீவிரமாக கருத்தில் கொள்ளப்படாத மார்ச்சியத்தின் பலவீனமான புள்ளி இது. கோந்தா வேலைத் திட்டம் குறித்த விமர்சனத்தில் ‘உழைப்பே எல்லாச் செல்வங்களுக்கும் தோற்றுவாய்’ என்கிற கருத்தை, ‘இல்லை, உழைப்பும் இயற்கையும்’ என்று சொல்லி மார்க்ஸ் மறுத்திருந்த போதும் கூட ஏதாவது ஒரு புள்ளியில் இயற்கை என்பதைக் கையிலெடுக்காமல் உழைப்பு என்பது சாத்தியமில்லை என்பதை அவர் தெளிவாகவே உணர்ந்திருந்தார்.

தேசம் என்கிற கருத்தாக்கமே எல்லாக் கருத்தாக்கங்களிலும் பொருண்மையானது. அது குறித்து ஆன்மீகத்தனமான கருத்துருவாக்கம் ஒன்றும் இருக்கிறது என்பதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால், எனது அது வரலாற்றுப் பொருள்முதல்வாதத்திற்குள்ளேயே பொருள்முதல்வாதம் ஒரு அர்த்தத்தில் வரலாற்றுக்கு எதிராக கலகம் செய்கிற ஒரு கணத்தைக் குறிப்பதாக இருக்கிறது. இற்கு வரலாற்றுப் பொருள்முதல்வாதம் ஏறக்குறைய தான் விரித்த வலையில் தானே சிக்கிக் கொள்கிறது. தேசம் ஒரு இடதுசாரிக் கருத்தாக்கம் கூட இடது, ஆனால் தீவிர இடது இல்லை. எப்படி என்று விளக்குகிறேன். தன்முனைப்புவாதத்தை (voluatarism) அதன் பேரிலேயே களைந்துவிடுகிற கருத்தாக்கம் அது தன்முனைப்புவாதத்தை அரசியல் நடைமுறை கருத்துமுதல்வாத சிந்தனை முறைக்கு ஒப்பானது. பொதுவுடமை இயக்கத்தின் வரலாற்றை ஒருவர் எழுதினாரானால் தேசம் என்கிற யதார்த்தத்தில் மோதி இந்தத் தன்முனைப்பு வாதம் ஒவ்வொரு முறையும் தன் மண்டையை உடைத்துக் கொண்டது தெரியவரும் என்று நினைக்கிறேன். இந்த யதார்த்தம் , பொதுமைப்படுத்தப்பட்ட கருதுகோள் உருவாக்கம், வெகுஜனங்களின் பொறுப்பை தான் எடுத்துக் கொள்ளல், கோட்பாட்டுருவாக்கம் முன்னணிப்படைவாதம் போற்றவற்றுக்கெல்லாம் எதிரானது. களங்கமில்லாத தனித்தன்மை வாய்ந்தது. வெகுஜனமக்களை அணிதிரட்டும் முன்னணிப்படை அல்லது சோஷலிசத்தைக் கட்டியெழுப்பக் கிளம்பும் கட்சி போன்ற கருத்துக்கள் எல்லாம் பொதுவில் தேசத்திற்கு எதிரானவை (a-national); அல்லது குறைந்தது அவை தேசம் என்பதின் மீது நம்பிக்கை அற்றவை – அதனால் மண்ணைக் கவ்வ சபிக்கப்பட்டவை. தேசம் அதன் வரையறுப்பிலேயே அறிவுஜீவனத்திற்கு எதிரான ஏதோ ஒன்றைத் தன்னுள் கொண்டுள்ளது தன்முனைப்புவாதமோ அறிவுஜீவிகளுக்கேயுரிய நடைமுறையின் வடிவம் அறிவுஜீவனத்தின் அமைப்பு ரீதியான மொழிமாற்றம்.

மார்க்சியர்கள், தேசம் குறித்த தங்களுடைய கோட்பாட்டுப் புரிதலின் போதாமையைப் பற்றி எப்போதும் புலம்பிக் கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். இந்தக் ‘கோட்பாட்டு வறுமை’ ஏதோ தற்செயலான ஒன்றல்ல. மார்க்சியத்திடம் இயற்கை குறித்த கருதுகோள் எதுவுமே இல்லை என்பதாலேயே தேசம் அவர்களுக்கு கோட்பாட்டுருவாக்கம் தர மறுக்கிறது. நாம் செய்கிற உற்பத்தியைப் பற்றித்தான் அது கருதுகோள்கள் வைத்திருக்கிறது. நமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முடியாத – அதாவது, நாம் உற்பத்தி செய்கிற ஒன்றல்லாமல் நம்மை உற்பத்தி செய்கிற ஒன்றைப் பற்றி அதனிடம் என்ன கருதுகோள் இருக்க முடியும்? இது, மனித சாராம்சம் மீண்டெழுந்து தன்னைத்தானே கண்டுகொள்தல் - அதாவது, மனித இனம் தன் வரலாற்றைத் தானே உருவாக்கிக் கொள்கிறது என்கிற இளம் மார்க்சின் கற்பனைக்கு நம்மைத் திரும்பவும் இட்டுச் செல்கிறது. கருத்துமுதல்வாதக் கற்பனைக்குத் தனிச்சிறப்பான உதாரணம் இந்தக் கருத்தாக்கம். என்னுடைய பார்வையில் மார்க்சியத்தை மீளமுடியாத சுயமுரண்பாட்டிற்குள் தள்ளுவது இதுதான்.

மார்ச்சியத்தில் முழுமையான பொருள்முதல்வாதமாக இல்லாததும் இதுதான்.

இந்தக் கருத்துக்களையெல்லாம் ஒழுங்குபடுத்தித் தெளிவாகச் சொல்ல வேண்டும். ஆனால், ஒரு குறிப்பிட்ட வகையிலான மார்க்சியத்தின் குற்ற உணர்வாக தேசம் இருந்துவிட்டது. ஏதோ தற்செயலான ஒன்றல்ல என்று நினைக்கிறேன். தன்னால் வெற்றி கொள்ளப்படமுடியாத ஒன்று - இது வெறும் கோட்பாட்டளவில் மட்டும் இல்லை – குறித்த குற்ற உணர்வு அதற்கு இருக்கிறது. இப்போதைக்கு நமக்குச் சேர்ந்துள்ள அனுபவங்களின், அறிவின் அடிப்படையில் வைத்தும் பார்த்தாலேயே, மார்க்சியத்தின் மீது தீர்ப்பு சொல்ல தேசத்தால் முடியும் பாத்திரங்களின் தகுதியிடத்தை தலைகீழாக மாற்றிவிட முடியும். இந்தத் தீர்ப்பு மார்க்சியத்தை செல்லாக்காசாக்கவிடும் என்றோ மார்க்சியத்தை ஒழித்துக்கட்டிவிடும் என்றோ நான் சொல்லவரவில்லை. மார்க்சியத்தை அதன் எல்லாம் வல்ல இடத்திலிருந்து கீழே இறக்கி, மற்ற பல பார்வைகளைப் போல அதுவும் ஒன்று என்ற நிலைக்குக் கொண்டு வந்துவிடும், அவ்வளவுதான்.

**மார்க்சியம் பொருள்முதல்வாதத் தன்னிறைவு பெற்றிருக்கவில்லை என்று சொல்கிறீர்கள். மார்க்சியமில்லாத பொருள்முதல்வாதவகைச் சிந்தனைகள் எப்போதும் இருந்து வந்திருக்கின்றன. அப்படி மார்க்சியத்தைவிட முழுக்க முழுக்க பொருள்முதல்வாதமாக உள்ள சிந்தனை ஒன்று எதையாவது நீங்கள் சொல்ல முடியுமா?**

லுக்ரீடியஸ் (Lucretius) ஒரு முழுமையான பொருள்முதல்வாதி. அவருடைய தத்துவத்தில் வரலாற்றின் இறுதி இலக்கு என்று எதுவும் இல்லை. அதனால், முழுமை எய்தக்கூடிய இறுதி எல்லை என்பதே இல்லை. ஆனால், மார்க்சியர்கள் பலருக்கு, வரலாற்றுக்கு இப்படியான இயல்திட்டமான (teleolgical) முடிவு என்பது மட்டுமில்லாமல், வரலாற்றுக்கு முற்பட்ட காலம் (pre-history) என்பதற்கும் ஒரு முடிவு என்பது இருக்க வேண்டும். இது அனைத்து ெகலின் வரலாற்று முழுமை என்கிற கருத்தாக்கமேயன்றி வேறில்லை. எல்லாவற்றையும் வெளிப்படையாகப் பேசவேண்டிய காலம் இப்போது வந்துவிட்டது. திரும்பவும் பொதுவுடமை உற்பத்தி முறைக்கு வாருங்கள். 'திறனுக்கேற்ற உழைப்பு, தேவைக்கேற்ற ஊதியம்' என்கிற முழக்கத்தை மார்க்ஸ் புனித சைமனிடமிருந்து அப்படியே எடுத்துக் கொண்டது ஏதோ தற்செயலான விஷயம் அல்ல. அதைக் கண்டுபிடித்தது மார்க்ஸ் இல்லை. கற்பனாவாத சோஷலிஸ்டுகளிலிருந்து அதை எடுத்துக் கொண்டார். இது ஒரு முக்கியமான விஷயம். ஏனென்றால், மேலோட்டமான ஒரு அலசலுக்குக்கூட முகங்கொடுக்க முடியாத மிகவும் பலவீனமான கருதுகோள் அது. அது என்ன, அந்த மாறாத தேவைகள்? மாற்றத்திற்கும் நீட்சிக்கும் ஆட்படாத என்றுமே மாறாத தேவைகள்? முரண்பாடுகளே மறைந்து போகிற 'உற்பத்தி முறை', என்ன அது? இதில் ஒன்று கூட மார்க்சியப் பார்வையின் முன்னே நிற்கக்கூட முடியாது.

மிக எளிமைப்படுத்தப்பட்ட மார்க்சியத்திற்கு எதிரான அற்புதமான ஒரு கோட்பாட்டு – வெறும் கோட்பாட்டளவில் மட்டுமில்லை – ஆயுதமாக இன்னொரு அர்த்தத்தில் தேசம் இருப்பது, மார்க்சின் வரலாற்று நிகழ்வின் ஒருமுகத்தன்மை பற்றி கருத்தாக்கத்தோடு தொடர்புடையது. இதுவும் ஒரு கருத்துமுதல்வாதக் கருதுகோளாகவே இருக்கிறது. வரலாற்றில் தேசம் என்ற கருத்தாக்கமே இருக்கக்கூடாது என்பதற்காகவே வடிவமைக்கப்பட்டது அது. வாழ்க்கை நிலைமைகளும் உற்பத்தி நிலைமைகளும் வரலாற்று ரீதியாக மெல்ல மெல்ல ஒருமுகத்தன்மை பெறும் என்கிற கருதுகோள் அது. வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், வந்து முக்கிய உற்பத்தி முறைகளின் ஊடாக மலரும் ஒருமுகப்பட்ட, நேர்கோட்டுப் பாதையிலான வரலாற்றுப் பரிணாம வளர்ச்சிப் பாதையில் மெல்ல, மெல்ல அழிந்துவிடுகிற, வித்தியாசங்களையெல்லாம் அழித்தொதுக்கும் அனைத்தும் தழுவியதன்மை என்கிற இந்ததக் கருத்தாக்கமே உண்மையில் ஒரு முதலாளிய பகுத்தறிவு ஆய்வுக் (bourgeois-analytic reason) கருத்தாக்கமாகும். மார்க்ஸ் (இன்னும் அதிகமாக எங்கெல்ஸ்) இவற்றை கான்டார்செட் (condorcot) டிடமிருந்தும் அறிவொளிக்காலச் சிந்தனை மரபிலிருந்தும் நேரடியாக எடுத்துக் கொண்டார்.

www.tamilarangam.net



உலகளாவிய வர்க்கமானது அதிகாரத்தை எடுத்துக் கொள்ளும்போது தொடர்வண்டிகளின் வலைப்பின்னல் தேசிய எல்லைகளை எல்லாம் அர்த்தமற்றதாக்கிவிடும் என்று மிக எளிமையாக எடுத்துக் கொள்ளப்பட்டது. ஏனென்றால் - புகழ்பெற்ற இந்த வாசகங்களை நீங்கள் அறிந்திருப்பீர்கள் - ‘அதற்கு இழைக்கப்பட்ட அநீதி ஒரு குறிப்பான அநீதி இல்லை மாறாக அனைத்தும் தழுவிய அநீதி அதனாலேயே, அது ஒரு அனைத்துத்தழுவிய வர்க்கம் பாட்டாளி வர்க்கம் எந்தக் குறிப்பான உரிமையும் கோரவில்லை’, இன்ன பிற.* ஆக, தேசிய எல்லைகள் எல்லாம் நொறுங்கி, சோவியத்துக்களின் சர்வதேசியக் குடியரசு அதிகாரத்தை எடுத்துக் கொள்ளும். மார்க்சியக் கனவின் என்ன அற்புதமான லெனினிய வரைவு!

இதையெல்லாம் போட்டு அலட்டிக்கொள்ளத் தேவையில்லை. மூலதனத்தின் ஆசிரியருக்கு மட்டும் நேரமிருந்தால் யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு அங்கீகரித்திருப்பார் என்று நாம் நம்பலாம். இருந்தாலும், மார்க்சின் எழுத்துக்களில் குறிப்பானதற்கும் அனைத்துத் தழுவியதற்கும் இடையில் ஒரு முரண் பல இடங்களில் எழுப்பப்படுவதை ஒருவர் பார்க்க முடிகிறது. குறிப்பானவற்றின் அழிவில்தான் மனித இனத்தின் பொதுமை எழும் என்கிற கருத்தையே அவர் கொண்டிருந்தார் என்று ஊகிக்கவும் இவை இடமளிக்கின்றன. உண்மையில், இங்கு ஒரு இயங்கியல் செயலாற்றுகிறது. நமது சமகாலத்திலேயே, ஒரு ஒருமுகத்தன்மையை நோக்கிய போக்கை நிகழச் செய்யும்படியாக, பொருளாதார உற்பத்தி மற்றும் பரிமாற்றத்தின் நிலைமைகள் மேலும் மேலும் ஒன்றை சார்ந்திருப்பவையாக மாறிக் கொண்டிருப்பதை, நம் கண் முன்னேயே நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், அதேநேரத்தில், பண்பாட்டுத் தனித்துவங்களும் பன்மடங்கு அதிகரித்துக் கொண்டுபோவதும் ஒரு இயங்கியல் எதிர்நிகழ்வாக எழுந்து கொண்டிருக்கிறது. பொருளாதார சமன்படுத்தலின் இணை நிகழ்வாக, தேசிய, பகுதி சார்ந்த (reginal) உரிமைகள் வலுவாக எழுவது தவிர்க்கவியலாததாக இருக்கிறது. வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், சமத்துவம் என்பது ஒருபோதும் ஒன்றுகலத்தல் (identity) ஆகிவிடாது. அடையாளம் (identity) குறித்த இயங்கியல் பார்வை, பன்முகத்தன்மையைக் கணக்கில் எடுத்துக் கொள்வதாக இருக்கும். எழுந்துகொண்டிருக்கும் ஒரு உலகளாவியத்தின் (globalism) மற்றொரு முகம் பண்பாட்டு அடையாளங்கள் மேலும் மேலும் சிதறுண்டு போவதாக, குறிப்பான அடையாளங்களுக்கான தேடலாக இருப்பதைத்தான் நாம் இன்று பார்த்துக் கொண்டிருக்கிறோம். இறுதியில், மார்க்சைவிட வரலாற்று யதார்த்தம் இன்னும் பொருள் முதன்மையானதாகவும் இயங்கியலானதாகவும் இருக்கிறது என்றே நினைக்கிறேன். ஒரு அர்த்தத்தில், கடந்த ஒரு நூற்றாண்டு காலமாக மார்க்சியத்தை வீழ்த்தியவையெல்லாம் அடிப்படையில் பொருள்முதன்மையானவை-யாகவே இருந்திருக்கின்றன. மார்க்ஸ் சுவீகரித்துக் கொண்ட ஏராளமான கருத்துமுதல்வாதம் பாரம்பரியத்தையெல்லாம் கழித்துவிடுவதற்கு இந்தப் படிப்பினைகள் உதவக்கூடும்.

இன்னொரு வகையில் பார்த்தால், மார்க்சியம் அரசியல் குறித்தோ பண்பாடு குறித்தோ எந்தவிதமான வரையறுத்த கோட்பாடும் இருக்கவில்லை என்பதும் ஒரு தற்செயலான விஷயமாகத் தோன்றவில்லை. ஏனென்றால், அரசியல், பண்பாடு இரண்டுமே இன்று நிலவும் தேசிய அரசுகளுக்குள் நிகழ்பவை. மார்க்சியம் அரசியல் என்பதற்கு தனியான ஒரு இடமே இல்லை என்பது தெளிவான ஒன்று - எவ்வளவு வெட்கத்துக்குரியது இது! அரசியல் அமைப்பு குறித்த எந்தக் கோட்பாடும் அவரிடம் இல்லை. அத்தகைய அமைப்பை அவசியமான ஒன்றாகக் காட்டுகிற கோட்பாடு கூட இல்லை. மார்க்சிடம் இடைவெளிகள் நிறைய

www.tamilarangam.net

இருக்கின்றன. மேலும், என்னுடைய கருத்தில், வெறும் இடைவெளிகள் என்பதற்கு மேலாக இருப்பவை எல்லாம் - அமைப்பிற்குள் (system) பொதிந்துள்ள நிஜமான முரண்பாடுகள் - எப்போதுமே தேசத்தோடு தொடர்புடைய பிரச்சினைகள். இந்தச் சிறிய இடைவெளியில், மார்க்சியத்தில் பேசப்படாத அனைத்தும் குவிந்து படிந்திருக்கின்றன. அப்புறம், பேசப்படாதவை பேசப்படுபவது தொடங்கும்போது, மற்ற எல்லாமும் சேர்ந்து வெடித்துச் சிதறுகிறது. இந்த அர்த்தத்தில், மார்க்சியம் கோட்பாடாகவும் சோசலிஷம் நடைமுறையாகவும் உள்ள அந்தப் பொதுத் திரளில் தேசம் என்பது அணுக்கருவை (atomic nucleus) போன்று இருக்கிறது என்று நினைக்கிறேன். எடுத்துக்காட்டாக, கடந்த நூறு வருடங்களில் நிகழ்ந்த எல்லாவற்றையும் எடுத்துக் கொள்ளுங்கள். இந்த நூற்றாண்டில் என்னதான் நிகழ்ந்தது? இனி நாம் இது பற்றி பேச ஆரம்பிக்கலாம். நான் சில அவசியமான முன்ஊகங்களை முன்மொழிந்து கொண்டிருந்தேன். இனி, நீங்கள் விரும்பினால், நாம் சற்று ஆழமான விரிவான கேள்விகளை எடுத்துக் கொண்டு, அவற்றுக்குப் பதில் தேட முடியற்சிக்கலாம்.

**Nouvel Observateue இதழில் வந்த உங்கள் கட்டுரையில், ஜாரிஸ்டு ஏகாதிபத்தியவாதிகளின் நட்புச் சக்திகள் என்று மார்க்ஸ் - எங்கெல்ஸ் கருதிய, செக்கெஸ்லோவாக்கியர்கள், க்ரோயோதியர்கள் மற்ற பிற தெற்கு ஸ்லோவாக்கியர்கள் குறித்த அவர்களுடைய தவறான கருத்துக்களை விமர்சித்திருந்தீர்கள். (சரியாகத்தான் என்று நினைக்கிறேன்) ஆனால், "செக்கெஸ்லோக்கியா மீதான படையெடுப்பு மரபான மார்க்சியத்தின் நேர்வழியில் வந்தது" என்று சேர்த்துக் சொன்னதில் நீங்கள் சற்று அவசரப்பட்டுவிடவில்லை? 1848ல் மார்க்சின் புரட்சிகர பிரச்சினைப்பாட்டிற்கும் 1968 ல் பிரஷ்னேவின் பிற்போக்கான நடவடிக்கைகள் காரணத்திற்கும் இடையில் உங்களுக்கு எந்த வித்தியாசமும் தெரியவில்லையா?**

தவறுதான், ஒப்புக் கொள்கின்றேன். விவாதத்தைத் தூண்டுவதற்காக சொல்லப்பட்ட சற்று மிகையான கருத்து அது. ஆனால் - இந்த 'ஆனால்' - க்கு கொஞ்சம் அதிக அழுத்தம் தர விரும்புகின்றேன் - நீங்கள் நன்றாக அறிவீர்கள் உண்மை என்னவென்றால், சுயநிர்ணயத்தை மார்க்ஸ் என்றுமே தன்னளவில் முழுமுதலான ஒரு கோட்பாடாக வைக்கவேயில்லை. எப்போதுமே அது அரசியல், பொருளாதாரச் சூழலைப் பொருத்ததாகவே இருக்கிறது. அதனால், ஜாரோடு நட்பாக இருந்த காரணத்தாலேயே ஒருவர் தெற்கு ஸ்லாவியர்களுக்கும் செக்கெஸ்லோவாக்கியர்களுக்கும் எதிராக இருக்க வேண்டும். ஆனால், ஹாப்ஸ்பர்கின்ழு 'தேசிய இனங்களின் சிறைக்கூடத்தை', இன்ன பிறவற்றை நொறுக்குவதில் முனைந்திருக்கும் மற்றவர்களுக்கு சுயநிர்ணயத்தை அங்கீகரிக்க வேண்டும். அப்படியென்றால், அமெரிக்காவின் மெக்சிக்கப் படையெடுப்பையும், அல்ஜீரியாவை ஃப்ரான்ஸ் காலணியாக்கியதையும், இந்தியாவை ப்ரிட்டன் காலனியாக்கியதையும் ஒருவர் ஆதரித்ததாக வேண்டும். ஏன்? ஏனென்றால், அவை பொதுவான நிகழ்வுப் போக்கைத் துரிதப்படுத்துபவையாக இருப்பதால். ஆகையால், தேசிய விடுலை என்பது மார்க்சுக்கு என்றுமே தனியான, இறுதியானதொன்றாக இருக்கவில்லை எப்போதுமே ஏதொவொன்றுக்கு கீழ்ப்பட்டதாக வைத்தே தீர்மானிக்கப்பட்டது என்பதை நீங்கள் ஒப்புக் கொள்ள நேரிடும். எதற்குக் கீழ்ப்படிந்து? பொதுவான நிகழ்வுப் போக்குக்கு அல்லது சர்வதேச பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கு. வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், பகுதி எப்போதுமே முழுமைக்கு கட்டுப்பட்டதாக இருக்க வேண்டும்.

1887 ல் எங்கெல்ஸ் எழுதிய மிகவும் அசாதாரணமாக அந்தக் கடிதத்தில் அவர் சொன்னது உங்களுக்குத் தெரியுமா? 'இந்த நேரத்தில் அல்சேஷியர்கள் எழுச்சி செய்தால் அது ஜெர்மனிக்கும் ப்ரான்சுக்கும் இடையில் ஒரு போரைத் தூண்டுவதாக இருக்கும். நாம் இந்தப் போரை விரும்பவிலலை. அது ஐரோப்பிய பாட்டாளி வர்க்கத்தின் நலன்களுக்கு எதிரானதாக இருக்கும்.'* என்று அதில் எழுதியிருந்தார். ஆக, அல்சேஷியர்கள் கிளர்ந்தெழத் துணிந்தார்களானால் அவர்களை ஒடுக்குவதற்கு எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். தேசம் என்பது பகுதி, இயக்க நலன்கள் முழுமை. பிரஷ்னேவ் அல்லது காஸ்ட்ரோ – உண்மையில் அது காஸ்ட்ரோதான், பிரஷ்னேவ் இல்லை –

www.tamilarangam.net

செக்கெஸ்லோவாகியாவில் நடந்து கொண்டிருப்பது நியாயமான விஷயம் இல்லை என்றாலும், முழுமையின் நலன்களுக்கான பகுதியின் நலன்கள் விட்டுக் கொடுக்கப்பட வேண்டும் (இங்கு இரு மாபெரும் சமூக அமைவுகளில் ஒன்றாக சோஷலிச சமூகங்களின் கூட்டமைப்பு நிலைத்திருப்பது என்கிற பொருளில்) என்றும் செக்கெஸ்லோவாகியர்களின் நியாயமான கோரிக்கைகள் குறுகிய கால நோக்கில் முதலாளியத்திற்கும் சாதமாகிவிடக்கூடும் என்றும் சொல்லும்போது, அது மார்க்சிய நோக்கில் உருவான மிகச் சரியான வாதம். இங்கு ஒரு பிரச்சினை எழுகிறது: முழுமையின் நலன்கள் எது, இந்த நலன்கள் எப்போது ஆபத்திற்குள்ளாகிறது என்பதையெல்லாம் யார் தீர்மானிப்பது? மார்க்ஸ் இதற்கெல்லாம் எந்த பதிலும் சொல்வதில்லை. ஏனென்றால், அவர் அரசியல் ரீதியாக சிந்திப்பதேயில்லை. பகுதிக்கும் முழுமைக்கும் இடையிலான முரண்பாட்டை சரியாகக் கணிக்கும் திறன் யாருக்குள்ளது என்பதை நாம் எப்படித் தீர்மானிப்பது என்கிற கேள்வி அவர் எழுப்புவதே இல்லை. இது பிரதிநித்துவம் பற்றிய, மையப்படுத்தலுக்கு எதிராக அதிகாரங்களைப் பரவலாக்குவது பற்றிய பிரச்சினை. ஆனால் அரசியல் குறித்த கோட்பாடு எதுவும் மார்க்சிடம் இல்லாததால் இதை அவர் நிராகரித்து விடுகிறார். ஆக, வடிவ நோக்கில் சொன்னால், பிரஷ்னேவின் காரணங்கள், 1887 இல் எங்கெல்சின் கருத்துக்கள், பொதுவில் மார்க்சின் கருத்துக்கள் (அயர்லாந்து குறித்த சில கூர்மையான பார்வைகள் தவிர்த்து) அனைத்தும் ஒன்றுதான்.

**இந்தப் பிரச்சினையை மிகவும் வடிவ ரீதியாக பார்க்கிறீர்கள் என்று நினைக்கிறேன் அதனால்தான் அந்தக் கேள்வியை வைத்தேன். வடிவ ரீதியாக ஒருவர் இத்தகைய ஒப்பீட்டைச் செய்ய முடியும். ஆனால், நான் அழுத்திச் சொல்ல விரும்புவது என்னவென்றால், வடிவத்தை விட்டு உள்ளடக்கத்தை எடுத்துக் கொண்டால், செக் பிரச்சினையில் மார்க்சின் நிலைப்பாட்டிற்கான (தவறான நிலைப்பாடுதான் என்பதை ஒப்புக் கொள்கிறேன்) நியாயம், அதில் அவருடைய அக்கறை. ஐரோப்பாவில் பாட்டாளி வர்க்க ஜனநாயகப் புரட்சி என்பதற்குக் குறைந்து வேறு எதுவும் இல்லை என்பதில்தான் இருக்கிறது. ஆனால் பிரஷ்னேவுக்கோ, கிழக்கு ஐரோப்பாவில் தனது அதிகாரவர்க்க அமைப்பு ஆதிக்கத்தைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்பதே உண்மையான நோக்கமாக இருந்தது. அதனால், வடிவ ரீதியான ஒற்றுமைகளைத் தாண்டி, உள்ளடக்கத்தில் மிகப் பெரிய அளவிலான வித்தியாசம் இருக்கிறது. உங்களுடைய வாதத்தில் நீங்கள் இதைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை.**

சரி, சரி. என்னுடைய வாதங்களை வடிவ ரீதியான பிரச்சினையோடு நிறுத்திக் கொண்டு விட்டேன் நான். அது தவறுதான். ஆனால், செக்கோஸ்லேவாகியா மீதான ஆக்கிரமிப்பைக் கண்டிக்கும் விஷயத்தில் ஒன்றுபட்டாலும் அதற்கான காரணங்களில் நமக்குள் எந்த ஒற்றுமையும் கிடையாது. அது அதிகாரவர்க்க அமைப்பையும் பேரரசுக் கொள்கையையும் விரிவுபடுத்துவதாக இருந்தது என்று நீங்கள் சொல்வீர்கள். ஆனால், நான் சோஷலிச அரசு, ஒரு தேசிய அடையாளத்தை நசுக்கும் ஒவ்வொரு முறையும் தோற்றுப்போவது முன்னதுதான் என்று சொல்வேன். இங்கு, வரலாறு நமக்குக் காட்டுவதெல்லாம், தேசத்திற்கு எதிராக நிறுத்தப்பட்ட பாட்டாளிவர்க்கம், இருப்புக்கு முன்னால் விறகுக்கட்டை போல, என்பதைத்தான். ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தோடு ஒன்றுகலந்த பிற்பாடுதான் அல்லது ஒரு தேசிய அடையாளத்திற்காக நின்ற போதுதான் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரங்கள் வேரூன்ற முடிந்தது என்பதை நவீன வரலாறு திரும்பத் திரும்ப நிரூபித்திருக்கிறது.

இதில், ரொம்பவும் நெருடலான மற்றொரு விஷயம், மார்க்ஸ் பாரீஸ் கம்யூனை அணுகிய விதம். பாரீஸ் கம்யுனின் வரலாற்றை மிக மேலோட்டமாக பார்த்தாலே, அதனுடைய மிக வலுவான தேசப்பற்று, ஏன் தேசிய வெறி தெளிவாகத் தெரியும். ஆனால், மார்க்ஸ் கம்யூனைப் பற்றிய தன்னுடைய புராணக் கற்பனைத் தன்மை வாய்ந்த அர்த்தப் படுத்தலை அவ்வளவு வலுவாக திணித்த விதம் - இன்று வரையிலும் அவருடைய அதே பார்வையிலேயே நாம் அந்நிகழ்வைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம் - இந்த அம்சம் சுத்தமாக மறைந்தே போய்விட்டது. ஒரு ஆக்கிரமிப்பாளனுக்கெதிராக வெடித்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தேசப்பற்று மிகுந்த எழுச்சி என்கிற அந்த அம்சம் சுத்தமாக துடைத்தழிக்கப்பட்டு விட்டது. ட்ரோச்சு* ம், ஜூல்ஸ் ∴பேவ்ரெடவும்* கம்யூன் ஆட்சியின் போது ஏன் தூக்கியெறியப்பட்டார்கள்? ஏனென்றால், அவர்கள் உண்டாக்கித் தந்த உடைப்பு மிகவும் பலவீனமாக இருந்தது் குறைந்த காலமே நீடிப்பதாக இருந்தது் மேலும் பாரீஸ் மீதான முற்றுகையையும் அவர்களால் முறியடிக்க முடியவில்லை. அதனால் - அந்த நீண்ட கதையை சுருக்கமாகச் சொல்வதென்றால் - எதிரியின் கையாட்கள் என்று குற்றம் சாட்டப்பட்டார்கள்! கம்யூனுக்கு இப்படியொரு மிகத் தீவிரமான தேசம் அம்சம் இருக்கிறது. ஆனால் இதை எந்தவொரு இடத்திலும் விவாதிக்கவே இல்லை.

நமது காலத்தில் நிகழ்ந்த சோஷலிசப் புரட்சிகளில் தேச விடுதலையோடு அல்லது தேசப் பாதுகாப்போடு தொடர்பில்லாததாகத் தெரியும் ஒன்றே ஒன்று ரசியப் புரட்சி மட்டும்தான். ஆமாம், ஆனால் எத்தனை காலத்திற்கு? 1919 -ம், 1941- க்குப் பிறகும் நிகழ்ந்த தேசப் பாதுகாப்புப் போராட்டங்கள்தான் போல்ஷிவிக் கட்சி வெகுமக்களின் ஆதரவைப் பெறுவதற்கு உதவியவை. இந்த இரண்டு விடுதலைப் போர்களும் இல்லையென்றால், போல்ஷிவிசம் சோவியத் என்கிற அந்த சமூக உள்ளடக்கத்தோடு அவ்வளவு ஒன்றாகக் கலந்திருக்க முடியும் என்று எனக்குத் தோன்றவில்லை. சீனா, க்யூபா, வியட்நாம் போன்ற மற்ற இடங்களைப் பொறுத்தவரை நான் எதுவும் விளக்கத் தேவையிருக்காது என்று நினைக்கிறேன்.

அதனால், ஒரு தீவிர சாத்தியத்தைச் சொன்னால், என்னைப் பொறுத்தவரை ஒரு தேசிய அடையாளம், ஒரு சோஷலிச அரசமைப்பின் மீது ஏற்றப்படுவது, அப்படியல்லாமல் இருப்பதைக் காட்டிலும் நல்லது. ஏனென்றால், இது சோஷலிச எதிர்காலத்திற்கு இன்னும் சில சாத்தியங்களைத் திறந்துவிடுகிறது. அப்படியல்லாமல் இதற்கு நேரெதிராக நிகழ்ந்தால் சோஷலிசம் தேசத்திற்கு அந்நியமான ஒன்றாகிவிடுகிறது. ஒரு பொதுவான தேசிய விடுதலைப் போராட்டத்தின், வெகுமக்கள் போராட்டத்தின் விளைவாக சோஷலிசம் உருவாகாத நாடுகளில் எல்லாம் நிகழ்ந்து கொண்டிருப்பது இதுதான். சோஷலிச ஏற்றுமதி செய்யப்பட்ட இடங்களில் எல்லாம் அது எப்போது வேண்டுமானாலும் உடைந்து நொறுங்கிவிடக் கூடியதாக இருக்கிறது. அதனால், சோவியத் வகைப்பட்ட அதிகாரத்துவ சோஷலிசத்தை விமர்சிப்பதைவிட செக் தேசியத்தை மிக உயர்வானதொரு மதிப்பாக வைப்பது, வார்சோ ஆக்கிரமிப்பு ஒப்பந்தத்தைழு என் உள்ளுணர்விலேயே நிராகரிக்க வைக்கிறது.

**Le Nouvel Obsuratere –இல் மேற்கில் மார்ஷலின் (ஸ்டாலின்) வறட்டுக் கோட்பாட்டு அசட்டைத்தனம் புடாபெஸ்ட், ப்ரேக் இவற்றைப் போல இன்னும் நிறைய இழப்புக்களைத் தருவதாக இருக்கும்" என்று எழுதியிருந்தீர்கள். புடாபெஸ்ட் (1956)இ ப்ரேக் (1968) சம்பவங்களுக்கு ஸ்டாலின் மற்றும் அவருடைய சிஷ்யர்களுடைய வறட்டுத்தன்மை காரணமாகச் சொல்வீர்களா அல்லது அவர்கள் ரசியப் பெருந்தேசியத்திற்கு உகந்த வகையில் தமது வறட்டுக் கோட்பாட்டை வரைந்ததைச் சொல்வீர்களா?**

இது பற்றி முடிவான கருத்து எதற்கும் இன்னும் நான் வரவில்லை என்பதைச் சொல்லிவிடுகிறேன். அது இரண்டும் மயங்கிக் கலந்தது போலத் தெரிகிறது. ஸ்டாலினியத்தின் வறுமைக்குக் காரணமாக இருந்தது – நீங்கள் ஆட்சேபிக்கவில்லையென்றால், அதன் மூன்றாந்தர தேசியவாதம் என்று சொல்வேன். அதாவது, 1924 – 8 வாரிசுரிமைப் போராட்டத்தின் போது, ரசிய வெகுமக்களின் பின்தங்கிய நிலைமையோடு ஸ்டாலின் தன்னை அடையாளப்படுத்திக் கொண்ட விதத்தைச் சொல்கிறேன். ஆனால், தன்னை அடையாளப்படுத்திக் கொண்ட விதத்தைச் சொல்கிறேன். ஆனால், ட்ராட்ஸ்கி உணர்வுப்பூர்வமான சர்வதேசியத்திற்காகவும் தொழிற்துறை சார்ந்த முன்னணிப்படைக்காகவும் நின்றார். அதோடு, பஞ்சமும் போரும் ஏராளமான பேரை பலிவாங்கிவிட்ட சூழலில், சோர்ந்துபோயிருந்த வெகுமக்கள், புரட்சி போதும் என்கிற மனநிலைக்கு வந்துவிட்டிருந்தனர். ட்ராட்ஸ்கிக்கு எதிரான ஸ்டாலினின் பெரிய பலம் நீங்கள் சொல்கிற அவருடைய ரசியப்

பெருந்தேசியவாதம் என்பதில் சந்தேகமேயில்லை. இடதுசாரி எதிர்ப்புக் குழுவை முறியடிக்க உதவிய அவருடைய பலமான அம்சமே அவருடைய பலவீன அம்சமாகவும் இருந்தது் அதாவது, அதனுடைய குறுகிய தன்மை, தேசிய வெறியைச் சொல்கிறேன். என்றாலும், ஹங்கேரிய, செக் எழுச்சிகளின் காரணங்களைப் பற்றிய அலசலுக்குள் நாம் இங்கு மூழ்கிவிடத் தேவையில்லை. அவை குறித்து எனக்கு அதிகம் தெரியா: மேலும், அவை இங்கு நமது பொருளும் இல்லை.

**இல்லை. அது பிரச்சினை இல்லை. மார்க்சியத்தின் நம்பிக்கைகள் (புடாபெஸ்ட், ப்ரேக் போன்ற) தோல்வியுற்றதற்கு நீங்கள், தேசியப் பிரச்சினையை கவனத்தில் கொள்ளாத ஒரு வறட்டுக் கோட்பாட்டைக் காரணமாகப் பார்க்கிறீர்கள். ஆனால் நான் இதற்கு நேரெதிரான ஒரு பிழைதான் இந்தத் தவறுகளுக்கெல்லாம் காரணம் என்று பார்க்கிறேன். அதிகப்படியானதொரு அருவமான சர்வதேசியவாதமல்ல, மாறாக, மற்ற தேசங்களை ஒடுக்க விழைந்த ரசியப் பெருந்தேசியவாதம் தான் காரணம் என்று பார்க்கிறேன். இதற்கு எதிராகத்தான் இந்த தேசங்கள் மிகச் சரியாகவே கிளர்ந்து எழுந்தன. அதனால், என்னுடைய வாதம் உங்களுடையதோடு நேராக முரண்படுகிறது.**

தேசியப் பிரச்சினை குறித்த ஒரு கறாரான பார்வை எதுவும் இல்லாமல் ஒருவர் சர்வதேசியம் குறித்த எந்தத் தெளிவான வரையறுப்பும் வைத்திருக்க முடியாது என்பது மிகவும் சாதாரணமான ஒரு உண்மை.

---

நிறைவு அடுத்த இதழில்

---


## உயிர்மெய்


இம்முறை உயிர்மெய்யின் பிரேத்தியே வெளியீடாக வெளிச்சத்தில் பேசுவோம் எனும் மறுபிரதி வெளியாகியுள்ளது. மகேஸ்வரி வேலாயுதத்தின் படுகொலையூடு தொழிற்பட்ட சாதிய விவகாரங்களை தோலுரித்துகாட்டும் ஜீவமுரளியின் கட்டுரையும்,


என்.சரவணன் தாக்கப்பட்டதன் பின் எழுந்த கண்டனங்களும, எழுப்பப்படாத கண்டனங்களின் பின்னணியில் இயங்கிய சாதிய உள்நோக்கங்களை ஆராயும் ஜீவ முரளியின் கட்டுரையும், வெளியாகியுள்ளது.

உயிர்மெய் ஆசிரியர்களான பானுபாரதி, தமயந்தி ஆகியோரின் கண்டனக் கட்டுரையும் அதில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

உங்கள் பிரதிகளுக்கு தொடர்புகொள்ள

email: editor.uyirmei@hotmail.com



www.tamilarangam.net

பொருளாதார நெருக்கடியும், பொருளீட்டும் பொறுக்கிகளும் என்கிற ஒல்லாந்திலிருந்து கலையரசனின் கட்டுரை அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் வீழ்ச்சியை எளிமையாக அம்பலப்படுத்துகிறது. மார்க்ஸ் கூறியது போல முதலாளித்துவம் தனக்குத் தானே சவக்குழியை தோண்டிக்கொள்ளும் என்பதை நமது காலத்தில் காண்கிறோம்.

சுவிஸ்-தில்லை சமீபத்திய பெண் கவிஞைகளில் குறிப்பிடத்தக்கவராக தனது படைப்புகளுக்கூடாக வெளிக்கிளம்பிக்கொண்டிருக்கிறார். கலாவின் கவிதைகள் இரண்டில் கோணேஸ்வரிகள் கவிதை ஏற்கெனவே சரிநிகரிலும் வேறு இடங்களிலும் பதிவாகியுள்ளன. தேவை கருதி இங்கு மீண்டும் பிரசுரமாகிறது.

போரின் கருவியாக பாலியல் வல்லுறவு எனும் கட்டுரை காத்திரமான கட்டுரை. அக்கட்டுரையின் சுருக்கமான வடிவம் சரிநிகரில் ஏற்கெனவே வெளியாகியிருக்கிறது. அக்கட்டுரையின் விரிவான வடிவம் இங்கு சில மேலதிக துணைச் செய்திகளுடன் வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறோம். துரதிருஸ்டவசமாக அக்கட்டுரையை வெளியிடும் துணிச்சல் சில சஞ்சிகைகளுக்கு இருக்கவில்லை. காலம் பிந்தி அது பறையில் வெளிவருகிறது. நிலவும் ஆணாதிக்க சமூக அமைப்பில் அக்கட்டுரைக்கு என்றும் பெறுமதியிருக்கிறது.

தோழர் பொன் கந்தையா பற்றிய டென்மார்க் - கரவைதாசனின் கட்டுரை நீண்ட காலமாக அவரிடமிருந்து எதிர்பார்க்கப்பட்ட கட்டுரை. பொன் கந்தையா பற்றிய விரிவானதொரு பதிவு இது. அதன் தொடர்ச்சி அடுத்த இதழில் முடியும்.

ரெஜிஸ் டேப்ரேயின் பேட்டியை இந்தியாவிலிருந்து தோழர் வளர்மதி மொழிபெயர்த்திருக்கிறார். அதன் அளவு காரணமாக இரண்டு இதழ்களில் அதனை பிரசுரிக்கிறோம். சேகுவேராவுடன் பொலிவியாவில் பணியாற்றிய பிரேஞ்சு மாக்சிய அறிஞரான அவர் தற்கால தேசிய இனப்பிரச்சினையை விளங்கிக்கொள்ள எளிமையான தத்துவார்த்த விளக்கத்தை பேட்டியில் தருகிறார்.

குறுகிய காலத்தில் பறையின் அடுத்த இதழையும் வாசகர்களிடம் சேர்த்து விடுவோம்.

பறையின் தொடர்ச்சிக்கு உங்கள் ஆதரவினை தொடர்ந்தும் வழங்குமாறு உங்களை கேட்டுக்கொள்கிறோம்.

-பறை

தொடர்புகளுக்கு

PARAI
C/o Fri Media Norway
Post Box 362
1301 Sandvika
Norway

frimedianorway@gmail.com
www.frimedianorway.com

ISSN 1502-8771

பிரதம ஆசிரியர்
என்.சரவணன்

நிர்வாக ஆசிரியர்
வரதன்

www.tamilarangam.net

# சிந்தனைக்கு ஒரு புகைப்படம்



**D.C. Senanayake, D.S. Senaanyake, F.R. Senanayake:**
The three children of Spaeter Senanayake, who was an owner of graphite mines, a planter and arrack renter. D.C., the eldest, was called 'Colombo John' due to his interest in the business activities of the family. The second, who was not interested in any educational activities or any business activities and was considered a waster of time, was called 'Wild John'. F.R., who returned after an education abroad, was called 'London John'. All the three were arrested during the Sinhala-Muslim riots of 1915 and detained for 45 days.

**நன்றி** The Tale of the Crisis - Ravaya publication

1502-8771